CONNEMARA PUBLIC LIBRARY
1962
MADRAS

தமிழ் வாழ்க.

துணர் ௩௮. மலர் ௧, ௨.

தமிழ்ப் பொழில்

சுபகிருது - சித்திரை - வைகாசி

1962

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்டம்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. திரு. வித்துவான் க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௩௮ — மலர் க, உ

பக்கம்

1. விஞ்ஞானமும் தமிழும்
திருவாட்டி, மேனகை அம்மையார், இராணிப்பேட்டை 1

2. குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே
சு. குமாரசாமி, தமிழ்ப் பேராசிரியர், புதுவை 10

3. ஆரிய மொழிகளில் திராவிடமொழி இயல்புகள்
வெ. திருஞானசம்பந்தன் எம். ஏ., எல். டி., 24

4. வள்ளுவர் ச. பாலசுந்தரம் 33

5. திருவள்ளுவர் கொண்ட மொழியமைப்பு
புலவர் மி. மு. சின்னசாமி. 39

6. அறிவன் கோயில்
வித்துவான் சி. கோவிந்தராசனர்,

7. இலக்கியத்தில் அவலம் 43
உ பழநி, எம். ஏ., பி. ஓ. எல். விரிவுரையாளர் 48

8. தமிழில் பாயிரம்
வித்துவான் சொ. சிங்காரவேலன் பி. ஏ., 62

தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௩௮.

சுபகிருது

1962 - 63

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

உள்ளுறை.

சுபகிருது　　துணர் ௩௮.　　மலர் க—கஉ

1962—63　　பக்கம்

1 விஞ்ஞானமும் தமிழும்
திருவாட்டி, மேனகை அம்மையார் 1

2 குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே
திரு. சு. குமாரசாமி, தமிழ்ப் பேராசிரியர். 10

3 ஆரிய மொழிகளில் திராவிட மொழி இயல்புகள்
திரு. V. திருஞானசம்பந்தன், பி.ஏ., எல்.டி., 24

4 வள்ளுவர்
ச. பாலசுந்தரம் 33

5 திருவள்ளுவர் கொண்ட மொழியமைப்பு
புலவர் மி. மு. சின்னசாமி 39

6 அறிவன் கோயில்
வித்துவான் சி. கோவிந்தராசனர் 43, 91, 207

7 இலக்கியத்தில் அவலம்
திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். 48

8 தமிழில் பாயிரம்
வித்துவான் சொ. சிங்காரவேலன், பி.ஏ., 62, 98

9 பூங்குன்றன் அறம்
திரு. தி. நா. அறிவு ஒளி. 65

10 திருமூல நாயனர்
திரு. த. இராமநாத பிள்ளை, பி.ஏ., (லண்டன்) 74

11 பாரதி கண்ட தெய்வம்
ச. பாலசுந்தரம் 80

12 ஒன்பது
புலவர் திரு. எஸ். நடராசன் 95

13 காந்தியடிகள் கருத்து
திரு. அ. இராமமூர்த்தி, எம்.ஏ., பி.டி., 102

14 தொல்காப்பியத் தமிழ் உவமை
திரு. இர. குழந்தைவேலு, பி.ஏ. (ஆனர்சு) 105

15 தமிழக வரலாற்று இடர்ப்பாடுகள்
திருவாட்டி, மேனகையம்மையார் 109

16 மதிப்புரை 119

17 தமிழ் இலக்கியத்தில் நாவல்கள்
திரு. ஏ. சுப்பிரமணியம் 120, 188

18 தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் வரலாறு
திரு. சிவ. சண்முகசுந்தரம், கரந்தை 129
19 தமிழவேள் த. வே. உ. பிறந்தநாள் விழா 149
20 தமிழவேள் த. வே. உ. தனிமாண்பு—(ந. மு. வே.) 158
21 மெய்ப்பொருள்
வித்துவான் வை. தட்சிணாமூர்த்தி 161
22 உருவெளித் தோற்றம்
வித்துவான். தெ. ப. சின்னசாமி 165
23 பாரதியாரும் தமிழ் மொழியும்
ச. பாலசுந்தரம் 169
24 அது—இது
திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். 178
25 சிறுகதை
வித்துவான் ந. செகதீசன் 190
26 நடனத்தில் ஓவியம்
திரு. தி. நா. அறிவுஒளி 196
27 வள்ளுவர் வகுத்த கேண்மை
திரு. வீர. மெய்யப்பன், பி. ஏ. 211
28 கானகநாடன் சுனையில் 215
29 விழுப்பம்
புலவர் நடேச நாராயணன் 219, 240
30 தமிழகத்திற்கப்பால்
திரு. கே. ஜி. கிருஷ்ணன், எம்.ஏ., பி.டி. 225
31 திறனாய்வு
திரு. கோவைகிழார் 229
32 பிள்ளை — ச. பாலசுந்தரம் 232
33 இளங்கோவின் கோவலன்
திரு. கு. சிவமணி, எம்.ஏ., பி.டி. 233
34 அமெரிக்க இந்தியர்
திரு. த இராமநாத பிள்ளை, பி.ஏ. (லண்டன்) 241
35 இல்வாழ்க்கை
திரு. அ. த. ப. திருஞானசம்பந்தன் 247
36 புறப்பொருள் வெண்பாமாலையில் வரலாறு
திரு. தி. நா. அறிவு ஒளி 251
37 இராசேந்திரசோழநல்லூர் வாய்க்காலும், கல்வெட்டும்
வித்துவான் சி. கோவிந்தராசனார் 274

38 புடமிட்ட பொன் மதுரை
திரு. K. S. மகாதேவன், எம்.ஏ., பி.எஸ்சி. 278
39 ஒரு சொல்
சாலை இளந்திரையன் 286
40 ஊருணி
மருதூர் மணிவண்ணன் 290
41 உயர்வு நவிற்சியோ
தமிழ்தோய் இளைஞன் 294
42 அருமையும் பெருமையும்
புலவர் வி. சச்சிதானந்தம் 301
43 ஆதிமந்தி (கவிதை நாடகம்)
ச. பாலசுந்தரம் 309, 348, 372
44 இராமகுப்தன்
திரு. M. இரகுபதி, எம். ஏ., 321
45 வாழ்வு இலக்கியம்
திரு. தி. நா. அறிவு ஒளி 324
46 சரபோசி செய்த பெருவேள்வி
வித்துவான். சி. கோவிந்தராசனார் 328
47 பாலையும் பட்டினமும்
புலவர். மு. சுந்தரேசன் 331
48 உடம்படுமெய்
பண்டித. மு. பெருமாள் – புதுவை. 337
49 மெய்ப்பொருள்
திருவாட்டி. மேனகை அம்மையார் 341
50 கம்பன் காட்டிய இராமன்
திரு. V. இராசமாணிக்கம் எம். ஏ., 344
51 அவல வீரர்கள்
திருவாட்டி, R. சிவானந்தவல்லி அம்மையார் எம். ஏ., 345
52 விழாக்கள் (க. த. ச.) 347
53 காப்பியமும், கருத்தும்.
தி. நா. அறிவு ஒளி 353

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

CONNEMARA PUBLIC LIBRARY 24 JUL 1962 MADRAS

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௩	மலர்
௩௮	சுபகிருது, சித்திரை, வைகாசி. 1962 ஏப்ரல், மே, ஜூன்.	௧, ௨

விஞ்ஞானமும் தமிழும்

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை.)

1. முன்னுரை

மலர்தலை யுலகத்து மன்னிய மாந்தர் மாண்புறு வாழ்க்கை நடாத்தற்குப் பல்வகையானும் பேருதவி புரிவது அவர்தம் மதி நலஞ் சான்ற விஞ்ஞானக் கலையேயாம். விரைந்த செலவு விழையின் விண்ணூர்தியும், சேய்மைக்கண் உள்ளா ரொடு சொல்லாட வேட்பின் தொலைபேசியும் அவரைக் கண்டு களிப்பான் கருதின் தொலைக் காட்சியும் பல்லிடத்துமுள்ள பல்வேறு மக்களும் ஒரே கூத்தினை ஒரே அமயத்துப் பார்த்து மகிழ்தரற்குப் படக் காட்சியும் ஏனைய பிரிவுந் தந்தது விந்தை மிகு விஞ்ஞானக் கலையே யன்றோ?

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என வரும் வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க, மேனாட்ட வர்தம் நுண்மாணுழைபுலஞ்சான்ற இவ்விஞ்ஞான ஆக்கங் கள் கீழை நாட்டவராலும் எய்தப்பெற்று பயன்தருவதா யுள்ளன.

இவ்விஞ்ஞானக் கலையை ஆங்கில மொழி வாயிலாகவே கற்றுத் தேர்வுறும் இளிவந்த நிலையிலேயே இன்றும் இன்றமிழ் நாட்டவருள்ளனர். இந்நிலைக்குக் காரணம் என்னை கொலோவெனின் நம் நாட்டகத்துள்ள விஞ்ஞானக் கலை வல்லுநர் மாட்டுக் காணலுறும் தமிழ்ப் பயிற்சிக் குறை பாடேயாமென்றுணர்க. என்னை? அவர் தம் கலைப் பயிற்சி யும், வினையாற்றலும், உரையாடலும்—மற்றும் அவர் தம் இல்லக் கருமங்களுங்கூட—நித்தலும் ஆங்கில வாயில்பெற்றே நிகழ்பவாயின. அவ்வண்ணம் வேற்று மொழிவாய்ப்பட்ட

அவர் அக் கலைபற்றியோ. வேறு நிகழ்ச்சி பற்றியோ தம் தாய்மொழியாந் தமிழில் சிந்தித்திடவும் சொல்லாடவும் வன்மை குறைந்து போயினர். இவ்வுண்மையினை ஓர்ந்துணர மாட்டாதார் சிலர் கலைச் சொற்கள் தமிழில் இல்லை; அவை தம்மை ஆக்கலும் அருமை யுடைத்து: என்று அவம்பேசித் திரிவாராயினர். தமிழ் தொன்றுதொட்டே தோற்றச் சிறப்போடு துலங்கிய திருவுடைத் தென்பதை மறுக்கிலேம். அதன் பெருமையும் பன்னுதற்கரிதே. ஆயினும் விஞ்ஞான விந்தை களை விளம்பும் விறல் அது படைத்திலது என்பதையும் ஒப்புக் கொண்டேயாதல் வேண்டுமென்று இவர் வாதம் புரிவர். "அதைக் சொல்லும் திறனும் தமிழினுக்கில்லை" யெனப் பேதை மகனொருவன் பிதற்றலாகப் பாரதியார் பாடியிருத் தலையும் ஈண்டுக் கருதுக.

தமிழ் மொழியில் விஞ்ஞானக் கலை யிடம் பெற்றது என்றேனும் உண்டுகொல் என ஐயப்படுவாருமுளர். எனவே வரலாறு தோன்றிய காலந்தொட்டே தமிழகம் விஞ்ஞானக் கலையறிவில் வியத்தகு மேம்பாட்டுடன் மிளிர்ந்தியங்கியது என்பதை ஒரு சிறிது கூறுவானெடுத்துக் கொண்டதே இக் கட்டுரையின் குறிக்கோள் ஆகும்.

'அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே' யென்பது மணிவாசகம். எனவே உயிர்களின் அஞ்ஞானமகற்றும் நல்லறிவாகிய விஞ்ஞானம் என்ற சொற்கு மேலாயஅறிவு எனப் பொருள் கோடலே பொருந்துவதென்க. அவ்வறிவு தான் எந்திர (தொழில்) அறிவு, இயற்கை யறிவு, உளஅறிவு, உடலறிவு என்பன போன்ற பலகிளைகளையுடைத்து.

2. எந்திர (தொழில்) அறிவு.

இற்றைநாள் நாம் கண்ணுறும் விண்ணூர்திகள் அற்றை நாளிலும் நம் தமிழகத்தியங்கி வந்தன. இச்செய்தியை உறுதிப்படுத்தும் சான்றுகள் நம் தமிழ் நூல்களில் பரந்து கிடக்கின்றன. 'தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம் பியன்' எனச் சோழனொருவன் பெயர் பயிலப்படுவதும் இதனை உறுதிப்படுத்தும். இவ்வளவனைத்

"தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை"

எனச் சிலப்பதிகாரமும்,

"தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்"

எனச் சிறுபாணாற்றுப் படையும்,

"வீங்குதோள் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கு மெயிலுந் தொலைத்தவால்"

எனப் பழமொழியும் ஏனைய பிற நூல்களும் இவன் எயிலெறிந்த ஏற்றத்தை மறவாது போற்றி மொழிந்து செல்லல் காண்க. அன்றியும் வேறொரு சோழனைப்பற்றி

"விமானம் வானமிசை யுயர்த்த வவனும்"

எனக் கலிங்கத்துப் பரணி கூறுதலும் விண்ணூர்திகள் நம் பண்டைய தமிழகத்தே யிருந்தன வென்பதைத் தெளிக்கும். ஆயின் அவை இந்நாள் போன்று பெரும் அளவில் இல்லாது அருமையாக இருந்தன என்று கொள்ளலே ஏற்புடைத்தாம். காற்றினியக்கத்தினை வென்று தாம் விரும்பும் திசையில் கலங்களைச் செலுத்தத் தக்க கருவிகளுமிருந்தன வென்பதை

"வாத ராசனைப் பணிகொண்ட வவனும்"

என்ற தொடரினின்றும் உய்த்துணரலாம். விண்ணூர்திகளைப்பற்றித் தமிழ் நூல்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

மலைகளைப் பொடியாக்குந்திறல் பெற்ற உருள்களமைந்த தேர்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றினமைப்பை உற்று நோக்குமிடத்து இந்நாட் படையினர் நடத்தும் 'மலைகல்லி' (Tanks) நம் நினைவிலுறும்; அன்றியும் தேர்கள் இருபுடையும் சிறகமைந்தனவெனவும் அவை புரவி வேகத்தினுங் கடிதாய்ப் பறப்பன வெனவும் விண்ணூர்திகளைப் பற்றித் தமிழ் நூல்கள் நுவல்வனவாம். அன்றியும் கனலைக் கக்கும் எறிகணைகளை வீசி எதிரிகளை யழிப்பதோடமையாது நீரைப் பொழிந்து எதிரிகளை வெள்ளத் தழுத்தி அலமரச் செய்யும் எறிகணைகளை வீசும் விண்ணூர்திகளுமிருந்தன. இச்செய்தியை

"இருநி லத்திட ருடைபடு முருளன
இருபு டைச்சிற குடையன முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி
திவுளி முற்படி னிதுபரி பவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன வினையன
உயர்செய் மொட்டொடு மலரென நிறுவிய
ஒழித ரச்செரு வுறுபுன லுமிழ்வன
உலக ளப்பன விரதமு மருவியே"

எனக் கலிங்கத்துப் பரணி கூறுதல் காண்க. இதனைக் கற்பனை யெனக் கொள்வாருமுளர். அன்னார், கற்பனைக்கும் ஓர் வரம்புண்டென்னும் உண்மையை உணர்வதில்லை. தேரினியல்பிற்கு மாறுபட்ட நீர்மைகளை ஒரு புலவர் பெருமான் விதந்தோதுவதும் அதனைச் செவிமடுத்த அத்தேர்க்குடைய

அரசனும் அவனவைக்களத்தோரும் தடையொன்றுங்கிளப் பாது நன்றென்றிருந்தன ரென்பதுவுமே கற்பனையாம். என்னை? 'சங்கை எப்புறத்து ஊதுவது' எனப் புகழேந்தியார் பாடலுக்குத் தடையெழுப்பிய புலவர் வாழ்ந்த காலமன்றோ இது? அத்தகையோர் தேர் பறக்குமா எனத்தடை விதி யாரோ வென்க. எனவே ஒரு தேரினிடத்துச் சிறிதுங் காணப் படாத குணங்களைக் கற்பனைத் தேரேற்றிப் புலவரும் படைத்து மொழியார் அரசனும் இசையானென்றுணர்க.

அன்றியும் வளைந்து தானே பெய்யும் எந்திரவில் சமைத்த இயல்பும், கரிய விரலையுடைய குரங்கு போலிருந்து சேர்ந் தாரைக் கடிக்கும் பொறி செய்த பொற்பும், கல்லுமிழ்கவண், பரிவுறுவெந் நெய், பாகடு குழிசி, காய் பொன்னுலை, கல்லிடு கூடை இவை செய்த செயலும், தமிழர் தம் விஞ்ஞான அறிவிற்கெடுத்துக் காட்டுக்களாயமைவன. அன்றியும் தூண்டில் வடிவாகப் பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்கு நீங்கி மதிற்பற்றுவாரைக் கோத்து வலிக்கும் கருவியும், கழுக் கோல்போற் கழுத்திற் பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், ஆண்ட லைப்புள் வடிவாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொடு நிரைகளும், மாற்றார் மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறியும், மதிற்றலையினேறி ஞருடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பாற் செய்து வைத்த பன்றிப் பொறியும் ஏனைய பிறவும் விஞ்ஞானத்தின் விந்தை களேயாம். இக் கருவிகளின் விரிவினைச் சிலப்பதிகாரத்துள் அடைக்கலக்காதை கூறிச் செல்லல் காண்க. இதனை ஒட்டியே திருவிளையாடற் புராணங் கூறுதலையுமுணர்க.

அம்மட்டோ! இற்றைநாள் வேற்றூரின் கண் தங்க விழை வார் உணவு விடுதிக்குச் சென்று ஆண்டு கட்டணம் செலுத்தி ஓர் அறையில் தம் பொருள்களை யிட்டுப் பூட்டிடுவர். பின்னரே அவ்வூரின்கண் தாம் விரும்பும் இடங்களுக்குப் போகத் துணிவர். அஃதே போல் பண்டை நாளிலும் தமிழகங்காணற் பொருட்டாயும் வாணிகப் பொருட்டாயும் வேற்றுப் புலத்தார் ஈண்டு வந்து குழுமியிருப்பரன்றோ? அவர் தம் பொருள் களுக்கு அளவு, நிறை முதலிய இலக்கம் பொறிப்பித்து ஊரின் கண் உள்ள வெள்ளிடை மன்றத்தே விடுத்துச் செல்வர். அம் மன்றமோ வாயிலும் தாழக்கோலும் அற்றது. அன்றிந் தன்னைக் காத்து நிற்குங் காவலரையும் பெற்றிலது. அங்கு இடப்பட்ட பிறர் பொருளை வவ்வுவான் கருதி ஓர் வம்பமகன் ஆண்டுச் செல்வனேயானல் அப்பொருள் நிறைந்த பொதியை கழுத்துக்கடுக்க அவனைத் தலைமீதேற்றி ஊரைச் சூழ்விக்குமே யல்லாது அப்பொருளைக் கொண்டு செல்லவிடாத தந்திரம் நிறைந்த எந்திரம் அம்மன்றத்து வைக்கப்பட்டிருந்தது. இதனை

"வம்ப மாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்"

எனச் சிலம்பு செப்புகின்றது.

இற்றை நாள் குறிப்பிட்ட சில பிணிகளுக்கு மின்னலைகளை உடலிற் பாய்ச்சி பிணி நீக்கம் பெறுமுறை கையாளப்படுகிறது. பண்டை நாளிலும் இதே போன்று ஒளியலைகளை உடலிற் பாய்ச்சிப் பிணி தீர்க்கும் முறை நம் தமிழரால் கையாளப்பட்டு வந்தது. மருந்தூட்டவுண்டு பித்தேறினுரையும், நஞ்சுண்டு நலிவெய்தினுரையும், அரவின் வாய்ப்பட்டல மருவாரையும், பேய்க் கோட்பட்டாரையும் இவ்வண்ணம் ஒளியலைகளை உடலிற் பாய்ச்சி அந்நோய்களின்று அவர்கட்குய்தியளித்தன ரென்பதை

"வஞ்ச முண்டு மயற்பகை யுற்ருேர்
நஞ்ச முண்டு நடுங்குதுய ருற்ருேர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கட் கூளி கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கா னெடுங்க னின்ற மன்றமும்"

என்பதாலறியலாம். இவ்வாறு ஒளியலை பாய்ச்சுங் கல் நாட்டிய தமிழர் தம் பேரறிவினை என் சொல்லிவியப்பது?

அன்றியும் பெருங்கதையுள் தெய்வயானை போன்றே தொழில் செய்ய வல்ல எந்திர யானை இயற்றி அதனுல் உதயணனைச் சிறைபிணித்த கதையும், சீவகனது அன்னை மாற்ருரிடமிருந்து உய்திபெற மயிற்பொறி யிவர்ந்து வான்வழிச் சென்ற வரலாறும் நம் தமிழகம் வியத்தகு விஞ்ஞானப் பொறிகள் பலவற்றைப் படைத்திருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவன.

தமிழகம் இத்துணை ஆய்வுத்திறன் படைத்த தென்பிரேல் இந்நாள் அக்கருவிகளெல்லா மெங்குற்றன கொல்? அன்றி அவை தம்மை நாம் இழக்குமாறியன்ற தெங்ஙன் என வினவுவார்க்கு யான் என் சொல்லி ஆற்றுகேன்? பழந்தமிழர் பயின்ற 'யாழ்' வகைகளெங்குற்றன? அவர் பயின்ற நாடகத் தமிழ் தானெங்குற்றது? பல் பெருஞ் சுவைத்தாய்ப் பாமரரும் பரிந்து வேண்டும் பெற்றித் தாய இசையும் நாடகமுமே வேற்றுப் புலத்தார் விரித்த மயல் வலையில் சிக்குண்டு வீவுற்றன வெனில் செயற்கருமைய தாய் நுண்வினையானியன்

றதும் அவை தாம் செயவல்ல அறிவு சான்றோர் சிலரேயாயது மான இவ்விஞ்ஞானப் பொறிகளினிழப்புத்தான் ஓர் வியப்போ? அன்றென்க.

அன்றியும், பல தொழில் வல்லாரையும் பண்டைத் தமிழகம் படைத்திருந்தது. சீரைததைஇய வுடுக்கையினை முனிவர் ஏற்று வாழ்ந்த அக்காலத்தேயே பாம்புரித்தன்னவான் பூங்கலிங்கத்தைப் பாவையருடுத்து வாழ்ந்தனர். பட்டினும், மயிரினும் பருத்தியினும் வினைசெய் மாக்களும், கிழி, கிடையென்பவற்றால், புட்பம், வாடாமாலை, பொய்க்கொண்டை முதலிய உருச் செய்யும் வினையாளரும், கண்ணுள் வினைஞரும், மண்ணீட்டாளரும் ஏனையோரும் சிறந்திருந்தனர். இப்படிப் பண்டைத் தமிழகம் பல்தொழிலும் பல்கும் வளம் பெற்றிருந்தது.

3. இயற்கை யறிவு

விலங்கினின்றுந் தம்மை வேறு பிரித்துணர இயலாத நிலையில் வேற்று நாட்டினர் ஆற்றலற்றலமந்த நாளிலேயே பைந்தமிழ் மக்கள் விண்ணளக்கும் விறல் சான்ற மதிநலம் வாயப் பெற்றிருந்தனர் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்று பகரும் :—

"செஞ்ஞா யிற்றுச் செலவு
மஞ் ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே"

'செஞ்ஞாயிற்றினது வீதியும் அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்குந்திசையும், ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டு போய் அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இத்துணையுடையன என்று சொல்லும் கல்வியை யுடையோருமுளர்' என்பது மேற் பாடலின் உரை.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

என்று வான்பற்றிய வாழ்வியலறிவோடு தமிழர் தம் இயற்கை அறிவு அமையாது இதனையுங் கடந்த நுண்ணிதாய ஆய்வுத் திறன் படைத்திருந்தது என்பதை

"நெடுங்கடலுந் தண்ணீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்"

எனவரும் குறள் விளக்கி நிற்றல் காண்க. நெடுங்கடலின் குன்றிய நீர்மையாவது நீர் வாழுயிர்கள் பிறவாமையும் மணிமுதலாயின படாமையுமெனத் தேருங்கால் நம் ஆன்றோர் இற்றைக் கிரண்டாயிரமாண்டுகட்கு முன்னரே படைத்திருந்த இயற்கை யறிவு மிகப் பரந்ததென்பது யாவரும் ஒப்பமுடிந்த தாகும். மழைத்துளி கடலில் வீழ்ந்து முத்தாகும் இதே செய்தி

"மிசைப்பெய்த நீர் கடற்பரந்து முத்தா குந்து"

எனப் புறநானூறும் பாடுதலை நோக்குக.

இனி, மரம், செடி, கொடிகட்கு உயிருண்டென்பதோர் உண்மையை உலகுக்குணர்த்தியமைக்காக இந்நாள் விஞ்ஞானக் கலைவல்லுநர்க்கு நோபல்பரிசு வழங்கப்பட்டதன்றோ? இதே உண்மையைத் தமிழ் நூல்கள் பன்னூருண்டுகட்கு முன்னரே பகர்ந்து வந்தன என்பது

"புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளை பிறப்பே"

என வரும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூற்றால் இனிது பெறப்படுகின்றது. புல்லும் மரனுமாய இவைகட்கு உயிருண்டென்பதோடமையாது அவை தாம் உற்றறியும் ஓரறிவினைத் தைச் சார்ந்தன வென்றும் பகுத்துப் போந்த நம் பண்டைய ஆசிரியன்மார்க்கு எப்பரிசு அமைவுடைத்தாகும்? இத்துணை விழுமிய நூல்களைப் பயிலும் மாந்தர் தாம் புலத்துறை முற்றிய அப்பேராசிரியன்மார் கூற்றில் உண்மை காண முயலாது அவர் தம் மொழிகள் இலக்கண மரபிற்றென்றும் கற்பனைத் திறத்ததென்றும் கருதி அவர் தம் பொருளுரைகளை ஏற்கவோ பரப்பவோ உளமின்றித் துயில்வாராயினர்.

நிலமென்னும் நல்லாளின் நீர்மை ஆய்ந்துணர்ந்த நம்மனோர் உழவிய லறிவின் உயர்வினைத்

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்னுங் குறள்கள் குன்றின் மேலிட்ட விளக்கெனக் காட்டுவன. 'அகல உழுவதினும் ஆழ உழு' 'ஆடிப்பட்டம் தேடி விதை' யென்பன போன்ற முதுமொழிகளும் உழவியலின்பாற்பட்டனவே. அன்றியும், மணி, பொன், குதிரை இவை பற்றிச் சிலப்பதிகாரமும் திருவிளையாடற் புராணமுங்

கூறும் இலக்கணங்கள் தமிழர் இயற்கைப் பொருள்களை ஊடுருவி ஆயும் இயல்பினர் என்பதைச் சுட்டுவன.

இலக்கண நூல்களில் வரும் ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப்பாய்த்து, பருந்தின் வீழ்க்காடு என்ற சொற்களும் இத்தன்மையனவே. அன்றியும் பொய்யான வுடலை 'மெய்' யெனப் பெயரிட்ட தமிழர் தம் பேரறிவினை எண்ணிப்பார்மின்.

4. உள அறிவு

உள விளக்கத்துக்கண் நம்மனோர் என்றும் தலையிடம் பெற்றுத் திகழ்கின்றனர். மேலை நாட்டவர் உள அறிவு புறத்தே நிகழும் வினைகட்குத் தொடர் புறுத்தும் எல்லையி லேயே இன்றும் அமைந்துள்ளது. நம்மனோர் ஆய்வு அகத்துக் கண்ணும் பயின்று அதனையுந் தன்வயமாக்கும் ஆற்றலோடு கூடியது.

உள விளக்கம் பயிலா நூல் தமிழில் இல்லை. இவ்வுள அறிவுதான் மிகப் பரந்ததொன்றாதலின் விரிவு வேண்டுவார் சான்றோர் நூல்களில் கண்டுகொள்க.

5. உடலறிவு

'அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப் புறந் தோல்போர்த்தெங்கும் புலவழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன் பது வாயிற்குடில்' என்ற யாக்கையின் நீர்மையினையும் 'நின்றா னிருந்தான் கிடந்தான் தன் கேளலறச் சென்றான்' என்ற அதன் நிலையாமையினையும் நன்குணர்ந்திருந்த தமிழர் யாக்கை யின் இன்றியமையாமையினையும் அறிந்திருந்தனர். உடம் பினுக்குள்ளே உறு பொருள் காணும் உணர்வு சான்ற அவர் 'உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று வாழ்ந்து வந்தனர். 'வைகறைத் துயிலெழு, கூழாயினுங் குளித்துக்குடி, கந்தையாயினுங் கசக்கிக்கட்டு' என்பன போன்ற மூதுரைகள் உடல்போற்றும் வகையுரைப்பானெழுந்தனவே.

காற்று, நீர், உண்டி ஆய மூன்றையு மளவறிந்து துய்ப் பான் பக்கல் நோய் அணுகாது என்பது இந்நாள் மருத்துவ நூலோர் முடிபு. இதனையே வள்ளுவப் பெருந்தகையாரும்

> "மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா வெண்ணிய மூன்று"

எனத் தெளித்துப் போந்தனர். இழிவறிந்துண்பான் கண் இன்பமும் கழிபேரிரை யான்கண் நோயும் உளதாதல்

அறிந்து அந்நோய் போக்கும் மருத்துவத் துறைக்கண்ணும் திருந்திய அறிவோடு தமிழர் திகழ்ந்தனர். மேலை நாட்டு மருத்துவம் பயின்ற இந்நாள் மருத்துவர் போல சுரங்கண் டார்க்கெல்லாம் ஒரே பெற்றித் தாய மருந்தை ஊசிக் குழல் மூலம் உடலிற் செலுத்தும் செய்கை அவர் செய்தாரல்லர். இஃது பேதைமைத்தென்றும் பெரிதும் தீது பயப்பதென்றும் கருதினர். எனவே 'நோய் நாடி நோய் முதனாடி அது தணிக் கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்ற நெறிபற்றி ஒழுகி வந்தனர். அல்லாமலும் உற்றானளவும் பிணி அளவும் காலமுங் கருதி மருந்தளித்து நோய் தணித்தனர். அவர் தாம் அறுவை மருத்துவத்திலும் புகழ் மிக்கிலங்கினர். அம் முறையில் அவர் பெரிதும் வெற்றியே கண்டனர் என்பதுணர்ந்து மகிழத் தக்கது. இதனை

"வாளா லறுத்துச் சுடினு மருத்துவன்பால்
மாளாத காத லேயாளன் போல்"

எனவரும் திருவாய் மொழியாற் பெறலாகும். அன்றி யும் மயிரினை நூறு கூறு செய்யும் நுண்ணிய கருவிகளையும் அவர்கள் பெற்றிருந்தார்களென்பது நம்மை இரும்பூதுறச் செய்யும். 'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்பதும் உடலோம்பும் திறமுணர்த்துவான் எழுந்தது.

'பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிரு நாளும் என்பது துணிபுற்றாங்கு, முந்நாளுங்கூடி உறையப்படுங் குற்றம் என்னே வெனின் பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்றகரு வயிற் றிலே யழியும் இரண்டாம் நாள் நின்றகரு வயிற்றிலேசாம். மூன்றாம் நாள் நிற்கும்கரு குறு வாழ்க்கைத்தாம்; வாழினுந் திருவின்றாம்; அதனாற் கூடப்படாது என்ப, எனவரும் இறை யனாரகப் பொருளுரை உடற் கூற்றிலக் கணத்தின் பாலதே. திருமந்திரத்துள் வருவனவும் உடற் கூற்றின் ஆய்வுரைகளே யாதல் காண்க.

6. பின்னுரை

விஞ்ஞானம் பயின்ற இந் நாட்டில் விஞ்ஞான முணர வேற்று மொழித்துணை எற்றுக்கு? 'சென்றிடுவீரெட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' எனப் பாரதி பாடிப் பல ஆண்டுகள் பறந்து விட்டன. விஞ்ஞானக் கலை தமிழாக்கம் பெற வற்புறுத்தப்பட்டும்—ரா. பி. சேதுப் பிள்ளை போன்ற பேரறிஞர்கள் சுட்டிக் காட்டியும்—அக்கலை இன்னும் தமிழாக்கம் பெற்றதில்லை. இனியேனும் விஞ்ஞானக் கலை வல்லுனர்கள் விழித்தெழுந்து இத்துறையில் பணி புரிவார் களாக

குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே.

இலக்கண நூலார் வெளிப்படையாகக் காலங்காட்டும் வினைச்சொல்லைத் தெரிநிலைவினையென்றும், குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லைக் குறிப்புவினையென்றும் கூறுவர். குறிப்புவினையென்னும் குறியீட்டையுடையது வினைச் சொல்லன்று பெயர்ச் சொல்லே என்பாரது கூற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் வினைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறுங்கால்,

"வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்."

—தொ. சொ. வினை. 1.

என்று கூறியுள்ளார். இந்நூற்பாவிற் காணப்படும் 'நினையுங் காலை' என்பதற்குச் சேனாவரையர், "வினைச்சொல்லில் வெளிப் படக் காலம் விளக்காதனவும் உள. அவையும் ஆராயுங்காற் காலமுடைய என்றற்கு 'நினையுங்காலை' என்றார்" என்று விளக்கம் தந்துள்ளார். இதனால் குறிப்பாகக் காலங்காட்டும் குறிப்புவினை உண்டென்பதும், அது தெரிநிலைவினையோடு ஒத்த நிலையினையுடைய தென்பதும் புலனாம்.

"இறப்பின் நிகழ்வின் எதிர்வி னென்றா
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே"

—தொ. சொ. வினை. 3.

என்னும் நூற்பாவில் சேனாவரையர், 'மெய்ந்நிலையுடைய வென்றது, விளங்கித் தோன்றாவாயினும் காலம் வினைக் குறிப்பொடு கோடல் மெய்ம்மையென வலியுறுத்தவாறு' என்று கூறியுள்ளார்.

"வினையெனத் (தொ. சொ. வினை. 1.) தொடங்கும் சூத்திரத்துள்ள 'நினையுங்காலை' என்றதற்கும், "இறப்பின்" (தொ. சொ. வினை. 3.) என்று தொடங்கும் சூத்திரத்துக் காணப்படும் 'மெய்ந்நிலையுடைய' என்றதற்கும் எழுதிய விசேடவுரையை நோக்குங்கால் அவர் குறிப்புவினையினும் காலமுண்டு என்னும் தமது கருத்தை வலியுறுத்தியுள்ளார் என்பது புலனாம்.

அற்றேல், "தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப் படுதலின் குறிப்" பென்று சேனாவரையர் கூறியதெற்றுக்கெனின் கூறுதும்: சேனாவரையர், தொழின்மை குறித்துக் கொள்ளப்படுதலின் குறிப்பென்றார் என்னாது 'தொழின்மை' தெற்றென விளங்காது' குறித்துக் கொள்ளப் படுதலின்' என்று கூறுவதனாலேயே தொழின்மை குறிப்பாக உண்டென்பது அவர் கருத்தாம். அதனால் குறிப்பாகக்காலம் உண்டு என்பதுறுதி.

"அதுச்சொல் வேற்றுமை" என்று தொடங்கும் (தொ. வினை. 213) சூத்திரத்து "அல்லதூஉம், வினைக்குறிப்பும் காலந் தோன்றுதலை இலக்கணமாகவுடைய வினைச் சொல்லே யாதலின் தெற்றென விளக்காவாயினும் காலமுடைய வெனவேபடும். பெயர்க்கு அன்னதோரிலக்கணமின்மையின், காலந்தெற்றென விளக்குவன வுளவேற் கொள்வதல்லது காலம் விளக்காத பெயரும் காலமுடையவென உய்த்துணரு மாறில்லை. அதனானுங் குறிப்பாற்கால முணர்த்துவன வினைக் குறிப்பே யென்பது பெறப்படுமென்க" என்று கூறியுள்ளார். இதனானும் சேனாவரையர் குறிப்புவினை காலமுடைத்து என்னும் கொள்கையர் என்பது புலனாம்.

"குழையை உடையான்" என்புழிக் குறிப்புவினை என்பது குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே என்பதை நன்குணரலாம். என்னை? இரண்டாம் வேற்றுமை வினைச்சொல்லைக் கொண்டன்றிப் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியாது. இதனை,

> "எல்லை யின்னும் அதுவும் பெயர்கொளும்
> அல்ல வினைகொளும் நான்கே ழிருமையும்
> புல்லும் பெருபாலும் என்மனார் புலவர்" —ந.பெ.319

என்னும் சூத்திரத்தால் நன்கு தெளியலாம்.

"இரண்டாகுவதே, ஐயெனப்பெயரிய" என்று தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்துச் சேனாவரையர், "அஃதேல், செயப்படுபொருளாவது வினைமுதற்றொழிற் பயனுறுவதாதலால் குழை முதலாயினவற்றிற்கு அவ்விலக்கணம் ஏலாமையிற் செயப்படுபொருளன்மையான் வினைக்குறிப்பெனல் வேண்டாவெனின்: அற்றன்று; 'அம்முக்காலமும் குறிப்பொடு கொள்ளும் மெய்ந்நிலையுடைய (தொ. சொ. 200) என்றாராக லின், குறிப்புச்சொல் காலமொடு தோன்றித் தொழிற்சொல் லாதலும் குழை முதலாயின தொழிற்பயனுறுதலும் ஆசிரியர் துணிபாகலின் அவையும் செயப்படு பொருளாமென்பது" என்று கூறுவதனாலும் குறிப்புவினை காலமுடைய தென்பது விளங்கும். நிற்க.

சேனாவரையர்,

" இரண்டாகுவதே,
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்று மதுவே" —(தொ. சொ. 71)

என்னும் சூத்திரத்து விசேடவுரையில், "ஆயின், செயப்படு பொருட்கட்டோன்று மெனவமையும். வினையே வினைக் குறிப்பெனல் வேண்டாவெனின், அங்ஙனங்கூறின் செயப் பாடினிது விளங்குஞ் சிறப்புடைத் தெரிநிலை வினைச் செயப்படு பொருளையே கூறினாரோ குறிப்புப் பொருளுமடங்கப் பொது வகையாற் கூறினாரோ வென்றையமாம், ஐயநீங்க வினையே வினைக் குறிப்பென்றாரென்பது" என்று கூறியுள்ளார். இதில் செயப்பாடு இனிது விளங்கும் சிறப்புடைத் தெரிநிலைவினை என்று கூறுவதனாலேயே, செயப்பாடு குறிப்பாகத் தோன்றும் குறிப்புவினை உண்டென்பதும், பொதுவகையாற் கூறினாரோ என்பதனால், வினைக் குறிப்பும் தெரிநிலை வினையோடு ஒத்த நிலையினையுடையது என்பதும் புலனாகும்.

அன்றியும், தொல்காப்பியர் பெயர்ச் சொல்லையே குறிப்பு வினையென்று குறியிட்டிருப்பாராயின், அதனைச் சேனாவரை யரும் குறிப்பிட்டிருப்பர். இதனை, இடையியலில் வந்துள்ள "எல்லே யிலக்கம்" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத் திற்கு உரைகாணும் பொழுது 'எல்' என்பது உரிச் சொல் நீர்மைத் தாயினும் ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமை யான் இடைச் சொல் என்று கோடும் என்பதனாலும் அறியலாம்.

"கற்று வல்லன்" என்புழிக் கற்று என்னும் வினையெச்சம் வினையைக் கொண்டு முடியாது பெயரைக் கொண்டு எப்படி முடியும்? கற்று வல்லன் என்னும் பொழுதே அதனைக் கேட் டோர் உள்ளத்துக் கற்று வல்லனாயினான் என்னும் பொருளே இனிது புலனாதல் ஒருதலை.

"கண்டனன் வணங்கினான்" என்பதிலுள்ள கண்டனன் என்னும் தெரிநிலை வினைமுற்று, கண்டு என வினையெச்சப் பொருளாகவும், "உண்டனன் சாத்தன் ஊருக்குப் போயினான்" என்பதிலுள்ள உண்டனன் என்னும் தெரிநிலை வினைமுற்று, உண்ட எனப் பெயரெச்சப் பொருளாகவும் வருதல் போலவே, "அவன் வில்லினன் வந்தான்" என்னும் இதிலுள்ள வில்லினன் என்னும் குறிப்பு வினைமுற்றும் வில்லினனாகி என வினையெச் சப் பொருளாகவும், "வெந் திறலினன் விறல் வழுதி யொடு" என்னும் இதிலுள்ள வெந்திறலினன் என்னும் குறிப்பு வினை

முற்றும் வெந்திறலினனாகிய எனப் பெயரெச்சப் பொருளாகவும் வருதலையும் நோக்குக. அவை பெயராயின், அங்ஙனம் பொருள்படா.

தெரிநிலை வினைச் சொற்களெல்லாம் ஏவலொருமை வடிவாக உள்ள வினையடியாகப் பிறப்பன, குறிப்பு வினைச் சொற்கள் வினையடியாகப் பிறவாமல் பொருளிடங் காலம் சினை குணந் தொழிலென்னும் அறுவகைப் பெயர்களின் அடியாகப் பிறப்பன, தெரிநிலை வினை குறிப்பு வினை யென்பன அடிச் சொற்களிலேயே வேறுபடுகின்றன, முன்னதுகாலம் பெற்று வரப் பின்னது பெறாது வருகின்றது. இத்துணை வேறுபாடு இருக்கும்போது இவை இரண்டும்வினைச் சொல்லின் வகைகளாக ஆதல் எவ்வாறெனின் கூறுதும்: பெயரடியாகவும் வினை பிறத்தலுண்டு. உதாரணம் பின்னர்க் காட்டப்படும். தெரிநிலை போல வினையடியாகப் பிறவாது பொருளிடங் கால முதலியவற்றினடியாகப் பிறந்து கால இடைநிலை பெறாது குறிப்பாகக் காலங்காட்டி வருவதனால்தான் குறிப்புவினை யென இலக்கண நூலார் குறியிட்டு வினைச் சொல்லின் வகையாக அடக்கினரெனக் கொள்க.

இங்ஙனம் தெரிநிலை குறிப்பு என வேறுபடக் கொள்ளும் தன்மையவேனும் வினைச்சொல் என்ற நிலையில் இவ்விரண்டும் அடங்கும் தன்மையன என்பதைக் குறிக்கவே வினையின் பொது இலக்கணங் கூற வந்த ஆசிரியர் தொல்காப்பியர் "வினையெனப்படுவது" என்று தொடங்கும் சூத்திரத்து 'நினையுங்காலை' எனக் கூறுவராயினர். 'நினையுங்காலை' என்பதற்குச் சேனாவரையர் கூறும் விசேடவுரையையும் நோக்குக. அதனை முன்னர் எடுத்துக் காட்டினாம்.

"பெயர்ச் சொல்லிலிருந்து வினைச் சொல் அமைதல் இல்லை, ஜி. யு. போப், லாசரஸ் முதலிய ஐரோப்பியர் தமிழைப்பற்றி யெழுதிய நூல்களில் சில பெயர்ச் சொற்களிலிருந்து வினைச் சொற்கள் அமைந்தனவாகக் காட்டுவனவும் பிரகாசம்—பிரகாசி, தியானம்—தியானி என வடசொற்களாகவே காணப்படுகின்றன. இவ்வாறு வழங்குதல் அருகிய வழக்கெனப் போப் அவர்களே கூறுகின்றார். சிறுபான்மையாகப் பெயர்ச் சொல்லிலிருந்து வினைச் சொல் பிறத்தல் வடமொழியிலும் ஆங்கில முதலிய மொழிகளிலும் உண்டு. அங்ஙனம் வருதல் தமிழில் இல்லை" என டாக்டர் மு. வ. கூறுவராலெனின், கூறுதும்; பெயர்ச் சொற்களிலிருந்து வினைச் சொல் உண்டாதல் வடமொழியில் மாத்திரமன்று. தமிழிலுமுண்டு. இதனைக் 'கடைக் கணித்தான்' என வருவதனாலும்,

> "பெயர்வினை இடைஉரி நான்கின் அடியாப்
> பிறக்கும் வினையெனப் பேசுவர் புலவர்"
>
> —இ. கொ. சூ. 68

எனச் சூத்திரம் செய்து பெயரடியாகப் பிறந்த வினைகட்கு "முதல், ஈறு, ஒற்று, அழுக்காறு இவை போல்வன எல்லாம் முதனிலை; முதலும், ஈறும், ஒற்றும், கொடுப்ப தழுக்கறுப் பான் இவை போல்வன எல்லாம் முற்று; முதலுதல், இறுதல், அழுக்கறுத்தல் இவை போல்வன எல்லாம் தொழிற் பெயர்; நாவலொடு பெயரிய பொலம், ஐயனெப் பெயரிய வேற்று மைக் கிளவி, அழகிய சொக்கர், முதலிய எழுத்து, இற்றபதம், ஞகாரை யொற்றிய தொழிற்பெயர், அழுக்கற்ற பாவி இவை போல்வன எல்லாம் பெயரெச்சம்; அகர முதலில் நிற்கும் னகரம் ஈற்று நிற்கும், மெய்களெல்லாம் ஒற்றி நடக்கும், அழுக்கற்ற கன்ருருமில்லை இவை போல்வன எல்லாம் வினையெச்சம்" என உதாரணம் காட்டி, "இங்ஙனம் ஐந்து வகையாய் வந்த வினையெல்லாம் பெயரடியாகப் பிறந்த வினை" எனச் சாமிநாத தேசிகர் கூறுவதனாலும் அறிக. மேலும் இடையுரி அடியாக வினை பிறந்தலுணடென்பதனையும் இச் சூத்திரத்தானறியலாம்.

"பெயர்ச் சொற்கள் கால இடைநிலை பெருமல் வருதலும், வினைச் சொற்கள் திணைபால் விகுதிகள் பெருமல் வருதலும் இயல்பாகும். உலகில் பெரும்பாலான மொழிகள் இவ்வாறு உள்ளன. தமிழிலும், வினையாலணையும் பெயரும் காலங் காட்டும் தொழிற் பெயரும் தவிர மற்றப் பெயர்ச் சொற்களில் கால இடைநிலை இல்லை; படர்க்கை ஒன்றன்பால் பலவின் பால் எதிர்கால வினைமுற்றுக்களில் (அது செய்யும், அவை உண்ணும்) திணைபால் விகுதிகள் இல்லை. பொன்னன், கரியர், நல்லது முதலாய சொற்களில் திணைபால் விகுதிகள் இருத்தல் கொண்டு, அவை குறிப்பு வினைகள் என்றும், உண்டனன், சென்றனர், இருந்தது முதலான தெரிநிலை வினைகளோடு ஒத்தன என்றும் கொள்ளல் பொருந்தாது. அண்ணன், புலவர், விழுது முதலாய பெயர்ச் சொற்களில் திணைபால் விகுதி இருந்தும் அவற்றைக் குறிப்பு வினையாகக் கொள்ளலாகாமையும் காண்க" என டாக்டர் மு. வ. கூறுவராலெனின் கூறுதும்: பெயர்ச் சொற்கள் கால இடைநிலை பெருமல் வருதலும் வினைச் சொற்கள் திணைபால் விகுதிகள் பெருமல் வருதலுமாகிய அவர் கூறிய பெரும்பாலான மொழிகளின் இலக்கணங்களோடு தமிழ் மொழியின் இலக்கணத்தை ஒப்பு நோக்கின், அவற்றினும் வேறுபடத் தமிழில் பெயர்ச் சொற்களில் வினையாலணையும் பெயர், காலங்காட்டும் தொழிற் பெயர் இவைகளில் காலங் காட்டும் இடைநிலைகள் உள்ளன என்பது புலனும். இது தமிழ்க்குத் தனிச் சிறப்பு. வினைச் சொற்களில் திணை பாலிடங்களைக் குறிக்கும் விகுதிகள் சிறப்புற அமைந்துள்ளன.

அது செய்யும், அவை உண்ணும்; இவை திணைபால் விகுதி பெறுதன என்று பல மொழிகளோடு இவற்றைச் சேர்த்துக் கூறுதல் பொருந்தாது. என்னை, இவற்றில் காட்டியிருக்கும் வினை, செய்யும் என்னும் பொது வினை. இன்னும் இது, அவன் உண்ணும் அவள் செல்லும் எனவும் வரும். தமிழில் வினைச் சொற்களே, பெயரினும் திணைபால் இடங்களைக் காட்டுவதில் சிறப்புடையன என்பது சான்றோர் கொள்கை. இதனைச் சங்கரநமச்சிவாயர்,

> "படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்
> பெறப்படும் திணைபால் அனைத்தும் ஏனை
> இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே." —ந. பெ. 8

என்னும் சூத்திரத்தில் "வினைமுற்றை முற்கூறினமையான் அவை,

> "இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
> ஈற்றினின் றிசைக்கும்......" (தொ. கி. 10)

விகுதிகளோடு பயின்று வருதலின் இருதிணை ஐம்பாற் பொருள்களை உணர்ந்து நெறியில் பெயர்களிற் சிறந்தன என் பதூஉம்" எனவும், சேனாவரையர் "வினையிற்றோன்றும்" என்று தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்தில், 'சிறப் புடைப்பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனான் ஐம் பால் உணர்த்துதற் சிறப்புடைய படர்க்கைவினை பற்றியோதி னரேனும்" எனவும் கூறுதலானும் அறிக. அன்றியும், தொல் காப்பியர் "னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்", "ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்", "அன் ஆன் அள் ஆ ளென்னு நான்கும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" முதலிய சூத்திரங்களால் விகுதிகளைக் குறிப்பிட்டு, இவ்விகுதி வினைச் சொற்கள் இன்னபால் (பாலைக் குறிக்கவே திணையும் விளங் கும்) இன்ன இடத்திற்குரியன எனக் கூறுவதனாலும், நன்னூ லாரும் அங்ஙனமே கூறுவதனாலும் நன்கு அறியலாம். நிற்க,

அவர்கள் கூறுவது போலவே, பெயர்வினைச் சொற்கள் இருக்க வேண்டும் என்னும் நியதி இல்லை. என்னை, உலகில் பெரும்பாலான மொழிகளில் இவ்வாறு உள்ளன என்று அவர்கள் கூறுவதனாலேயே, சில மொழிகளில் இந்நியதி இல்லை என்பது புலனாகிறது. வினைகளின் பொருளை அறிதற்கு இடையூறின்றிச் சிறப்புற மேலும் சில இலக்கணங்கள் ஒரு மொழிக்கு அமைந்திருக்குமானால் அவற்றை நீக்க வேண்டும் என்பது நியதியா? பலமொழிகளோடும் ஒப்ப இருக்கவேண் டும் என்று கருதுபவர் காலங்காட்டும் தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் ஏன் ஒப்புக்கொள்ள வேண் டும்? எனவே, அவை தமிழியல்பு என விடுக்க.

தெரிநிலைக்கே உரிய காலங்காட்டும் விகுதிகளும், குறிப்பிற்கே உரிய விகுதியும் நீங்கலாக, ஒழிந்த வினைமுற்றிற்குரிய விகுதிகள் தெரிநிலைக்கும் குறிப்பிற்கும் ஒப்ப உரியன. எனவே, தெரிநிலை வினைக்குரிய விகுதியையே பொன்னன் முதலியன பெற்றிருத்தலின், அவற்றைக் குறிப்புவினை என்றாரல்லரென்க. அன்றியும், குறிப்புவினை ஒன்றுண்டென்பதற்கு 'டு' என்னும் விகுதியே சான்றாதலை அறிக. இதனை,

> " துறுடுக் குற்றிய லுகர வீற்ற
> ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும்" —ந. வி. சூ. 8

என்பதனாலும்

> " ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
> குன்றிய லுகரத் திறுதி யாகும்" —தொ. சொ. சூ. 8

என்னும் சூத்திரத்தில் சேனாவரையர் "தகரவுகரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதலும், றகரவுகரம் இறந்த காலமும் வினைக்குறிப்புப் பற்றி வருதலும், டகரவுகரம் வினைக் குறிப்பே பற்றி வருதலுமாகிய வேறுபாடுடைமையால் குற்றியலுகரமென ஒன்றாகாது மூன்றாயின" என்று கூறுவதனாலும் நன்கறியலாம். எனவே, திணைபால் காட்டும் விகுதிகள் இருத்தல் கொண்டு குறிப்பு வினை என்றாரல்லர் என்பதுறுதி.

" பயனிலையாக நிற்கும் தெரிநிலை வினைமுற்றுக்கள் வேற்றுமை யுருபுகள் ஏற்பதில்லை எனலாம். வினையாலணையும் பெயராகவும் தொழிற் பெயராகவும் அமையும் சொற்கள் மட்டுமே வேற்றுமைகள் ஏற்பது காணலாம். அதனால் பயனிலையாக நிற்கும் சொற்கள் வேற்றுமை யுருபு ஏற்பதில்லை எனக் கொள்ளல் வேண்டும். இது பெயர்ச் சொற்களுக்கும் பொருந்துவது. பொன்னன், கரியர், நல்லது முதலான சொற்களும் பயனிலைகளாக நிற்குமிடத்து உருபு ஏற்பதில்லை, மற்ற இடங்களில் ஏற்கின்றன எனவும், அவர் கரியர், அது நல்லது, கரியர்க்குத் தந்தேன், நல்லதைக் கொண்டாள்" என உதாரணங்காட்டி, "ஆதலின் பயனிலையாக நிற்குமிடத்து வேற்றுமையுருபு ஏலாமை பற்றி, அவற்றைக் குறிப்பு வினை எனக் கொண்டு வினைச்சொற்பாற் படுத்தல் பொருந்தாது" எனவும் டாக்டர் மு. வ. கூறுவராலெனின் கூறுதும்: "ஆ பல" என்பதனுள், பல என்னும் பயனிலை வேற்றுமை யுருபேலாமையைக்கருதி அறிஞர் அதனை வினைக்குறிப்பென்று கூறினரல்லர். ஈண்டுப் பெயராகவே கூறியுள்ளார். இதனைப் "பொருண்மை சுட்டல்" (தொ. சொ. வே. 5) என்னும் சூத்திரத்துச் சேனாவரையர், எழுவாய்ப் பெயர்ப் பயனிலை கொண்டு முடிதற்குக்காட்டிய உதாரணத்தான் அறிக. எனவே, குறிப்பாகக் காலங்காட்டுவனவற்றையே குறிப்புவினை எனக் கூறினரெனக் கொள்க.

"எந்தச் சொல்லும் பயனிலையாக நிற்றலுண்டு. இது உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுவது" எனவும், பல எடுத்துக் காட்டுகளுடன் "தமிழிலும் பெயர்ப் பயனிலை உண்"டெனவும் கூறி, "அதனால் அவன் பொன்னன், அவர் கரியர், அது நல்லது முதலான வாக்கியங்களில் பயனிலையாக உள்ளவற்றைப் பெயர்ச் சொற்கள் என்றே கொள்ளலாம்; குறிப்புவினைகள் எனக் கொள்ளத் தேவையில்லை" எனவும் டாக்டர் மு. வ. கூறுவராலெனின் கூறுதும்: பொன்னை ஈட்டு கின்ற காரணத்தால் ஒருவனைப் பொன்னன் என்பது நிகழ் காலக் குறிப்புவினை முற்றே. ஓரளவிற்கு ஈட்டிவிட்ட காரணத் தால் பொன்னன் என்பது இறந்தகாலக் குறிப்பு வினைமுற்றே. இங்ஙனம் மூக்காலமும் கொள்ளப்படுதலின் பெயர் எனக் கொள்ளலாகாது. கரியர், நல்லது என்பனவும் அன்ன.

இராமன் என்னும் பெயரிய ஒருவன் பொருளீட்டிப் பொன்னுடையனாய பொழுது, இராமன் பொன்னன் என்று கூறினால் இராமன் பொன்னுடையன் ஆயினான் என்பதா? அல்லது இராமனவன் பொன்னன் என்ற வேறு பெயரை யும் உடையான் என்பதா? இராமன் இப்பொழுது பொன் னன் என்று கூறிக் காணின் அது நன்கு விளங்கும். ஒருவனுக் பிறந்த பொழுதே காரணங் கருதாது பொன்னன் எனப் பெயரிட்டிருப்பாராயின், அவனை நோக்கி அவன் பொன்னன் என்ற வழி அவன் என்பது பெயர்ப் பயனிலை கொண்டதே. பொருளீட்டிப் பொன்னுடையனாகிய இராமனை அவன் பொன் னன் என்ற வழிப் பொன்னன் என்பதை எப்படிப் பெயர் எனக் கூடும்?

சிவஞான சுவாமிகள் கூறுவதன்படி பகுதியில் பொருள் சிறந்து நிற்றல்பற்றி அவற்றைக் குறிப்பு வினையெனக் கொள்ளத் தேவையில்லை.

அவன் அண்ணன்
அவர் புலவர்
அது விழுது

அவற்றின் பயனிலைகளிலும் பகுதியில் பொருள் சிறந்து நிற் கிறது. அதுபற்றி அவை குறிப்புவினை[யா]மாறில்லை.

ஆகவே, குறிப்புவினையென இலக்கண நூலார் கூறுவன வற்றை வினைச் சொற்கள் எனக் கொள்ளாமல் பெயர்ச் சொற்கள் என்றே கொள்ளுதல் பொருந்தும் என டாக்டர் மு. வ. கூறுவராலோ வெனின், அது சரியன்று. இங்ஙனம் அவர்கள் கூறுதற்குக் காரணம் சிவஞான சுவாமிகள் தொல் காப்பியச் சூத்திர விருத்தியுள்,

எழுத்தெனப் படுப
லுகரமுத
னகர விறுவாய் முப்பஃதென்ப
சார்ந்து வரன்மரபின் மூன்றலங் கடையே

என்னும் சூத்திரத்தில் காணப்படும் "மரபின் மூன்று" என்பதற்குச் சொன்முடிபு கூறுங்கால் "மரபின வென்பது பாடமாயின், மரபினையுடையனவாகிய மூன்றென உரைக்க. மரபின என்பது மரபென்னும் பண்படியாகப் பிறந்த பெயர் எனக்கூறி, அற்றேல் வினைக் குறிப்போடி தனிடை வேற்றுமையாதோ வெனின், வினைக் குறிப்புச் சொல்லெல்லாம் தெரிநிலை போல் முதனிலையில் பொருள் சிறந்து நிற்கும். பெயர் சொல் அவ்வாறன்று விகுதியிற் பொருள் சிறந்து நிற்கும்" என்று கூறியுள்ளார். இதில் "பெயர்ச் சொற்கள் அவ்வாறன்றி விகுதியற் பொருள் சிறந்து நிற்கும்" என்ற பகுதியையே அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். இதில் குறிப்பிட்டுள்ள பெயர்ச் சொற்கள் வினைக் குறிப்புப் பெயர்ச் சொற்களேயாம். இதனை, அச் சொற்களுக்கு காரணம் காட்டும் பொழுது "உண்டான் வந்தான், உண்டானைக் கொணு" என்னும் தெரிநிலை வினையாலணையும் பெயர்களோடு "கரியான் வந்தான், கரியானைக் கொணு" எனக் காட்டியிருப்பதனால் நன்கு அறியலாம்.

இன்னும் இதனைச் சுவாமிகள் தாமே அடுத்து "இச் சொல்லியல்புணராது எழுத்தொப்புமையான் மயங்கி வினை வினைக்குறிப்பு முற்றுக்களே ஓசை வேறுபாட்டால் பெயராயிற் றென்பாருமுளர்" என்று கூறுவதனுள், வினை வினைக்குறிப்பு முற்றுக்களே என்பதனாலும் அறியலாம்.

அற்றாயின் சுவாமிகளே நடந்தான் குழையான் என்னும் வினை வினைக்குறிப்பு முற்றுச் சொற்களும் வேறு, நடந்தான் குழையான் என்னும் பெயர்ச் சொற்களும் வேறு என்று கூறுவதனுள், நடந்தான் குழையான் என்னும் பெயர்ச் சொற்களும் என்றாரல்லது, வினை வினைக்குறிப்புப் பெயர்ச் சொற்களும் என்று கூறிற்றிலராலெனின், கூறுதும்:- வினை வினைக் குறிப்பு முற்றுச் சொற்களும் என்று கூறி அவற்றிற்குதாரணம் நடந்தான், குழையான் என்று காட்டிப் பின்னர்ப் பெயர்ச் சொற்களும் வேறெனக் கூறி அவற்றிற்குதாரணம் நடந்தான், குழையான் என அச்சொற்களையே காட்டியிருப்பதனால் வினை வினைக்குறிப்புப் பெயர்ச் சொற்களே ஈண்டுச் சுவாமிகளால் குறிப்பிடப்பட்டன என்பது தெள்ளிதிற் புலனும். அன்றியும், ஒரு தன்மையாகக் கருதத் தக்க சொற்களுள் எழும் மயக்கத்திற்கே சுவாமிகள் விளங்கக் கூறியிருப்பரன்றி வேறு வேருன சொற்களுக்கு விளக்கங் கூறியிருக்கமாட்டார். நிற்க,

சுவாமிகள் நன்னூலில் "பொருளிடங் காலம்" (ந. ப.132) என்று தொடங்கும் சூத்திரவுரையில், இங்ஙனம் பொருளாதி யாறன் அடியாகத் தோன்றிய அவ்வினைக் குறிப்புப் பெயர்க் கும், வினைக் குறிப்பிற்கும் வேற்றுமையாதோ வெனின், வினைக் குறிப்புச் சொல்லெல்லாம் தெரிநிலை வினைபோல் முதனிலையில் பொருள் சிறந்து நிற்கும். வினைக் குறிப்புப் பெயர்ச் சொல் அவ்வாறன்றி விகுதியில் பொருள் சிறந்து நிற்குமென அறிக. எனவே, பொருளாதியாறும் காரணமாக வரும் பெயர்ச் சொற்கள் முதனிலை விகுதியாகிய அவ்விரண்டினும் பொருள் சிறந்து நிற்குமென உய்த்துணர்ந்து கொள்க. என்று கூறி யுள்ளார். இதில் வினைக் குறிப்புப் பெயர்ச் சொல் அவ்வா றன்றி விகுதியில் பொருள் சிறந்து நிற்குமென்பதைக் கவனித் தல் வேண்டும்.

மேலும் அதில் பொருளாதியாறும் அடியாகத் தோன்றிய என்பதே வினைக் குறிப்புப் பெயர் என்பதை விளக்கும். என்னை, வினைச் சொற்களைக் கூறுங்கால் (நடவா முதலிய வற்றின்) அடியாகத் தோன்றியன என்றல் மரபு. வினைக் குறிப்புப் பெயரல்லவாயின் பொருளாதி காரணமாக வரும் பெயர்ச் சொற்கள் என்றே கூறுவர். இதனை முன்னர் எடுத்துக் காட்டிய சுவாமிகள் கூற்றில் காண்க.

அற்றேல், சுவாமிகள் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுள் கரியான் என்பது வினைக் குறிப்புப் பெயர் என்பது விளங்கப் பண்படியாகப் பிறந்த பெயர் என்று கூறிற்றிலராலெனின் கூறுதும்.— மரபின என்பது பண்படி யாகத் தோன்றிய பெயர் என்று கூறி அதனை விளக்குவதற் காகக் கரியான் என்பதை யெடுத்துக் காட்டி விளக்கினர் என்றால் கரியான் என்பதும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப் பெயரே யன்றோ?

எனவே அண்ணன், புலவர், விழுது ஆகிய இச்சொற்களை எடுத்துக் காட்டிச் சுவாமிகள் கூற்றில் குறை கூறல் பொருத்த மன்று. அண்ணன் என்பது முறைப் பெயர். புலவர் என்பது ஒருவர்க்குப் பட்டப் பெயராய வழி அதுவும் பெயர்ச் சொல்லே. விழுது என்பது ஒரு பொருட் பெயராகும். ஆதலின் இக்காட்டுக்கள் ஈண்டு ஏலா.

"அவர் கரியர்
அவர் புலவர்

முன்னதில் கரியர் என்பது குறிப்புவினை என்றும், பின்னதில் புலவர் என்பது பெயர்ச் சொல் என்றும் கொள்வதில் பொரு ளில்லை" என்கின்றனராலெனின் கூறுதும்:— கரியர் என்ப வர், முன் செய்யராயிருந்து நோய் முதலிய காரணத்தால்

கரியர் ஆயவழி அவ்விடத்தில் ஆக்கம் உண்டு. ஆகவே அது வினைமுற்றே. அல்லது அக்கருமை ஒருவரிடத்து இயற்கையாகவே இருப்பின் அவர்க்குப் பிறந்த போதிட்ட பெயரை நோக்க அது குறிப்புவினை முற்றே. இதனை, இராமன் கரியன் எனக் கூறிக் காண்க. இதனை இலக்கண நூலார் இயற்கை வினைக் குறிப்பென்பர். நீர் தண்ணிது, தீ வெய்து என்பன அதனை வலியுறுத்தும். புலவர் என்பது (புலமை ஒருவரிடத்துப் பின் தோன்றியிருக்குமேனும்) பட்டப் பெயராயவழிப் பெயர்ச் சொல் என்பதில் தவறின்று.

"அது நல்லது
அது கல்

என்பவற்றிலும், நல்லது என்பதைக் குறிப்பு வினையென்றும், கல் என்பதைப் பெயர்ச் சொல் என்றும் கொள்ளல் பொருந்தாது. முன்னது திணை பால் காட்டும் விகுதியோடு அமைந்தது; பின்னது விகுதியின்றி அமைந்தது. இரண்டும் பெயர்ச் சொற்களே" என டாக்டர் மு. வ. கூறுவாராலெனின் கூறுதும் :— நல்லது என்று குறிக்கப்பட்ட பொருளிடத்தே உள்ள நன்மை, அப்பொருளிடத்தே அமைந்த நிலையை நோக்கும் பொழுது குறிப்பு வினையேயாம். கல் என்பதில் அங்ஙனம் கோடற்கு ஒன்றும் இன்று ஆதலின் அது பெயரேயாம்.

"இக்காலத்து மொழியாராய்ச்சியால் பெற்ற ஒரு தெளிவு, இத்தகு மாற்றத்தை அறவே போக்குகிறது. அதாவது : ஒரு சொல்லுக்குத் தனியே வடிவமும் ஒன்று உண்டு; அது வாக்கியத்தில் நின்று தரும் பயன்வகை வேறு ஒன்று உண்டு. ஒருவர் தனியே பெயரும் வடிவமும் உடையவராக இருக்கிறார். அவரே வாழ்க்கையில், சிலர்க்கு மகனாகவும் சிலர்க்குத் தந்தையாகவும், சிலர்க்கு அண்ணனாகவும், சிலர்க்குத் தம்பியாகவும், சிலர்க்கு நண்பராகவும், சிலர்க்குப் பகைவராகவும் இருக்கிறார். அதுபோல் ஒரு சொல்லே, வடிவத்தில் பெயராகவோ வினையாகவோ இருக்கலாம்; பயன்வகையால் அச் சொல்லே எழுவாயாகவோ பயனிலையாகவோ, பெயரடையாகவோ, செயப்படுபொருள் முதலியனவாகவோ இருக்கலாம்.

கல்	—	பெயர்ச்சொல்
கல் விழுந்தது	—	எழுவாய்
அது கல்	—	பயனிலை
கல் மனம்	—	பெயரடை
கல் எறிந்தான்	—	செயப்படுபொருள்
கல்லால் எறிந்தான்	—	கருவிப் பொருள்

இவ்வாறே ஏனைய பயன்வகைகளும் ஆய்ந்து கொள்ளலாம்.

ஆகவே, ஒருசொல் வடிவம் பற்றியும், பயன்வகை பற்றியும் வெவ்வேருக இருத்தல் இயல்பு எனக் கொள்ளல் வேண்டும். தெரிநிலைவினை குறிப்புவினை என்னும் பழைய குறியீடுகளால் மயங்குதல் கூடாது.

அவன் வந்தனன்

அவன் பொன்னன்

என்னும் வாக்கியங்களில், வந்தனன் என்பது வடிவத்தால் வினைச் சொல்; பயன்வகையால் பயனிலை. பொன்னன் என்பது வடிவத்தால் பெயர்ச்சொல்; பயன் வகையால் பயனிலை. இரண்டு வாக்கியங்களும் ஒரே வகையானவை; ஆயின் இரண்டிலும் உள்ள பயனிலைகள் வடிவத்தால் ஒரே வகையான சொற்கள் அல்ல. வந்தனன் என்பது வினைச் சொல்லாதலால் பொன்னன் என்பதும் வினைச் சொல்லாக இருத்தல் வேண்டும் எனக் கருதலும், அது காலம் காட்டாமை பற்றிக் குறிப்பு வினை எனக் கொள்ளலும் பொருந்தா. வினைச்சொல் பயன்படுதல் போலவே பெயர்ச் சொல்லும் பயன்படுதல் பற்றி, பெயர்ச்சொல் வினைச்சொல்லாகி விடாது" என்று டாக்டர் மு. வ. கூறுவராலெனின் கூறுதும் :- ஒருசொல் வடிவம் பற்றியும், பயன்வகை பற்றியும் வெவ்வேருக இருத்தல் இயல்பு எனக் கொள்ளல் வேண்டும் என்பது பொருத்தமுடையதே. ஆனல்,

அவன் வந்தனன்

அவன் பொன்னன்

என எடுத்துக்காட்டுத் தந்து அவன் பொன்னன் என்பதில் உள்ள பொன்னன் என்னும் குறிப்பு வினையைப் பெயர் எனக் கொண்டு, அவன் வந்தனன் என்பதிலுள்ள வந்தனன் என்னும் வினைச்சொல்போல் அது பயன் வகையால் பயனிலையாகப் பயன்பட்டது என்பது முறையன்று.

அவர் காட்டிய, அவன் பொன்னன் என்பதில் உள்ள பொன்னன் ஒருவர் பெயரைக் குறித்து வருமாயின் அது பெயர்ச் சொல்லே. அப்பொழுது அவன் என்பது பெயர்ப் பயனிலை கொண்டதாகும். பொன்னையீட்டுதலாகிய தொழின்மை அமைந்த சொல்லாயின், குறிப்புவினை முற்றே. முன்னதில் அன் பெயர் விகுதி; பின்னதில் அன் வினை விகுதி. இதனை நன்கு கவனித்தல் வேண்டும்.

" வந்த நண்பன்

அந்த நண்பன்

இவற்றுள் வந்த என்பது வினைச்சொல்லாதலால், அந்த என்பதும் வினைச் சொல்லாதலில்லை. இவை வடிவத்தால் வேறுபட்டுப் பயன்வகையால் ஒத்து நிற்கும் சொற்கள். முன்னது வினைச்சொல். பின்னது சுட்டு. இரண்டும் பெயர்க்கு அடையாகப் பயன்படுதல் காணலாம்'' என்று கூறுவராலெனின் கூறுதும் :- குறிப்பு வினையைப் பற்றிப் பேசவந்தவர், 'வந்த நண்பன்' என்பதில் வந்துள்ள வந்த என்பதற்கேற்ப, நல்ல நண்பன், இனிய நண்பன், கரிய நண்பன் என்றவற்றுள் ஏதேனும் ஒன்றை எடுத்துக் காட்டி, அக்காட்டுள் முதலிலுள்ள சொல் இன்ன சொல் அது வந்த என்பது போல் அடையாய்ப் பயன்பட்டது என்று கூறியிருப்பாராயின் பொருத்தமுடையதாகும். அங்ஙனம் எடுத்துக் காட்டின் அவர் அதைக் குறிப்புப் பெயரெச்சமென்றே கூறவேண்டி வரும். ஆகையால் அதை விடுத்துவந்த என்பதற்கேற்ப ஓசையால் ஒற்றுமையுடையதும், சுட்டின் மரூஉ மொழியுமாகிய அந்த என்பதை எடுத்துக் காட்டிக் கூறினர். அதனால் அது பொருந்தாது.

"கொல் யானை
நல் யானை

இவற்றுள் கொல் என்பது வினை. நல் என்பது பண்பு. இவையும் வடிவத்தால் வேறுபட்டு, பயன் வகையால் ஒரு தன்மையாக உள்ள சொற்கள்'' என்று டாக்டர் மு. வ. கூறுவராலெனின் கூறுதும் :- கொல், நல் என்பன முறையே தெரிநிலை குறிப்பு வினையடிகளாம். இவை பெயரெச்சத்து அகர விகுதி பெற்றுக் கொன்ற யானை, நல்ல யானை என வரும் தன்மையன. முன்னது தெரிநிலை வினைப்பெயரெச்சம், பின்னது குறிப்புப் பெயரெச்சம். எனவே, குறிப்புவினை இன்றெனல் பொருந்தாது. நிற்க,

தன்மை முன்னிலை குறிப்பு வினைகளைப் பற்றியும் குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்களைப் பற்றியும் ஆராய்ந்து முடிவு கட்டிய பின்னரே குறிப்பு வினையென்ற குறியீடு பொருந்தாதென்று கூறல் வேண்டும்.

தாரினன் தாரினம் முதலாகிய தன்மை வினைமுற்றுக்களையும், குழையினை குழையினீர் முதலாகிய முன்னிலை வினைமுற்றுக்களையும் குறிப்பு வினைமுற்றுக்கள் என்றே கூற வேண்டும். பெயர்ச்சொற்களென்று கூற முடியாது. என்னை? தன்மைப் பெயர்கள் யான், யாம், நான், நாம் என்னும் நான்கே. முன்னிலைப் பெயர்கள் எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்னும் ஐந்தே. இவையொழிய வேறு தன்மை முன்னிலைப் பெயர்கள் கிடையா.

தாரினம் முதலாயின பெயராங்கால் அவற்றை வினையாலணையும் பெயரென்றே கொள்வர். ஆறுமுக நாவலர், "மவ்வீ ருற்றழிந்து" (ந. மெ. 16) என்னுஞ் சூத்திரத்துக் காட்டிய உதாரணமாகிய சிறியேங்கை என்பதில் உள்ள, சிறியேம் என்பதை வினையாலணையும் பெயர் எனக் கூறுவதையும் நோக்குக. அன்றியும், "முதற் பெயர் நான்கும்" (ந. பெ. 25) என்னுஞ் சூத்திரத்து, 'இன்னன' என்றமையால் தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும் பிறவுங் கொள்க, என உரையாசிரியர்கள் கூறுவதும் நோக்கத் தக்கது.

"நன்னீரை வாழி யனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"

இதில் காணப்படும் நன்னீரை என்பது முன்னிலைக் குறிப்பு வினைமுற்றே. இதனை எவ்வாற்ருனும் பெயர் என்று கூற முடியாது. என்னை, அனிச்சமே என்று விளித்து, இன்ன தன்மையுடைய என்று கூறுகின்ருணதலின் ஆகவே, நன்னீரை என்பது முன்னிலைக் குறிப்பு வினைமுற்றே. எனவே, மென்னீரள் என்பதும் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றே. என்னை? நீ இன்னை, யாம் வீழ்பவள் இன்னுள் என்று கூறுகின்ருணதலின். இவை நிற்க,

கரிய. நல்ல, செய்ய முதலியன குறிப்பு வினையெச்சங்களே. இவற்றிற்கு வேறு குறியீடு கூற வழியில்லை.

இங்ஙனம் குறிப்புவினை உண்டெனக் கொள்ளாக்கால்,

அது எவன்
அவை எவன்

அவன் யார்
அவள் யார்
அவர் யார்

இவற்றிற் காணப்படும் எவன், யார் என்பன எக் குறியீட்டில் அடங்கும் என்பார்க்கு விடையின்மை உணர்க.

வாழ்க தமிழ்!

இங்ஙனம்,
சு. குமாரசாமி,
தமிழ்ப் பேராசிரியர், புதுவை.

ஆரிய மொழிகளில் திராவிட மொழி இயல்புகள்

பெ. திருஞானசம்பந்தன் எம். ஏ., எல். டி.
(Professor of Sanskrit & Comparative Philology, Presidency College, Madras - 5.)

மொழி என்பது பிற உயிர்வகைகளுக்கல்லாது மனிதன் ஒருவனுக்கே உரித்தான ஒரு கருவி. மொழி என்பதில் சொல்லும் பொருளும் அடங்கியுள்ளன. நாம் அறிந்துள்ள கருத்தைப் பிறருக்குச் சொல்ல விழையும்போது மொழியைக் கருவியாகப் பயன்படுத்துகிறோம். அதே கருவியைக் கொண்டு பிறருடைய கருத்தை நாம் அறியவும் முடிகின்றது. பொருளின்றேல் சொல் இல்லை. ஆனால் சொல் இன்றேல் பொருளில்லை என்பதாகாது; வேறு வகையானும் பொருளை உணர்த்தக்கூடும் ஆதலின். இசையாலும், உறுப்புக்களின் அசைவினாலும், வண்ண ஓவியத்தினாலும் பொருளை உணர்த்தலாம்; ஆனால் இவற்றால் உணர்த்த இயலாத பொருளையும் சொல்லால் உணர்த்திவிடலாம். அதுவே மொழியின் சிறப்பு. உலகிலுள்ள பல்வேறு பகுதிகளில் பல வகை மொழிகள் தோன்றிச் சிதைந்து வளர்ந்து உருமாறி வந்திருக்கின்றன. சில நூறு மக்கள் பேசுகின்ற மொழியும் உண்டு. பல கோடி மக்கள் பேசுகின்ற மொழியும் உண்டு. பல்வேறு காரணங்களால் சிலகால் நிலவி சிதறுண்டு போன மொழியும் உண்டு. பல நூற்றாண்டுகளாகப் பல்கிப் பெருகி நிலவும் மொழியும் உண்டு. இலக்கிய மரபே இல்லாத பேச்சு வழக்கில் மட்டும் உள்ள மொழியும் உண்டு. இலக்கிய வளம் செறிந்த சீரிய மொழியும் உண்டு. ஆனால் எந்த மொழியும் மாற்றம் கடந்த நிலையில் இருந்ததில்லை. மாற்றம் இன்றேல் உயிரில்லை. திராவிடம் போன்ற மொழிகளில் மாற்றம் பையவே நிகழ்ந்துள்ளது. ஆங்கிலம் போன்ற மொழிகளில் மாற்றம் விரைவில் நிகழ்ந்துள்ளது. ஜர்மன் மொழியின் அடிப்படையில் வளர்ந்த ஆங்கில மொழியானது கிரேக்கம், லத்தீன் போன்ற பிற மொழிச்சொற்களை மிகுதியாகக் கொண்டு இன்று வேற்று மொழியாகிவிட்டது. வேதகாலத்திய ஆரிய மொழி உபநிடத காலத்திலும் இராமாயண காலத்திலும் மாறுபட்டுக் கொண்டே வந்து கற்றோரிடையே மட்டும் நிலவும் ஒரு மொழியாகிக் கிறித்தவ காலந் தொடங்கி வழக்கில் குன்றிவிட்டது. திராவிட மொழி அன்று முதல் இன்று வரை மக்களிடை பயிலப்படும் மொழியாக இருந்துவருகின்றது. இது இம் மொழிக்கே உரித்தான தனிச் சிறப்பு.

மொழி ஆராய்ச்சி என்று எடுத்துக்கொண்டால் எந்த மொழியும் ஆராய்ச்சிக்குப் பயனுடையதேயாகும். சிறிது காலமே வழக்கிலிருந்த மொழியாயினும் சரி, பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை எந்த அளவினதாயினும் சரி,

இலக்கிய வளம் ஒரு சிறிதும் இல்லாது வரிவடிவமே அற்ற மொழியாயினும் சரி, அனைத்துமே ஒரு நிலையில் வைத்து எண்ணத்தக்கன. உலகில் மிகுதியான நிலப்பரப்பில் பேசப்படும் ஆங்கிலமும், சாத்திரங்களும் பிற நூல் வகைகளும் மிக்க சம்ஸ்கிருதமும், இலக்கிய வளமும் தொன்மையும் வாய்ந்த தமிழும், மலைப்பகுதியில் ஒரு சிலரால் பேசப்படுகின்ற தொதவர் மொழியும், மொழி ஆராய்ச்சியாளர் நோக்கில் ஒத்த நிலையில் உள்ளவையே.

ஆரியமும் தமிழும் நமது நாட்டின் இரு சிறந்த மொழிகள். முன்னையது இந்தோ—ஐரோப்பிய மொழியினத்தைச் சார்ந்தது என்பதும், கிரேக்கம், லத்தீன், ஜர்மன், அர்மீனியன், அல்பேனியன், கெல்டிக், பால்டோ—ஸ்லொவானிக், தொகேரியன், ஹிட்டைட் ஆகிய மொழிகளோடு ஒத்த இனமாக உள்ளது என்பதும் மேலைநாட்டு மொழியாராய்ச்சியாளரால் ஒப்ப முடிந்த உண்மையாகும். அதுபோன்று தமிழும், கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகளோடு ஒத்த திராவிட இனத்தைச் சார்ந்ததென்பதையும் இன்றைய மொழியாராய்ச்சியாளர் ஐயந்திரிபிற்கிடமின்றி ஒப்புக்கொண்டுள்ளனர்.

இவ்விருவகை மொழிகளுக்குமிடையே உள்ள வேற்றுமையை ஒரு சிறு எடுத்துக்காட்டின் வழி விளக்குவாம். தமிழில் 'மரங்களால்' என்ற சொல்லில் 'மரம்' ஒரு பொருளை உணர்த்தும் பகுதி என்பதையும், 'கள்' பன்மை விகுதி என்பதையும், 'ஆல்' மூன்றும் வேற்றுமை உருபு என்பதையும் நாம் எளிதில் பிரித்துக் காணலாம். ஆனால் அதே பொருள் கொண்ட 'வ்ருகைக்ஷ' என்ற வடசொல்லில் 'வ்ருக்ஷ' என்ற பகுதி மரத்தை உணர்த்துகிறதெனினும் 'ஐ:' என்ற மூன்றும் வேற்றுமை உருபு எண்ணையும் வேற்றுமைப் பொருளையும் ஒருங்கே உணர்த்துவதல்லது தனித்தனியே தமிழிற் காணப்படுவதுபோல் பிரித்துக்கூற இயலுவதன்று. ஆகவே தான் சம்ஸ்கிருதத்தையும் அதை யொத்த இந்தோ ஐரோப்பிய மொழிகளையும் Inflexional (ஒட்டறியா மொழிகள்) என்றும், தமிழையும் அதைச் சார்ந்த திராவிட மொழிகளையும் Agglutinative (ஒட்டறி மொழிகள்) என்றும் பகுத்துக் கூறியிருக்கின்றனர் கால்டுவெல் முதலாய மொழிநூல் வல்லார்.

குறிப்பாக சம்ஸ்கிருதத்திற்கும் திராவிட மொழிக்கும் மொழி இயல் என்ற அடிப்படையில்—இலக்கிய அடிப்படையில் அல்ல—உள்ள தொடர்பை விளக்க எழுந்தது இக்கட்டுரை. விஞ்ஞான முறையில் மொழி ஆராய்ச்சி தோன்றாத காலத்தில், மேம்போக்கான ஒற்றுமைகளைக் கண்ட சிலர் திராவிட மொழிகளும் சம்ஸ்கிருதத்தின் சிதைவான பிராகிருத மொழி

களைப் போல்வன என்றே தவறுகக் கொண்டனர். அக்காலச் சூழல் அவர்களை அவ்வாறு எண்ணச் செய்தது என்று அமைதி கூறலே பொருந்தும். தெலுங்கை அவ்வாறு பிராகிருதம் எனக் கருதிய தெலுங்கரும் உண்டு. மலையாளத்தில் மிகுதியான சம்ஸ்கிருதச் சொற்கள் இருப்பதைக் கண்டு அதை சம்ஸ்கிருதத்தின் சேயெனக் கருதும் பாமரர் இன்றும் உண்டு. ஆயினும் மொழி இயலைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் வகையில் நூல்கள் தோன்றியுள்ள இக்காலத்தில் இப்பொருந்தாக் கருத்துக்கள் மறைந்து வருவதைக் காண்கிறோம்.

நூறுண்டுகளுக்கு முன்னர் இம்மொழிகளைப் பற்றிப் பொது மக்கள் கொண்டிருந்த கருத்தை டாக்டர் கால்டுவெல் தமது 'திராவிட மொழி ஒப்பிலக்கணத்தில்' குறிப்பிடுகிறார். சம்ஸ்கிருதத்திலும் திராவிடத்திலும் ஒத்த சொற்கள் இருக்குமேயானல் திராவிடம் சம்ஸ்கிருதத்தினின்றும் அவற்றைப் பெற்றதென அன்று கருதி வந்தனராம். இதை டாக்டர் குண்டர்ட்டும் குறிப்பிடுகிறார் 'We scarcely meet in India a Native Philologist whowould be willing to a cknowledge the existence of Dravidian elements in Sanskrit while we meet with many who boldly take upon themselves to derive from the corruptions of Sanskrit the whole of Dravidian vocabulary.'

ஆனல் இன்று நிலை மாறிவிட்டது. மொழி இயலை ஆராய்ந்தவர்கள் உண்மையை உணரத் தலைப்பட்டுவிட்டனர். எந்த இரண்டு மொழிகளாவது நாட்டின் ஒரு பகுதியில் உடன் பயிலப்படுமானல் ஒன்று மற்றொன்றுடன் கொண்டும் கொடுத்தும்தான் வாழமுடியும். இரு ஆறுகள் கலக்கும்போது ஒரு சிறிதும் கலப்பின்றி ஒவ்வொன்றும் தனித் தன்மையை எங்ஙனம் காப்பாற்ற முடியும்? மக்கள் இனம் ஒன்று சேர்ந்தாலும், மொழி இனங்கள் ஒன்று சேர்ந்தாலும் முடிவு அதுவே. இதற்குக் காரணம் மனிதன் ஏனையரோடு உறவாடும் இயல்பினனுகை என்றுமே எங்குமே இருந்து வந்திருக்கிறுன் என்பதே யாகும். பல்வேறு மொழி இலக்கியங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன. தொல்காப்பியர் தமிழ்ச் சொற்களின் வகைகளைக் கூறும் போது 'வடசொல்' என்ற பிரிவைக் குறிப்பிடுகிறார். இத்தகைய நேர்மையை எல்லா மொழியிலக்கண ஆசிரியர்களிடமும் காண்டல் அரிது. சம்ஸ்கிருதத்தினின்றும் சொற்களும், கருத்துக்களும், இலக்கிய வகைகளும் திராவிட மொழிகளிடையே விரவியிருத்தலைப் பலரும் அறிவர். ஆனல் சம்ஸ்கிருத மொழிமட்டும் மொழி இயலுக்குப் புறம்பாக திராவிடத்

தினின்றும் சொற்களையும் கருத்துக்களையும் இலக்கணப் பண்புகளையும் இலக்கிய மரபுகளையும் ஏற்காமல் எப்படி இருந்திருக்கக்கூடும் என்று கருதினர் இன்றைய மொழி இயல் ஆய்வாளர்கள். சம்ஸ்கிருதமும் திராவிடத்திற்குப் பல்லாற்ருனும் கடன்பட்டது. அது வேத இலக்கியத்திலேயே காணப்படுகின்றது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். டாக்டர் கிரையர்சன் கூறுகிருர்— 'There are a number of verbal roots and words in Sanskrit which do not appear to occur in other Indo-European languages. It is probable that at least a considerable portion of such words and bases has been borrowed from the Dravidian' ஆரியமொழிகளையும் நாகரிகத்தையும் பெருமளவுக்குத் திராவிடர்கள் உருவாக்கியிருக்கின்றனர் என்பதை டாக்டர் சுநீதி குமார் சாட்டர்ஜி என்ற வங்காளப் பன்மொழிப் புலவர் (இவர் தம்மை 'நன்னெறி முருகன்' என்று தம் பெயரைத் தமிழில் கூறிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்) சுட்டுகிருர். 'The original inhabitants including the Dravidians who at one time seem to have spread over the whole of Northern India from Baluchistan to Bengal had succumbed to the power of Aryans but not without leaving marks of their language and culture? அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடமொழி ஆராய்ச்சித் துறையை 1957–ஆம் ஆண்டு துவக்கி வைத்தபோது திரு. சாட்டர்ஜி அவர்கள் எப்படி வேத காலத்திலேயே வேத மொழியில் திராவிட ஒலிப்புமுறை, சொற்கள், இலக்கண அமைதி, வாக்கிய அமைப்பு ஆகிய துறைகளில் திராவிடமும் ஏனைய பண்டை மொழிகளும் உதவியிருப்பது காணப்படுகின்றதென்று குறிப்பிடுகிருர். 'Already in the Vedic speech we find plentiful evidence of the influence of Dravidian, as much as of Austric, in Phonology, in some aspects of Morphology and also of Syntax, and of course in Vocabulary and Indian.' ஆரிய வாழ்வியலும் பண்பும் கூட ஓரளவு திராவிடரால் உருவாக்கப்பட்டது என்பதையும் சுட்டத் தவறவில்லை. 'A very large element in Brahmanical Hinduism is definitely not of Aryan origin, but it is all Pre-Aryan-Austric, Dravidian and Mongoloid.'

இங்ஙனம் கூறிய அறிஞர்கள் ஆரியம் ஓரளவுக்குத் திராவிடரின் மொழி, வாழ்வியல் ஆகிய துறைகளில் தோற்றுவித்துள்ள மாற்றங்களை மறக்கவோ மறுக்கவோ இல்லை. ஆரியமும் திராவிடமும் கலந்தே இன்றைய இந்திய கலாசாரத்தைத் தோற்றுவித்துள்ளன என்பதைக் கால்டுவெல், F. W. தாமஸ், சாட்டர்ஜி போன்ற அறிஞர்கள் ஏற்று மொழிகின்ருர்கள். இங்கு நான் குறிப்பாகக் கூற விரும்புவது சம்ஸ்

கிருதமும் அதனை ஒட்டிய வட இந்திய மொழிகளும் எந்த அளவுக்குப், பிறமொழிச் சொற்களையும் பிற இலக்கண அமைதிகளையும்--குறிப்பாகத் திராவிடத்தைச் சார்ந்த வற்றை---ஏற்றுக்கொண்டு வந்துள்ளன என்பதாகும். இதனை ஆராய்ச்சியாளரின் கூற்றுகளை அடியொட்டிக் காண்பிப் பேனுக.

முதலாவதாக ஓர் அடிப்படைக் கருத்தை நாம் உள்ளத்தில் தேக்கிக்கொள்ள வேண்டும். ஒரு மொழியில் இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் இருந்திருத்தல் வேண்டும் என்பதை அனைவரும் அறிவர். இலக்கியம் தோன்றுவதற்குப் பன்னெடுங்காலம் முன்பே மொழி செம்மையுறாத நிலையிலும் பேச்சளவிலே இருந்திருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். இந்தோ ஐரோப்பிய மொழிக் கூட்டத்திற்கே முதல் இலக்கியமாகிற ருக்வேதத்திலும் பண்டைக்காலச் சங்க இலக்கியத்திலுமே ஒரு மொழியின் சொற்கள் மற்றொன்றில் காணப்படுகின்றன என்றால் இவ்விலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பே, பேச்சு வழக்கில் மட்டும் அவை இருந்த காலத்திலேயே கொண்டு கொடுத்தல் தொடங்கி விட்டன என்பதைத்தானே நாம் உணர வேண்டும். கீழெல்லையாக ருக்வேதத்தின் காலம் கி. மு. 1500 என்பது மேனாட்டறிஞரின் கருத்து. அந்த ருக் வேதத்திலே திராவிடச் சொற்கள் காணப்படுகின்றன என்றால், அவ்வேதம் இயற்றப்பட்ட வடநாட்டில் திராவிட மொழியைப் பேசிய மக்கள் உடனுறைந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பது தேற்றம். ஆகவே வேத காலத்திற்கு முன்னரே திராவிட மொழி பேசிய மக்கள் வடநாட்டில் இருந் தனர் என்றும், மேற்குப் பகுதியினின்றும் வந்த சிறுபான்மையினரான ஆரியர் பெரும்பான்மையினரான திராவிட மக்களின் கருத்துக்களைப் பெரும்பகுதியும், சொற்களைச் சிறுபகுதியும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தனர் என்றும், மேலும் மேலும் ஆரியர் நாட்டில் புகவே திராவிட மொழி பேசிய மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் நாட்டின் தென்பகுதிக்குப் போமாறு செய்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

செகோஸ்லவாகியாவில் தமிழாராய்ச்சி செய்துவரும் Dr. Kamil Zvelebil என்பவர், சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த பழந்திராவிடர், ஆரியர் வருகைக்கு முன்பே மத்திய தரைக்கடற் பகுதியினின்றும் போந்து இந்தியாவின் வட பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் சிலகாலம் இருந்தனர் என்றும், ஏதோ காரணத்தால் சிந்துவெளி நாகரிகம் மண்மூடிப்போக, ஆரியர் வருகைக்குப் பின்னர் சுமார் கி. மு. 1000 ஆண்டளவில்

வில் அவர்களுள் ஒரு பிரிவினர் தெற்கே போந்தனர் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறார். 'It seems to be nowadays well establised that the Dravidian speakers must have been widespread in the north of India and present as far towards the northwest as the Punjab even in the very early times of the presence of Aryan speakers there.'— Dr. Kamil Zvelebil. p. 130 in R. P. Sethu Pillai Silver Jubilee Commemoration Volume).

இப்படித் திராவிட மொழி பேசிய மக்களே யன்றி 'ஆஸ்திரிய—ஆசிய' மொழி பேசிய மக்களும் ஆரியர் வருகைக்கு முன்பே வடநாட்டில் இருந்தனர் என்றும், அம் மொழிகளிலிருந்து சில சொற்கள் சம்ஸ்கிருதத்தில் கலந் துள்ளன என்றும், இன்று இங்கிலாந்து நாட்டிலுள்ள ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதப் பேராசிரியராக உள்ள Burrow என்பார். 'The Sanskrit Language' என்ற தமது நூலிலும், வங்க அறிஞரான S. K. சாட்டர்ஜி அவர்கள் 'The Indo-Aryan and Hindi' என்ற தமது நூலிலும், சென்னைப் பல்கலைக்கழகத்து வடமொழிப் பேராசிரியரான டாக்டர். வே. ராகவன் 'சம்ஸ்கிருத இலக்கியம்' பற்றிய தனது வானொலிப் பேச்சிலும் தெளிவாகக் கூறியிருக்கின் றனர். டாக்டர். ராகவன் கூறுவதாவது 'Sanskrit was wise enough to retain its all-India character by not only incorporating within itself regional vocabulary but also lending itself freely to influence from the speakers of the non-Indo-European population of the country, Austric-Munda and the Dravidian.'—['Sanskrit Literature' published by the Ministry of Information and Broadcasting p. 9.]

பேராசிரியர் பர்ரோ தனது நூலின் 'Non Aryan influence on Sanskrit' என்ற பகுதியில் சம்ஸ்கிருதமும் அதன் வழிவந்த பிற்கால வடநாட்டு மொழிகளும் எங்ஙனம் ஆரியமல்லாத பிற மொழிகளினின்றும் பல சொற்களைப் பெற்றுள்ளன என்பதை எடுத்து விளக்குகிறார். அத்தகைய மொழிகளுள் இந்தியாவின் கீழ்ப் பகுதியில் வழங்கி வந்த 'ஆஸ்திரிய--ஆசிய மொழி இனத்தைச் சார்ந்த மொழிகள் சிறுபான்மையும், பண்டைத் திராவிடமொழி பெரும்பான்மை யும் சம்ஸ்கிருதச் சொல்லாக்கத்திற்கு உதவின என்று குறிப் பிடுகிறார். அப்படி சம்ஸ்கிருதத்தில் வந்து சேர்ந்துள்ள சொற்களின் பட்டியலையும் தருகின்றார். எடுத்துக் காட்டாக சிலவற்றைக் காண்போம். [பின் வருவனவற்றுள் ( ) இக்குறி யினிடையே சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகியவற்றின் முதல் எழுத்துத் தரப்பட்டுள் ளது. வேண்டிய இடத்தில் ஆங்கில ஒலிப்பு முறையும் கொடுக்கப்பட்டுள்ளது.]

முதற்கண் 'ஆஸ்திரிய-ஆசிய' மொழியினின்றும் வந்த ஓரிரு சொற்களைக் காணலாம்.

தாம்பூலம் (ச)—ம்லுவோ (mluo) (க்மர்); போலோ (bolou) (பாஹ்னர்)

லாங்கல (ச)—அங்கல் (க்மர்); தெங்கல (மலாய்); திங்கல (பதக்) ('நாஞ்சில்' என்ற தமிழ்ச் சொல் இவ்வாஸ்திரிய மொழியினின்றும் வந்ததென ஆசிரியர் கூறுவர்.)

கதளீ (ச)—தலூயி (நிகோபார்); தலோய் (க்மர்)

இனி திராவிட மொழிகளினின்றும் வந்த சொற்களில் சிலவற்றைக் காண்போம்.

அகுரு (ச)—அகில் (த,ம) அகிலு (து)

அனல (ச)—அனல் (த,ம) அனலு (க)

உலூகல (ச)—உலக்கை (த); உலக்க (ம), ஒலகே (க); ரோகலி (தெ).

கானன (ச)—கா (த), கான், கானம், கானல் (த); காவு(ம); கா(க).

கால (ச)=(கறுப்பு)—கார், கருமை, கருகு (த); கார் (க)

குடில (ச)—கோடு, குட, குடவு (த); கோடு (ம); குடு (க)

குண்ட (ச)—குண்டு (=குழி) (த); குண்டு (ம) குண்ட, குண்டி; குண்டே (க).

குண்டலம் (=காதணி) (ச)—குண்ட (gunda), குண்டு (gundu) (வட்டம்) (க); குண்டு (gundu) (து); குண்ட்ரன (gund-rana) (தெ).

சதுர (ச)—சதுரர் (த); சதுபு (து); சதுரு (க); சதுவு (தெ).

சந்தன (ச)—சாந்து (த); சாந்து (ம); சாது (sadu) (க); சாது (cadu) (தெ).

தண்ட (ச) (=கழி)—தண்டு (த); தண்டு (dantu) (க); தண்டு (dantu) (து); (தெ).

நீர (ச)—நீர் (த, ம, க); நீரு (து, தெ); நீர் (குயி).

பண்டித (=learned) (ச)—பண்டு (தெ) (=பழுத்த); பண்ட் (Pand) (கோண்டு) பண்டு (த).

பலம் (ச)—வல், வலம் (த); வல் (ம); பல் (bal) (க); பலு (balu) (து); வலி, வலுத (தெ).

மஷி (ச)—மை (த) மசி (க); மஜி (து); மாசி (குயி).

மஹிளா (ச)—மகள், மகடு (த): மகள் (ம); மகளு (து).

முகுட (ச)—முகடு (த,ம); முச்சி (த); முகள் (ம); மொகடு (க, தெ); முகுர் (கோண்டு).

இத்தகைய சான்றுகளைக் கொண்டு சம்ஸ்கிருதப் பேராசிரியரான பர்ரோ இங்ஙனம் நிறுவுகிறார், 'It has become clear that quite a considerable portion of the Sanskrit vocabulary is of Dravidian origin and that this influence has operated over a long period in the history of the language' p. 380 of 'the Sanskrit Language'—Burrow.

இதுபோல் டாக்டர் S. K. சாட்டர்ஜி அவர்கள் அணு, அரணி, கபி, கர்மார, கண, நாணு, நீல, புஷ்ப, பூஜா, பீஜ' ராத்ரி, ரூப முதலிய வட சொற்களெல்லாம் திராவிடத்தினின் றும் போந்தவை என்று எடுத்துக் காட்டுகிறார்.

சம்ஸ்கிருதத்தில் உள்ள டகர வரிசை ஒலிகள் திராவிட மொழி பேசும் மக்கட் கூட்டுறவால் ஏற்பட்டன என்று டாக்டர் பதகிருஷ்ண கோஷ் என்ற மற்றொரு மொழிநூல் ஆசிரியர் கூறியுள்ளார். டாக்டர் கால்டுவெல், வில்லியம் L. கிராப் (William L. Graff) போன்ற பல ஐரோப்பிய அறிஞர்களும் இக்கருத்தை எடுத்துரைத்திருக்கின்றனர். Graff கூறுவதாது—'The fact that Sanskrit possesses cacuminial dentals may possibly be accounted for by its spreading over Dravidian territory where those particular sounds are quite commonly found in the Dravida dialects.'

சொற்களோடமையாது இலக்கண முறையிலும் திராவிடம், சம்ஸ்கிருதத்தைச் சார்ந்த வட இந்திய மொழிகளாகிற இந்தி, வங்காளி ஆகியவற்றில் மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. எடுத்துக்காட்டாக, 'வீட்டிற்கு அண்மையில்' என்ற பொருள் கொண்ட வடமொழிக் கூட்டுச் சொல் 'உபக்ருஹம்' என்பதாகும். ஆனால் இந்தி மொழியில் தமிழ் மொழி இயலை ஒட்டி 'கர்கே பாஸ்' என்ற இரு சொற்களால் அக்கருத்து உணர்த்தப்படுகிறது.

ஒன்றுடன் மற்றொன்றையோ, பலவற்றுடன் ஒன்றையோ சீர்தூக்கி அறுதியிட்டுக் கூறும் முறையில் தமிழுக்கும் சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளுக்குமிடையே வேறுபாடு உண்டு. தமிழில் பல சொற்களைக் கொண்டுதான் இது

உணர்த்தப்படுகிறது. இந்தோ—ஐரோப்பிய மொழியினத்தைச் சார்ந்த கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகியவற்றில் ஒரே சொல்லில் அதில் அடங்கியுள்ள விகுதியைக்கொண்டே (Comparative and Superlative Suffixes) இதை உணர்த்துவர். எடுத்துக்காட்டாக, 'எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது' என்பதன் பொருள் ஆங்கிலத்தில் 'Best' என்ற சொல்லாலும், சம்ஸ்கிருதத்தில் 'கரிஷ்ட:' (Garisthah) என்ற சொல்லாலும் உணர்த்தப்படுகிறது. திராவிடப் பண்பை யொட்டியே இந்தியிலும் இக்கருத்து 'சபாரா மாஜே பாலோ' என்ற சொற்றொடரினாலேயே உணர்த்தப்படுகிறது.

"குதிரை—கிதிரை' அங்கே மேய்கிறதா?" என்ற வாக்கியத்தில் 'குதிரை—கிதிரை' என்ற சொற்றொடர் தமிழில் காணப்படுவது போல் 'குதிரே—கிதிரே' என்று கன்னடத்திலும் பிற திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றன. சம்ஸ்கிருதத்தில் இத்தகைய சொற்றொடர் காணப்படாமல் இருக்க, அதைச் சார்ந்த வங்காளியில் 'கோரா—தாரா' என்றும், மராத்தியில் 'கோரா—பீரா' என்றும் காணப்படுகிறதென்றால் காரணம் தெள்ளிதின் புலனாகிறதன்றோ? இது போல் 'எடுத்துக் கொண்டு வா' (த), 'தீசிகோனி ரா' (தெ) என்பவைபோல, வங்காளி மொழியில் 'லையா ஐசா' என்ற இருவேறு சொற்களால் கூறுவரே யன்றி, 'ஆநய' என்று வடமொழியில்உள்ளதுபோல் ஒரு சொல்லால் கூறுகின்றிலர்.

சுருங்கக் கூறினால் திராவிட மொழியின் தொடர்பினால் வட நாட்டில் அன்று பேசப்பட்ட பிராகிருத மொழிகளும் அவற்றினடியாக எழுந்த இன்றைய வட இந்திய மொழிகளும் சிறிது சிறிதாக வடமொழிக்குரித்தான ஒட்டறியா மொழி நிலையை (Inflexional stage) விடுத்து, ஒட்டறி மொழி நிலையை (Agglutinative stage) ஏற்றுக் கொண்டு வந்துள்ளன என்னும் உண்மை புலனாகும்.

இதுகாறும் கூறியவாற்றால் சம்ஸ்கிருதத்தினின்று திராவிட மொழிகள் சில சொற்களையும் இலக்கிய மரபுகளையும் பெற்றிருந்தபோதிலும், சம்ஸ்கிருதமும் அதனைச் சார்ந்த இன்றைய வட இந்திய மொழிகளும் வேத காலத்திற்கு முற்பட்டே ஏற்பட்ட திராவிட மொழியின் கூட்டுறவினால் அம்மொழியினின்றும் பல சொற்களையும், இலக்கண அமைதிகளையும் பண்புகளையும் ஏற்றுள்ளன என்பதை அறிந்தோம்.

வள்ளுவர்*

ச. பாலசுந்தரம்

தமிழ் வாழ்த்து .—

ஓசையொலி உருவாகி உளமாகும் பெருங்கோயிற் குள்ளெ ழுந்து
பேசுமொழி தோறுமொழிற் பிழம்பாகி உறவாகிப் பேரு ணர்வால்
ஆசுகவி முதலாகும் அருள் வடிவம் பலவாகி அணிபெ ருக்கும்
தேசுடைய செந்தமிழ்த்தாய்த் திருவடியை நாணுளும் சிந்தை
செய்வாம் 1

அவையடக்கம் :—

மஞ்சுகமஞ் சூல்தவிர்ந்து வான்மாரி நிலைகெடினும் வார்சிலம்பிற்
கொஞ்சிமலர் சுமந்துநட மாடிவரும் பொன்னியருள் கூர்ந்து
செய்யுள்
இஞ்சிவளர் மஞ்சளெழிற் கன்னலொடு செந்நெல்வளம் ஈயவாழும்
தஞ்சமெனில் அஞ்சலெனும் தஞ்சையினிற் கல்விநலம் சால்பு
கொள்ள 2

மன்னர்சர போசியின்பேர் வாய்த்தகலைக் கல்லூரி மாண்புமேவப்
பொன்னினருள் மொழிபொழியப் போந்துகவி யரங்கினிலே
பொலியும் சான்றோய்!
முன்னுசைவ மோங்கவதில் முளைத்தகளை எடுத்துவரும் முனிவ
இந்தத்
தென்னர்தவப் பயனேவான் செந்தமிழாற் செம்பொருளின்
திறத்தைப் பாடி 3

உய்வழியை ஒன்மையுற உலகறிய உரைத்துதமிழ் ஒளிபரப்பும்
தெய்வசிகா மணியேஎம் தேசிக! நும் திருவடிக்கு நனி வணக்கம்;
மெய்வழியை மாணவர்க்கு விளம்பியறிவொளி வளர்க்கும் மேன்மை
சான்றீர்!
வையமினிக் காக்கவளர் மன்னவரீர்! அவையீர்! நல் வணக்கம்
நன்றி. 4

பள்ளமுறு வெள்ளமெனப் பைந்தமிழிற் றண்கவிதை பாடி யீங்கே
தெள்ளியதீஞ் சுவைபெருக்கித் திகழ்புலவீர்! நனிவணக்கம்,
செங்கதிர்போல்
விள்ளரிய ஒளிபெருக்கும் மெய்ப்புலமை வள்ளுவனர் மேன்மைபாட
எள்ளளவும் அறியாதேன் ஏழிசையை ஊமையன்வந் திசைப்
பதைப்போல் 5

முத்தமிழின் திறமறியேன் முயல்கின்றேன் கரந்தையினில்
முகிழ்த்த சங்கம்
வித்தியதோர் தொண்டனெனும் வீறுடனே சிறிதியம்ப விழைவேன்
அன்பால்

---

*1960 பிப்ரவரியில் சரபோசி மன்னர் கல்லூரியில் நிகழ்ந்த கவியரங்கில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அரங்கேறியது.

ஒத்தபெருஞ் சால்புடைய ஒண்மையினீர் குறையிருப்பின் உளம்
பொறுப்பீர்
பித்தெனினும் பெற்றவர்க்குப் பிள்ளைமொழி கள்ளெனவே
பிதற்றுகின்றேன் 6

வள்ளுவர் தோன்றிய தமிழகம் :—

பாலெனவான் தேனருவி பாய்மு கட்டில்
பரந்துமுகில் இருந்தமுதம் பொழியச், சாரற்
கோலமுறு சந்தனமும் அகிலுந் தேக்கும்
கொழுந்தினையும் தேனும்வளர் குறிஞ்சி; தென்றற்
காலசையக் கன்னியர்கை காட்டுங் காந்தள்
கமழ்முறுவற் போலுமெழில் முல்லைக் காடு;
கூலவகை சேர்மருதம்; குறையா முத்து
கொடிப்பவளம் உப்பொடுமீன் கொழிக்கும் நெய்தல் 7

திணைவிரவிக் கருப்பொருளாற் றிசைக ளெட்டும்
திருநீடு தென்னுடிந் நாட்டிற் கிங்கே
இணையில்லை எனயவனர் கிரேக்கர் பண்டை
எகிப்தியரோ டரபியரும் இருங்க டல்மேல்
புணைபரப்பிப் போந்துபல வணிகஞ் செய்யப்
பொய்யாத வளமீந்து புக்கோர்க் கெல்லாம்
துணையாகி அருள்வழங்கிப் பரிந்து காத்துத்
துறைதோறும் சுடர்பரப்பிச் சுவை வழங்கி 8

போர்கருதி வந்தோரின் புறத்தைக் கண்டு
பொன்னூட்டு விருந்தினராய்ப் போக்கி—அன்னூர்
வேர்களைந்து வீரம்மறம் மானங் காக்கும்
வெற்றிமகள் காதலிக்கும் தோளில் வாளும்;
பார்புகழும் ஏழிசையாழ்ப் பாணர் கூத்தர்
பைந்தொடி சேர்விறலிநறும் பாவல் லோரின்
சீர்பெருகுங் கவின்கலைகள், காவியங்கள்
செழித்தொளிரக் கையிற்செங் கோலுந் தாங்கி 9

படைதாங்கி இசைதாங்கிப் பண்பு தாங்கிப்
பாவலரின் உரைதாங்கிப் பரிவு தாங்கிக்
குடிதாங்கி அறந்தாங்கிக் குணமுந் தாங்கிக்
கொடைதாங்கி வெண்கொற்றக் குடையுந் தாங்கிக்
கொடிதாங்கி முரசேங்கக் கொற்றந் தாங்கிக்
குளிர்தாங்கி முத்தமிழுங் கோயில் கொள்ள
முடிதாங்கி மூவேந்தர் முறைநமை செய்த
மூவாத புகழ்தாங்கும் தென்னகத்தே 10

வேண்டுதல்வேண் டாமையிலான் எண்கு ணத்தான்
வினையில்லான் வாலறிவன் உவமை யில்லான்
ஆண்டவன்அன் பகமலர்வாழ் ஓர் இறைக்கே
அன்புவழி பாடியற்றும் சமயக் கொள்கை

பூண்டுபிறப் பொக்குமெலா உயிர்க்கும் என்னும்
பூட்கையொடு மானம்வரின் ஆவி ஈயும்
நீண்டபுகழ் நாகரிக நெறிகண் ணோட்டம்
நிலஉலகிற் களித்துயர்ந்த தமிழகத்தில் 11

வள்ளுவர் தோன்றுமுன்னிருந்த தமிழக நிலை :

மடமைமுகில் விரிந்தறிவுச் சுடரை மூட
மடிமையெனும் அடைமழைவான் கல்வி யென்னும்
உடல்நனைக்கப் பிறமொழியாம் வாடைவந்திங்(கு)
உரைதிரிக்கப் பல்சமயச் சூறைக் காற்று
கடமையெனும் பழுமரத்தை முறித்துச் சாய்க்க
கண்ணோட்டம் என்ற பனிகலை நடுக்க
அடிமையெனும் பேயொடுபல் சாதிப் பூதம்
ஆணவத்தாற் பண்பழித்திங் அலைந் தவாமால். 12

வள்ளுவர் தோற்றம் :

நேரிடும் பேராசை நெருப் பெழுந்தகாலை
நீர்ப் பெருக்காய்; வஞ்சமெனும் நாகமஞ்சப்
பேரிடியாய்ப்; பேதைமையாம் இருளை மாய்க்கும்
பெருநிலவாய்க்; கயமையெனும் பனியைப் போக்கும்
சூரியனாய்த்; துயர்க்கடற்கோர் புணையாய்; நெஞ்சத்
துரிசகற்றும் மாமருந்தாய்; அறிவ மிழ்த்த
மாரிபெயும் வான்முகிலாய்; வாடா இன்ப
மாமலராய்; மண்மகள்முன் செய்தநோன்பால் 13

இத்தரையிற் கடமைசெயல் வாழ் வென்றெண்ணி
இசையெனிற்றம் உயிர்கொடுத்து மானம் பேணி
வித்தினையும் உணவாக்கி விருந்தை ஓம்பி
வேங்கை யெனப் பகையழித்து வாகைசூடி
ஒத்தஇரு உள்ள மொன்றுங் காதல்மேவி
உலகமக்கள் யாவரும்ஓர் குலமா எண்ணி
முத்தமிழை வழுத்திமுதுக் குறையால் வாழ்ந்த
மூத்தப்புகழ்க் குடிமுகிழ்த்தார் முதற்பா வல்லார். 14

வள்ளுவர் தோன்றியபோது தமிழகம் எய்திய நிலை

வழிவழியாய் நறும்புலமை வாழ்வுற்றோங்க
வள்ளுவனார் தமிழகத்திற் பிறந்த ஞான்று
கொழிதமிழ்த்தாய் கூத்தாடி உளமகிழ்ந்தாள்
குற்றுயிராய்க் கிடந்தஅறம் பிழைத்துயர்ந்து
விழிமகிழ ஆனந்த நீர்பெருக்கி
வீறுபெற்ற(து) இலக்கியப் பெண் விரைந் தெழுந்து
கழிமகிழ்வால் நடமாடிக் களித்தாள் இன்பக்
கலைமாசு நீங்கியெழில் கதிர்த்த(து) எங்கும் 15

அருளொழுகுந் துறவுஒளி பெற்ற(து) என்றும்
அழியாத காதல்விளை கற்போ பொற்பின்
உருவெடுத்துப் பொலிந்து மணம் பெற்ற(து) ஒண்மை
ஒழுக்கம் முரசறைந்து கொடி எடுத்த தெங்கும்
பொருளுரைநூல் புத்துயிர் பெற்றுள்ளம் பொங்கிப்
பொலிந்த(து) அரசாண்மை நடைபோட்ட திங்கே
அரியஉவா நாளெழுந்த நிலவைக் கண்ட
அலைகடல்போல் உலகம் உவப்படைந்த தம்மா 16

வள்ளுவர் சீர்த்தியும் சிறப்பும் :—

வள்ளுவரைப் பெற்றதிந்த தமிழ்நா(டு) ஆனல்
வாழ்ந்த திந்த வையமெனற் கையமில்லை
வள்ளுவர்வாய் சொற்றதுசெந் தமிழே ஆனல்
வளம்படைத்த துலகமொழி பலவும் என்னல்
உள்ளபடி மறுப்பவரிங் குண்டோ? இல்லை
உலகத்தின் பேரொளியாய் உலவும் சீர்த்த
வள்ளுவரைத் திருக்குறளை வாழ்த்தி ஏத்தி
வாயாரப் புகழறிஞர் மொழியைக் காண்மின்! 17

வாமனனய் வந்த திருமாலைப் போல
வள்ளுவர்தம் குறட்பாவின் வடிவம் என்றும்
காமனைவென் றோன்சடையிற் கங்கையைப் போல்
கருத்தொளிரும் திருக்குறளின் கவிதை என்றும்
வாமனருள் திருமொழியாய் வாய்த்த திந்த
வள்ளுவர்வாக் கென்றும்எம தேசு நாதர்
மாமலைச்சொற் பொழிவென்றும் மகிழ்ந்து கூறி
மனமுவப்பார் சமயப்பற் றுளரெல் லாம். 18

புல்லேறு பனியின் சின்னீர் பூம்பொழில் காட்டல் போல
எல்லாமிக் குறளுள் ஏற்றம் உற்றெளி மேவும் ஈண்டுச்
சொல்லாத பொருளே இல்லைத் தூயநல் லறத்தை மேவி
நில்லாதுள் ளிருளைப் போக்கும் நீள்சுடர் ஒக்கும் என்பார் 19

அறிவெனும் முல்லை நல்ல அழகெனும் கொன்றைக், கல்விச்
செறிவெனும் செருந்தி, உள்ளச் செழிப்பெனும் அரும்பு, தூய
நெறியெனும் மகிழம், அன்பு நிலையெனும் மருக்கொ ழுந்தும்
வெறிகொள மலர்ந்து நாறும் வியன்றமிழ்ச் சோலைக்குள்ளே 20

மலர்மணக் கவின்நோக் காமல் வழியுஞ்செந் தேனை நச்சி
அலர்புகுந் துழக்குந் தும்பி அழிவுசெய் வண்டின் கூட்டம்
இலைவளர் எழிலை நோக்கா திரையெனப் பற்றி ஆங்கே
நலிமுசுச் கட்டை ஈட்டம் நறும்பொழில் புகுந்த போது 21

சீறிவந் தலைக்கும் சீர்த்த தென்றலாய்த் தெளிந்த வானில்
ஏறிவந் தொழுகுந் தூய எழிலியாய்ச் சேர்ந்தா னென்பேன்
மாறிவந் தெவரும் வெல்லா மாத்தமிழ் உவக்க நீதி
கூறியெம் முளத்தில் வாழும் குறளருள் பாவல்லோனை 22

கடுகைக யன்றணுவைப் பற்றிக் கணக்குறத் துளைத்துள் ஏழு
கடலையும் புகுத்திவைத்த கலையென, உலகத்துற்ற
நெடியபல் பொருளை முற்றும் நிரல்படச் செந்நாப்போதார்
அடியிரண்டமைந்த வெண் பாக்குறளிடை அமைத்தா ரென்பார் 23

விறலெனுந் தேமா வீர வேர்ப்பலா ஈகை வாழை
அறமெனுந் தென்னை ஆண்மை ஆலம்நல் லன்புவாகை
திறலெனும் வேங்கை திட்பத் தேக்குயர் சால்புப் புன்னை
உறவெனும் சாந்தம் யாவும் ஓங்குயர் தமிழ்க் காவுள்ளே 24

புன்னையின் பூவை யுண்ணப் புகுந்திடுங் கரடிக் கும்பல்
தென்னையின் கூந்தல் பற்றித் தீம்பலா மிதித்து ரித்துத்
தின்னவந் தணுகும் யானைத் திரள், குலை வாழை தேமா
மன்னிய கனிகள் உண்ண வந்திடும் மந்திக் கூட்டம் 25

பொய்வழிப் புகுந்து தீங்கு புரிந்தழ கழிக்குங் காலை
மெய்வழி அரிமா ஏறாய் வேங்கையாய் விரைந்தா னென்பேன்
வையமிங் கெழுமுன் தோன்றி வளர்தமிழ் ஆக்கங் கொள்ள
மையறு பொருள் நூல் தந்த மாதானு பங்கி தன்னை 26

சாதியால் சமயந் தம்மால் தாய்மொழி வேறு பாட்டால்
பாதியில் வந்து வீசும் பகையெலாங் கடந்து, வாழும்
ஓதுதற் கெளிதாய்த் தேறார் உணர்வதற் கரிதாய் மண்மேல்
ஆதியாய் அமைந்த முப்பால் அருந்தமிழ் மறையாம் என்பார் 27

கவினெனும் அல்லி; உள்ளக் கனிவெனும் கழுநீர்; ஓகை
தவழுமெய்க் காத லென்னுந் தாமரை; தகவாம் நீலம்
அவிழநன் பலைகள் வீசி அருளெனும் நீர்நி ரம்பிப்
புவியுணப் பொலிந்து நிற்கும் பூந்தமிழ் வாவிக் குள்ளே 28

கொந்திடும் நாரை பாம்பு கொடுவினை முதலை யாவும்
வந்திடர் விளைக்குங்காலைச் சுறவெனவந்தா னென்பேன்
சிந்தனைக் கொளியை நல்கும் செந்தமிழ் செழிக்க யார்க்கும்
முந்துமுப் பானூல் தந்த மூதறிவாளன் தன்னை. 29

ஆயுந் தோறறிவே ஊறும் அகத்தொளி சேரும் இன்பம்
பாயுந் தேசடையும் யாக்கை, பண்பருள் ஆண்மை கூடும்
தோயுந் தொல்லிருவினைக் கோர் துணையிலா மருந்தாம் கற்கும்
வாயுந் தேனினிமை மேவும் வள்ளுவர் திருவாக் கென்பர். 30

“ வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்திற் கொருநீதி ” 31

என்றுரைத்தார் சுந்தரனார் இசைத்த மனோன் மணிநூலில்
தொன்றுபுற நானூற்றிற் சொல்லி வைத்தார் அறமென்றே 32

வள்ளுவனை உலகினிக்குத் தந்ததனால் வான் புகழைக்
கொள்ளுதமிழ் நாடென்று கூறுகின்றார் பாரதியார் 33

வள்ளுவர் பெயரின் மாண்பு :—

ஓயா தறம் பெருக ஊதி முழக்குவதால்
வாயார வள்ளுவப்பேர் வைத்து மகிழ்ந்தாரோ ? 34

அமிழ்திருக்கும் வள்ளமென அறிந்துணர்ந்தோ, அன்றிநறுந்
தமிழ்திருந்தப் பாடியதாற் சாற்றினரோ வள்ளுவப்பேர் ? 35

கூர்த்தமதி கொண்டதனாற் கூறினரோ, அன்றியறம்
சேர்த்து வளங்காட்டியதாற் செப்பினரோ வள்ளுவப்பேர் ? 36

வளியொப்ப வாய்த்ததனால் வழங்கினரோ, அன்றி உயிர்க்(கு)
அளிபெருக்கி நிற்பதனால் அமைத்தனரோ வள்ளுவப்பேர் 37

வளைத்துலகை ஆள்வதனால் வாய்த்ததுவோ ? செந்தமிழில்
விளைத்த புகழ் கண்டவர்கள் வேண்டுமென்றே வள்ளுவரை 38

வல்லபராய் மாற்றிடினும் வாய்மதமென் றோராமற்
சொல்லுவரோ நல்லவர்கள் தூய தமிழ்ப் பாவலனை ? 39

அயனார்தம் சூத்திரத்தின் ஆன்ற மொழி பெயர்ப் பென்று
பயனொன்றுங் காணாத பண்டிதர்கள் கூறிடினும் 40

உலகமொழி பலவும் வந்துவந்து மொழி பெயர்த்து
நலமுறவே துய்ப்பதனை நானிலத்தோர் நன்கறிவார் 41

உய்யத் தமிழ் மூன்றும் உரைத்த இளங் கோவோ
தெய்வப் புலமை தவழ் சேக்கிழார் சாமிகளோ 42

கள்ளின் கவிதை பொழி கம்பனோ பாரதியோ
வள்ளுவரின் சொல்லமிழ்தை வாரிவிழுங் காதவர்யார் ? 43

வள்ளுவர் நூல்நலம் :—

செழுந்தேனும் தீங்கனியின் இனிய சாறும்
சீனத்துக் கற்கண்டும் தெங்கின் நீரும்
பிழிந்தமைத்த முக்கனியின் நறிய சாறும்
பிணியற்ற சேதாவின் பாலுங் கூட்டிக்
கொழுந்தணலில் இளஞ்சூட்டில் வைத்திறக்கிக்
கொண்டசுவைக் குழம்பினும்பே ரினிமை மேவும்
தொழுந்தகைய வள்ளுவர்சொல் அமிழ்ந்த மென்றே
சொன்னாலும் அதுமிகவும் சுருக்கமம்மா ! 44

தெய்வமாப் புலவன்தேர்ந்து செந்தமிழ்க்குழம்பால் தீட்டிப்
பெய்தவிக் குறளோவத்தைப் பேசும்நன் நாவினிக்கும்
மெய்தவழ் வண்ணங் காணின் மேனியில் உணர்வுபொங்கும்
கைபடின் கருத்திற்செம்மை கடிதுறுங் கணக்கென்சொல்வேன் 45

வள்ளுவர் வார்த்தெடுத்து வனை குறட் பாவின்சிற்பம்
உள்ளுதோ றினிக்கும் காணின் உணர்வெலாம் இனிக்கும் சேர்ந்து
மெள்ளவே வருடச் சிந்தை மெருகுறும் அறிவின் கேணி
வெள்ளமாய்ப்பெருகும் அந்த வியப்பினை என்ன சொல்வேன். 46

ஓரிரு குறட்பா ஓதின் உள்ளுறுமாசு நீங்கும்
ஓரதிகாரங் கற்றால் உள்ளம் நல்லொளியைத் தாங்கும்
ஓரியல்பயின்றால் உள்ளம் உயிர் உணர்வெல்லாம் ஓங்கும்
ஓரும்நூல் முழுதுங்கொண்டார் உலகொளி வீசிநிற்பார் 47

திருவள்ளுவர் கொண்ட மொழியமைப்பு

புலவர் மி. மு. சின்னசாமி.

மலர்தலை உலகத்து உயிர்கள் தோன்றிய காலத்தில் மனிதம் உயிர்களில் ஒன்ருயிருந்தது; உந்திச்சிறந்தது. என்புழி முதற்காரணம் இயற்கை எனவே பொருந்துவதாம். துணைக்காரணம் மனித உயிரியக்கத்தின் உந்துதல், உணர்வு, ஊக்கம் என்று கோடலே சாலும். இவ்வழிமுறையே பல்லாயிரம் ஆண்டுகள் சென்றபின் மனிதம் பொதுமையிலிருந்து பிரிந்து, சிறந்து தனித்த மனம் பெற்ற மனிதனும். மனிதன் இன்றுகாணும் மேலான சிறப்பமை உயர்வுக்கு வந்துள்ளான் என்பதாகும்.

இவ்வாறு இத்தோற்ற வளர்ச்சியில் சிறந்த மனிதனும் மாண்புயர்தற்கு நல்லறிஞர் பல்லோரின் பணியாம் படிகளே நாமின்று இவ்விஞ்ஞான உலக உயர்மாளிகையில் உலவ வழியாய் அமைந்தது என்று நுணித்தறிந்து உணர்வார்க்குப் புலனும். இவ்வழிமுறையே சீர்சால் புலமை சான்ற தெய்வப் புலவராம் திருவள்ளுவனர் தலைமை சான்ற மனித சமுதாயத்தின் தலைமகன் என்றுகோடல் வேண்டும்.

நல்வினையிலேயே மனமூன்றி ஐம்புலன்களால் உலகப் பொருள்களை உணரும் உணர்ச்சியைப் பெற்ற நல்லறிஞன்

வாழ்த்து :—

காலமும் கருத்தும் மக்கட் காட்சியும் முரண்பட்டாலும்
கோலமும் குறிப்பும் கொண்ட கொள்கையும் பிறழ்ந்திட்டாலும்
ஞாலமுள்ளளவும் சீர்த்த ஞானமும் உணர்வும் தூய
சீலமும் நல்கிநிற்கும் திருக்குறள் அளித்தான் வாழி! 48

ஐயமில்லாசானுகி அறிவொளிச் சுடராய் இந்த
வையமுள்ளவும் மாரு வாய்மையைத் தாய்மையாலே
பெய்துபல்லுயிரும் வாழப் பிறங்குபே ரறிஞன் எங்கள்
தெய்வநற் புலவன்சீர்த்தி திசையெலாம் நிறையவாழி. 49

நன்றியுரை ?—

புதிதாகச் சிறிதேனும் புகல கில்லாப்
பொடியேனை அன்போடு போற்றிவட்ட
மதியான வள்ளுவரின் வளத்தைச் சற்றே
வண்டமிழாற் பாடுகென வாய்ப்பளித்த
நிதியேறும் சிறந்ததமிழ்ப் பேரவைக்கும்
நிறையுருளாற் செவிசாய்த்த அடிகளார்க்கும்
இதுகாறும் அமைதியுடனிருந்து கேட்ட
எல்லோர்க்கும் வணக்கம் உளங்கனிந்தநன்றி. 50

கண்டநூலே முதல்நூல் எனப்பெறுவதாம். இவ்வளவான் நிறைவுற்று அமைந்ததே திருக்குறள் என நல்லறிஞருள்ளம் நயந்துபோற்றும் வளமைசான்றது. இதனையே ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம் "வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்-முனைவன்கண்டது முதனூ லாகும்" என இலக்கணம் வகுத்து வரம்பிட்டது.

அறிவு முத்திறத்தான் வகுக்கப்பெறும் என்பர். இயலறிவு, நூலறிவு, பட்டறிவு என்பனவாம். இயலறிவின்றி நூலறிவும், பட்டறிவும் பயனின்றி முடியும். நுண்ணிய நூல்பல கற்பினும் உண்ணுங்கால் இயலறிவே எஞ்சிநிற்கும் எனவகுத்துரைத்தார் குறளாசான் திருவள்ளுவப் பெருந்தகை. பட்டறிவால் சிறப்புறல் விலங்கினங்களே எனக்கொள்க. உய்த்துணரும் ஆற்றலால் திருவள்ளுவர் உலக இயல்பனைத்தும் நன்குணர்ந்து பல வேறுபட்ட துறைகளையும் ஆய்ந்துகூறினர். நுண்ணறிவால் சிறப்பவன் மனிதன் என்றுகோடல் நிறைசால் மனிதர் ஒப்பமுடிந்த முடிவாகும். நுண்மாண் நுழைபுலம் இல்லான் மண்மாண் பாவையன்றோ இவ்வழி விளக்கப்புகின் ஆழவிரியும். இவ்வளவான விடுத்து மொழியமைப்பிற்கு வருவாம்.

மொழியமைப்பில் ஒவ்வொரு அறிஞரும், புலவரும் தத்தமக்கென ஒருநடையை வகுத்துக் கொண்டுள்ளனர். தொன்று தொட்டுவந்த கடிய நடையை மாற்றியமைத்த பெருங்கவிஞர் பாரதியார். அவர்தாம் வெளியிட எண்ணிய கருத்தைப் பயிலாத மக்களுக்கும் விளங்குமாற்றான் வழிகோலியவராவர். அவ்வழியில் சிறந்து விளங்குகின்ற கவிஞர்கள் இன்று பலராவர். பாரதியார் கொண்டமுறையை ஈருயிரமாண்டுகளுக்கு முன்னரே தெய்வப்புலவர் மேற்கொண்டாரெனில் மிகையன்று. திருக்குறள் மூலத்தை ஊன்றிப் பயில்வார்க்கு இவை புலனும். திருக்குறள் வாழக்கை நூலாக எழுதப்பட்டதனால் எளிய மொழியமைப்பைக் கொண்டார் திருவள்ளுவர். சுருங்கச் சொல்லுமழகான் கடியநடை கொண்டன சில பாக்கள் என்பதும் பொருந்துவதாகும்.

"பதிற்றுப் பத்தொத்த நூல்கள் காலத்திருந்த கடுந்தமிழ் நடை நாளடைவில் எளிமையுற்று வள்ளுவர் காலத்தில் இனிய விழுமிய மொழிகளாய் வெளிப்பட்டன." என்பது எவ்வகையானும் பொருந்தும் பான்மையதன்று. அக்கால மக்கள் பதிற்றுப் பத்தொத்த நடையிலா உரையாடினர்? உன்னிப் பார்க்கில் நகைப்பில் ஆழ்த்தும். மொழியை வழக்கில் ஆளுதல் வேறு; எழுத்தில் எழுதுவோர்—எழுத்தாளர்—ஆளும் முறையும் வேறேயாம். பாமர மக்களோடு

பயிலும் மொழியும் வேறுபட்டேவரக் காண்கின்றோம். இப்பொழுதும் நாம் எழுதுவது போலப் பேசுவதில்லை; பேசும் போது காலச் சுருக்கம் வேண்டியும் பொருள் விளங்கினால் போதுமென்ற நிலையிலுமே நாம் மனத்தில் கொள்கின்றோம் எனல் பொருந்துவதாகும். மொழிக்கு முதலிடம் கொடுத்து மேடையில் பேசுவோர் சிலரே முழுச்சொற்களையும் ஒலி குன்றாமல் கூறுவர். அவ்வாறு மொழியமைப்பிற்கு முதலிடம் கொடுத்து சொற்பொழிவாற்றுவோர் பலர் பொருள் நலனைக் கவனிப்பதில்லை என்பதைக் கண்கூடாகக் காணலாம். பொருள் நலன் ஒன்றே குறியாகக் கொண்ட சான்றோர்களின் பேச்சைக் கேட்டு வியவாதாரில்லை. அஃதவ்வாறிருப்பதனால் பொருள் எளிமை கருதி மொழியை ஆளும் முறை காலத்தான் மாறுபாடு இருந்தாலும் எழுத்திற்கும் பேச்சிற்கும் வேறுபாடுகள் உண்டென்றே கொள்ள வேண்டும்.

மறைமலையடிகள், சோமசுந்தரபாரதி போன்றாரின் உரை நடைகளை எளியனஎன்று கோடல் ஒல்லுமோ? அவர்கள் தமக்கென்று ஒரு நடையை ஏற்படுத்திக் கொண்டு அவ்வகையில் வழுவாது ஒழுகியவர்கள். இப்பொழுதும் இச்சான்றோர்களைப்போல எழுதுவோரும் சிலருண்டு என்பதைத் தெளியலாம்.

பதிற்றுப்பத்துக் காலத்தினும் திருவள்ளுவர்காலம் மொழிநடை எளிமையுற்றது என்பது பொருந்தாக் கூற்றைச் சிறிதுகாண்பாம். சென்ற நூற்றாண்டுகளில் எழுந்துள்ள பிள்ளைத்தமிழ், கலம்பகம், உலாப்போன்ற சில்லரைப் பிரபந்தங்களெல்லாம் எளியநடையனவா? என்பதைக் காய்தல் உவத்தலின்றி ஆய்வார்க்குப் புலனாம். மற்றும் சிலம்பு, சிந்தாமணி, கம்பன், சித்தர்கள், இராமலிங்கம் பாரதி வழியாய் வரவர எளிமையுற்றதெனக் கொள்ளமுடியும் தன்மைத்தோ? குறுந்தொகை, அகம்புறம், முதலிய தொகை நூற்களிலும் எளியபாடல்கள் காணக்கிடக்கின்றன என்பது மறுப்பதற்கு ஒல்லுமோ? இவ்வழி முறையே நம்சிந்தையைச் செலுத்திக் காண்பாம்.

ஆகவே மொழியமைப்பு எளிமை வள்ளுவர் எவ்வாறு கொண்டாரெனின் விளங்கிய அறிவின்முனைவர் எளியகல்வி கற்றாரும், கல்லாரும் உளங்கொளவேண்டும் என்ற உயர் எண்ணமும் விரிந்த மனமுங்கொண்டதால், அரிதின் முயன்றே அவ்வாறு கொண்டார் எனலாம். (பாரதியார் தாம் பாடிய பாடலை மாலையில் கூடும் நண்பர்களிடம் பாடிக்காண்பிக்க

புரியவில்லை என்று சொல்லும் சொல்லை நீக்கிவிட்டே எளிய சொல்லை—புரியும் சொல்லையே அமைப்பார் என்பதை வ, ரா. குறிப்பிட்டுள்ளதால் தெளியலாம்) வியக்கவேண்டு மென்றும். வேடிக்கையாகவும் பாடியோர் பற்பலகவிஞராவர். புலமையை அணி அலங்கார நயத்திற்கே செலவாக்கினர் சில கவிஞர்கள். கருத்தை (கொள்கையை) எவ்வளவுபேர் புரிந்து கொள்ளமுடியும் என்றும் எண்ணாது, புரியவில்லை என்று சொல்லும் நிலையே உயர்ந்தது என்று கொண்டோரு முண்டு சில கவிஞர்களென்றால் பிழையன்று.

பதிற்றுப் பத்து முதல் பாவேந்தர் பாரதிதாசன் ஈருக மொழிநடை வரவர எளிமையுற்றது என்பது எவ்வாற்றானும் பொருந்தும் பான்மையதன்றென்பது இதுகாறும் கண்டவற்றால் தெளியலாம். எளிய மக்களும் கூறும் கருத்தனைத்தும் புரிந்துகொண்டு அவ்வழிவாழ முந்துற வேண்டு மென்பதே வாழ்வின் சட்டநூலாகிய வாழ்வியற் கவிஞன் திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையாம்.

தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே செம்மையுற்று விளங்கிய மொழியாகும். மற்ற மொழிகள் அவ்வாறில்லை என்பது ஆங்கிலம் போன்ற மொழிகளால் தெளிவாகின்றது. ஆகவே தமிழ்மொழி உயர்தனிச் செம் மொழி யென்று மொழிநூலறிஞர் போற்றுகின்றனர்.

நூலெழுதும் ஆசிரியன் உள்ளம், அறிவு அமையுமாற்றான் மொழியமைப்பும் பொருள்நலனும். அமைகிறது எனக்கொள்ள வள்ளுவர் அமைத்த மொழியமைப்பு மிகமிக எளியது. இக்காலக் கவிஞரினும் எளியனவாகக்கூட சில அமைப்புகள் மிளிரக்கூறியுள்ளனர். (குழலினிது யாழ்இனிது என்ப தம்மக்கள் மழலைச்சொல் கேளாதவர்) பெரும்பாலும் எளிய அமைப்புக் கொண்டது என்பதை மூலபாடம் போற்றுவார் உணரலாம். ஞாலச்சான்றோராகிய திருவள்ளுவர் கொண்ட மொழியமைப்பு மக்கள் யாவரும் உணர வேண்டும் என்ற விழுமிய உளத்தான் கன்னல் சாறுபோல வாழ்க்கையில் கொள்ளத் தக்கனவும் தள்ளத்தக்கனவுமாக விதித்தும் விலக்கியும் உறுதிப்பொருளை அருளொழுக ஆக்கிப்போயினர் என்பது தேற்றம். திருக்குறள் மூலத்தைப்பயின்று விழுமிய பொருள் நலனை உளங் கொளத்துய்த்து வாழ்வின் குறிக்கோளை—லட்சியத்தை அடையப் பெற்றுய்வோமாக.

சென்ற இதழின் தொடர்ச்சி :

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனார்,

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

நரந்தமலை (நார்த்தமலை):

உயர்ந்தும் தாழ்ந்தும் எட்டு சிறு குன்றங்கள் ஒன்றோடொன்று நெருங்கி நிற்கும் சூழலையுடைய இப்பகுதி, சிற்றண்ணல்வாயில் மலைக்கு வட கிழக்கே நான்குகல் அளவில் அமைந்துள்ளது. வடக்கிலிருந்து இருபிரிவாகத் தொடரும் இம்மலைகளின் தலைப்பகுதியே மேலைமலை என்று பெயர் பெறும். அடுத்துள்ள மலைகள் முறையே, கோட்டைமலை, கடம்பர்மலை, ஆளுருட்டிமலை, பழையன்மலை, உவச்சன் மலை, திருப்பள்ளிமலை, நகரத்தார் மலை என்பனவாம், மேலை மலையிலிருந்து தொடரும் பிரிவிற்கு இடையேயுள்ள பள்ளத்தாக்கில் முட்புதர்களும் மரங்களும் அடர்ந்துள்ளன. இப்பள்ளத்தாக்கின் தென்கோடி மிகத்தாழ்ந்தும் பரந்தும் இருப்பதால் அஃதொரு ஏரியாகவே அமைந்திருக்கிறது.

இம்மலைப் பகுதியில் சித்தர் மருத்துவ முறைக் குரிய மூலிகைகள் மிகுதியாகக் கிடைப்பதுடன், நரந்தம் என்று சொல்லப்படும் மணமுள்ள மருந்துப் புற்கள் புதராக வளர்ந்துள்ளன. மலைத்தொடர் முழுவதும் இயற்கை வளமாகத் திகழும் இந்நரந்தம் புற்களின் இயல்பாலேயே இம்மலைச் சூழற்கு 'நரந்தமலை' என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். அது நாளடைவில் நரத்தமலையாகிப் பின்னர் நார்த்த மலையாகி நிற்கின்றது எனலாம்.

இம்மலையடி வாரத்திலுள்ள தலங்கட்கு புராணம் யாத்தவர்கள் மலையின் பெயரிலுள்ள ஒலித்தொடர்பால் நாரதர் என்ற முனிவர் வாழ்ந்த மலையாக்கி; நாரதர் மலை என்ற பெயருமிட்டு, அதற்கேற்பக் கதைகளும் யாத்துள்ளனர். அத்துடன், இராம இராவணப் போர்க்காலத்தில் அநுமன் எடுத்துச் சென்ற மருத்து மலையினின்றும் பெயர்ந்து விழுந்த ஒருசிறு பகுதியே இம்மலையென்றும், அதனாற்றான் சிறந்த சஞ்சீவிகள் (மூலிகைகள்) இம்மலையிற் கிடைக்கின்றன என்றும் கதை கூறுகின்றனர். இவை ஒருபுறம் நிற்க, இம்மலையின் ஒரு கூறாகத் திகழும் நகரத்தார் மலையின் பெயரையே முழுமைக்கும் சுட்டிக்கூறிய வரலாறுகளும் உண்டு. முடிபாக 'நரந்தமலை' என்றபெயரே சற்றுத்திரிந்த வடிவில் 'நார்த்தமலை' யாகியுள்ள தென்பது தெளிவாம்.

இம்மலைப் பகுதி, முதல் இராசராசன் காலத்தில் கேரளாந்தக வளநாடாயின கோனாட்டு அண்ணல்வாயில் கூற்றத்துள் அடங்கிய பகுதியாகவும், பின்னர் முதல் குலோத்துங்கன் காலத்தில், இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டுத் தெலிங்கருலகால புரத்துப் பகுதியாகவும் இருந்திருக்கிறது.

மலைத்தொடரின் வடக்கு எல்லையாக மிகவுயர்ந்துள்ள மேலைமலைப் பகுதியினின்று, இம் மலைத்தொகுதிகளைப் பற்றிய செய்திகளைக் குறிப்பதே சிறப்புடையதாகும். மேலைமலையின் உடற்பகுதியினின்றும் தொடங்கும் பிரிவின் தலைப்பு மேற்புறம் சுவர்போன்று எழுந்து நிற்க, அடுத்துள்ள பகுதி தளமாக அமைந்து இருநூறடி அளவில் சென்று பின்னர் கீழ் நோக்கி வழிந்தோடித் தரைமட்டமாகின்றது. சுவர் போன்றுள்ள பகுதியில் சிறப்பாக இரண்டு குடைவரைக் கோயில்கள் குடையப்பட்டுள்ளன. அவற்றுள், முதலாவதாகவுள்ளது பழியிலியீசுவரம் என்பதாகும். மலையில் குடையப்பட்டுள்ள இக்கோயிலை, மூன்றும் நந்திவர்ம பல்லவன் ஆட்சியில் விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தன் பழியிலி என்பான் குடைவித்தான் என்பதும் அதற்குரிய இடபம், இடப மண்டபம் ஆகியவற்றை அவன் மருமகளான பழியிலி சிறிய நங்கை செய்வித்தா ளென்பதும் இங்குள்ள பாறைக் கல்வெட்டால் விளங்கு கின்றது.

இப்பழியிலி யீசுவரத்துக்குத் தென்புறம் 'சமணர் குடகு' என்று அழைக்கப்படும் குகைக்கோயில் இருக்கிறது. இக் குகைக்கோயிலைப் "பதினெண் பூமி விண்ணகரம்" என்று இங்குள்ள கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்குகைக் கோயில் பல்லவர் காலச் சிற்ப முறையோடு கூடிய தூண்களுடன் முகமண்டபம் கருவறை ஆகிய பகுதிகளோடு குடையப்பட்டுள்ளது. இக்கோயிலில் முதலில் எழுந்தருளுவித்த மூர்த்தம் இதுபோது இல்லையாயினும், முகமண்டபச் சுவரில், பன்னிரண்டு திருமால் மூர்த்தங்கள் பல்லவசிற்ப முறையைத் தழுவியதாக அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் ஆதியில் ஜினாலயமாகத் தொடங்கப்பட்டுப் பின்னர் திருமாலுக் குரியதாகச் செய்யப்பட்டதென்பதை இக் குடைவரையைச் 'சமணர் குடகு' என்று இன்றும் அழைப்பதிலிருந்து நன்கு விளங்குகிறது. அதனுள் முதலில் இடம்பெற்ற தீர்த்தங்கரர் யாரென்பது தெரியாது போயினும், திருமாலின் பெயர் "திருமேற் கோயில் மாணிக்க ஆழ்வார்" என்பதென்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இக் குகைக்கோயிலைச் சார்ந்து தெற்கே மற்றொரு சிறு குடைவரைத் தோற்றமளிக்கின்றது. இக்குடைவரை வறிதே கிடப்பதால் அது பற்றிய செய்தியொன்றும் புலனாகவில்லை.

இக் குடைவரைகட்கெல்லாம் எதிரேயுள்ள மலையின் மேற்றளம் மட்டமாகவே அமைந்துள்ளதென்று முன்னர்க் கூறினோம். இப்பகுதியில் சிதைந்து வரும் உயர்ந்த கற்றளி யொன்று பரிவாரங்கள் சூழ நிற்கும் மன்னனைப்போல் காட்சி யளிக்கின்றது. இக்கற்றளி தரைமட்டத்திற்குமேல் முன்னூறடியளவில் மலைமீது மேற்கு நோக்கிய நிலையில் கட்டப்பட்டுள்ளது. இதுவே வரலாற்றுப் புகழ்பெற்ற விசயாலய சோழீச்சரமாகும்.



விசயாலய சோழீச்சரம்

இக் கோயிலைச் சோழன் விசயாலயன் கட்டினன் என்பர். செம்படி என்னும் சிற்பி முதலில் கட்டி முடித்திருக்கிறான். காலம் செல்ல இக்கற்றளி மழையினாலும் காற்றினாலும் நிலைகுலையத் தொடங்க, உடனுகத் தென்னவன் தமிழடி அரையன் என்பான் புதுப்பித்திருக்கிறான். இச் செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இக்கற்றளியினைச் சுற்றிலும் ஆறு சிறு தளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகள் யாவும் பரிவார தெய்வங்கட்குரிய கோட்டங்களாகும். நடுவில் நிற்கும் பெரிய கற்றளியாகிய விசயாலய சோழீச்சரம் அடிப்படை முதல் சிகரம் வரையில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. சுண்ணம்புக் கலவையின்றியே செம்மையாகவும் ஒழுங்குபடவும் எழுப்பப்பட்டுள்ள இத்தளியின் சிகரம் வரவரக் குறுகிக் கடைசியில் திரண்டவட்டமாய் முடிகின்றது. கருவறையின் வெளித்தோற்றம் சதுரமாக இருப்பினும், உட்புறம் வட்டவடிவமாகவிருப்பது சிற்பக்கலையின் நுண்மையைத் தெளிவுபடுத்துகிறது. தஞ்சைப் பெரியகோயில் விமான அமைப்பினைப் போன்றே

விமானத்தின் உட்பகுதியினைக் கூடாகவே அமைத்து நான்கு நிலைகளுடன் உயர்த்தி, வெளிப்புறம் கருங்கற் சிற்பங்களால் சித்தரிக்கப் பட்டுள்ளது. இக் கற்றளியிலுள்ள துவாரபாலகர்களின் சிற்ப அமைப்பில் ஒரு புதுமையுண்டு. கால்கள் ஒன்றின்மேலொன்று பின்னவிட்டு நிற்கும் நிலையில் கைகளிலொன்று கதையினை எந்த மற்றொன்று யோக முத்திரைக் குறி காட்டுகின்றது. சடாமகுடத்துடன் திகழும் முடியில் கொம்புபோல் இரண்டு வளைவுகள் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய சிற்ப அமைப்பு பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

கருவறைத் திருச்சுற்றுச் சுவரில் பழைய வோவியங்கள் காணப்படுகின்றன. திரைமறைவிற்றோன்றும் தெய்வப் பெண்போல அருகித் தோன்றும் இவ்வோவியங்கள் சோழர் காலத்தவையென்றும், பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்விசயாலய சோழிச்சரத்திற்கு மேலை மலையின் வட கோடிச் சரிவே வழியாகும். இடைவழியில் பாறைகளின் நடுவே பெரிய சுனையொன்று அமைந்துள்ளது. இச்சுனை ' தலையருவிசிங்கம்' என்றழைக்கப்படுகின்றது. சுனையினுள் மூழ்கிக் கிடக்கும் குகைக்கோயிலினுள் 'ஜ்வரஹரேசுவரர்' என்னும் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச் சுனையின் வலப்புறமாகவுள்ள பாறையில் தமிழ் கல்வெட்டொன்றுளது.

இக் கல்வெட்டால், 1857--ஆம் ஆண்டு மே—திங்கள் 14-ஆம் நாள் புதுக்கோட்டை அரசர் இராமச்சந்திர தொண்டைமான் அவர்களும் அவர்களது மனைவியார் சானகிபாயிசாபு அவர்களும் தலையருவிசிங்கம் என்ற பெயருடைய இச்சுனையிலுள்ள நீரையிரைத்து, உள்ளே குடைவரையிலுள்ள 'ஜ்வரஹரேசுவரர்' என்னும் திருநாமமுடைய சிவலிங்கப் பெருமானுக்குப் பூசனை புரிந்தார்கள் " என்னும் செய்தி புலனாகின்றது.

கற்றளியும் குகைக்கோயிலும் அமைந்துள்ள பகுதிக்குத் தெற்கே மேலே கூறிய பள்ளத்தாக்கு இருக்கிறது. அதன் நடுவே வலப்புறமாகச் செறிந்திருக்கும் பாறைப் பிளவுகட்கிடையில் முகம்மதியர் இடங்கொண்ட சமாதியொன்று தோன்றும். இச்சமாதி நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியைச் சார்ந்து இருப்பதே பள்ளத்தாக்கின் ஏரியாகும்.

மேலை மலையைச் சார்ந்து அடுத்துள்ள குன்றம் கோட்டை மலை எனப்படும். உயர்ந்து நீண்டு படர்ந்துள்ள இம்மலையின் கண் ஒரு காலத்தில் சிறந்த கோட்டைக் கொத்தளங்கள் இருந்ததற்குரிய சிதிலங்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இக் கோட்டையைப் பற்றிய ஆராய்ச்சியினையும் மற்றுமிப் பகுதியில் சமணர்கட்குரியவாகக் கிடைக்கும் சின்னங்களைப்

பற்றியும் "அஞ்சினன் புகலிடம்" என்ற தலைப்பில் வெளியிடயிருப்பதால், அடுத்துள்ள மலையைப் பற்றிய செய்தியினைத் தொடர்கின்றேன்.

இம்மலைப்பகுதியே கடம்பமலை என்று பெயர் பெறும். அடிவாரத்தில் திருக்கடம்பூர் உடைய நாயனார் கோயில் உள்ளது. முதல் இராசராசன் காலத்தில் எழுந்துள்ள இக் கோயிலுக்கு மூன்றும் குலோத்துங்கனும், சுந்தரபாண்டியனும் செய்துள்ள திருப்பணிகளை இங்குள்ள கல்வெட்டுகள் நன்கு புலப்படுத்துகின்றன. இக்கோயிலுடைய இறைவனை, மலைக் கடம்பூர்தேவர், திருமலைக் கடம்பீசர், திருமலைக் கடம்பூர் உடைய நாயனார் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. "இக் கோயில் ஆதி சண்டேசுவர தேவர்கர்மிகள், இந் நாயனார் கோவிலது தச்சர், ஆசாரியன் போரேறு சே(ா)மன் ஆன அகளங்க ஆசாரியனுக்கு", இறையிலி நிலம் அளிக்கப்பட்ட செய்தியை இங்குள்ள பாறைக்கல் வெட்டு உணர்த்துகின்றது. கோட்டை மலையில் காணப்படும் பழைய சின்னங்கள் இம் மலையிலும் தொடர்ந்துள்ளது. இங்குள்ள 'சப்த கன்னியர் சுனை' காணுதற்குரியதாகும்.

அடுத்துள்ளது நகரத்தார் மலையாகும். இங்கு 'நகரீசுவரம்' என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் எழுந்ததென்பதையும் இப்பகுதியே நகரத்தார் மலைச் சீமை நாட்டின் பகுதியென்பதையும் இங்குள்ள பாண்டியர் காலக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இம்மலையைச் சார்ந்து தெற்கேயுள்ள மலையே 'பழையன் மலை' யாகும் இம்மலையில் வரலாற்றுக்குரிய பல பழைய சின்னங்கள் கிடைக்கின்றன. இம்மலையைத் தொடர்ந்துள்ள பகுதியே 'உவச்சன் மலை' என்பதாகும். பாண்டிய அரசியலில் பறையடிப்பார் ஈண்டி வாழ்ந்த இக் குன்றமும் வரலாற்றுச் சிறப்புடையதேயாம்.

'ஆளுருட்டிமலை' உயர்ந்து குத்திட்டுச் சரிந்த பெரிய பாறையேயாகும். பண்டைக் காலத்தில், கொலைக் குற்றம் புரிந்தவர்கட்குரிய தண்டனையாக, அவர்களைக் கோணிப்பையில் கட்டி உச்சியிலிருந்து உருட்டிவிட்டுத் தண்டனையை நிறைவேற்றும் இடமாக இப்பாறை இருந்ததென்றும், அதன் காரணமாகவே 'ஆளுருட்டி மலை' என்று பெயர் பெற்றதென்றும் இங்குள்ளார் கூறுகின்றனர்.

இப்பகுதியிலேயே 'அம்மாசத்திரம்' என்னும் சமணர் படுக்கைகள் உள்ள மலையும், சமணர் பாழிகளிருந்தற்குரிய சின்னங்கள் மலிந்த 'பொம்மன் மலை'யும் இருக்கின்றன. பொம்மன்மலையின் ஒரு பகுதியைப் 'பொன்மலை' என்றும், மற்றொரு பகுதியை 'மண்மலை' என்றும் அழைப்பர். இவ்

இலக்கியத்தில் அவலம்

(உ. பழநி, எம். ஏ., பி. ஓ. எல்., விரிவுரையாளர்)
இந்தியப் பகுதி மலாயாப் பல்கலைக் கழகம்.

சுவை, நாவினால் நுகரப்படுவது செவியினால் நுகரப்படுவது என இருவகைப்படும். நாவினால் நுகரப்படும் சுவை இனிப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என அறுவகைப்படும். செவியினால் நுகரப்படும் சுவை சொற்சுவை, பொருட்சுவை என இருவகைப்படும்.

மக்கள் அனைவர்க்கும் நாவினால் நுகரப்படும் சுவையை விடச் செவியால் நுகரப்படும் சுவையே சிறந்ததாகும். இதுபற்றியே வள்ளுவரும் "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்" (குறள் 420) என்றார். இக்கருத்தினையே ஔவையாரும் "பாட்டும் உரையும் பயிலா தன இரண்டோட்டைச் செவியும் உள" என்பதனால் புலப்படுத்தினார்.

விரண்டு மலைப்பெயரையும் ஒன்றாக இணைத்துச் சுட்டிய காலத்தில் 'பொன்மண்மலை' யென்று கூறியிருக்கின்றனர். காலப் போக்கில் அப்பெயர் பொம்மன்மலையென்று வழக்கில் திரிந்துள்ளது. இப்பெற்றியறியாதார் வலிந்து வரலாற்றை அம்மலைமீதேற்றி, அதற்கிலக்காக கட்டப்பொம்மன் கோட்டைகளிருந்த மலைகளிலிஃதொன்றென்று கூறியுள்ள விந்தை வியக்கத்தக்கதாயுளது. இம்மலையின் ஒரு பகுதியாய பொன்மலையில் புதையல் இருப்பதாகக் கூறுகின்றனர். இச்செய்திக்குச் சான்றாக இப்பகுதியில் நடப்பட்டிருந்த திரிசூலக் கல்லொன்றில் "ஆகாச கங்கைக்கும் அருமைக் குளத்திற்கும் தென்னைப் புளிக்கும் தேரோடும் வீதிக்கும் சந்தைப் புளிக்கும் மாசாத்தான் கோவிலுக்கும் அரமடை பிரமடை கண்டவர்க்கு ஆயிரம் பசும்பொன்னும் ஒரு குளிகைக் கல்லும் பதனம்" என்று வெட்டப்பட்டுள்ள கல்வெட்டொன்று இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறாக, இவ்வெட்டு குன்றங்களும் தனித்தனியே சிறந்திருப்பினும், இணைந்து நிற்கும் பாங்கில் 'நரந்தமலை' (நார்த்தமலை) என்ற பொதுப் பெயரால் இன்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதியில் தமிழக வரலாற்றுக்குரிய பழைய சின்னங்களும் செய்திகளும் நிறைந்துள்ளன. எளிய முறையில் ஆர்வமொன்றையே துணையாகக் கொண்ட என் முயற்சிக்குத் தக்க ஆதரவு கிடைப்பின் தமிழக வரலாற்றை அணி செய்தற்கியலும்.

(தொடரும்)

பாட்டில் அமைந்து கிடக்கும் எதுகை மோனை, அணிகள் ஆகியவற்றைச் சொற்சுவை என்றும், சுவையுணர்வுகளைப் பொருட்சுவை என்றும் அறிஞர் கூறுவர். பொருட்சுவை நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை ஆகிய எட்டும் ஆகும்.

இச் சுவையுணர்வுகள் செவி வாயிலாகவும் கண் வாயிலாகவும் நிகழும்.

சுவை மெய்ப்பாடு எனவும் கூறப்படும். உள்ளத்தே ஒருவனுக்குண்டாகிய அச்சம், அவலம் முதலியன அவனுடைய உடம்பில் தோன்றும் சில அடையாளங்களால் பிறருக்குத் தெரியுமல்லவா? அந்த அடையாளங்களே மெய்ப்பாடு எனவும் சுவை எனவும் கூறப்படும். உடம்பில் காணப்படும் அந்த அடையாளங்களால் பிறர், அவன் அச்சமுற்றிருக்கின்றானென்றும், பெரியதோர் துன்பத்தினால் வருந்துகின்றானென்றும் அறிந்து கொள்வர்.

நகை அவலம் முதலாய எண்வகைச் சுவைகளும் எவ்வெக் காரணங்களால் தோன்றும் என்பதைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். ஒவ்வொரு சுவையும் தோன்றுதற்கு நான்கு காரணங்கள் உள. அவற்றுள் அவலம், இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கும் பற்றிப் பிறக்கும். இளிவு என்பது பிறரால் இகழப்படுதல் இழவு என்பது நெருங்கிய சுற்றத்தாரையும் இன்பத்திற்குரிய பொருளையும் இழத்தல். அசைவு என்பது வயது முதிர்ச்சி முதலியவற்றால் வருந்துதல். வறுமை என்பது பொருளின்மையால் இன்பந்துய்க்கப்பெறாது வருந்துதல். அவலச்சுவை இந்நான்கும் காரணமாகப் பிறக்குமாயினும் இழவு காரணமாகத் தோன்றும் அவலச் சுவையே நம் உள்ளத்தைப் பெரிதும் நெகிழச் செய்கிறது.

ஒருவன் தன் காதலி இறந்தபோது வாய்விட்டுக் கதறுகிறான். சுடுகாட்டில் அவளை ஈமத்தில் வைத்து எரியூட்டுகின்றார்கள். அதனைக் காணும் அவனுக்கு இதயமே வெடித்து விடும்போலிருக்கிறது. “ஐயோ, தலையில் பூச்சூடினாலும் அப் பாரம் தாங்காது தளருவாளே. அத்தகையாள் எவ்வாறு இத்தீயின் வெம்மையைத் தாங்குவாளோ” என்று கதறுகிறான். அவனுடைய கதறுதலிலே அவலம் நன்கு விளங்குகிறது.

துன்பத்திலே, என்ன சுவையிருக்கிறது என்று சிலர் கருதக் கூடும். துன்புறுவாரது துன்பத்தைக் காணும்போது இளகிய உள்ளம் உடையார்க்கு அவரை அறியாமலே அழுகை வரும். அத்தகைய துன்பத்தைப் பாட்டாகப் பாடும்போது

அதனைப் படிப்பவரும் அத்துன்ப உணர்வைப் பெறுவதோடு அத்துன்ப உணர்விலே ஒரு சுவையும் காண்கின்றனர். ஆதலின் அத்துன்பப் பாட்டை மீண்டும் மீண்டும் படித்துச் சுவை காண்கின்றனர்.

தன் காதலியின் தளிர் மேனி ஈமத்தில் எரியும்போது அதனைக் காணப் பொறுக்காத காதலன் கதறிய தன்மையைக் கண்ட ஒரு புலவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் அவனுடைய அவலத்தை ஒரு பாட்டாகப் பாடினர். அப்பாடல்,

"கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்நெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமம் தரியாது அசையும் தளிர்மேனி
ஈமம் தரிக்குமோ என்று". என்பதாகும்.

இப்பாடலைப் படிக்கும் போதெல்லாம் பூமாலையையும் தாங்க இயலாத அப்பூங்கொடியாள் தோற்றமும், அவளைச் சிதையின் மேல் இட்டு நெருப்பு மூட்டும்போது அவளுடைய காதலன் பக்கத்திலிருந்து கையைத் தலையின் மேல் வைத்துக்கொண்டு கதறுவதும் நம்முடைய மனக் கண்ணுக்குப் புலனுகின்றன. இப்பாடலைப் படிக்கும் போதெல்லாம் நாமும் காதலியை இழந்த காதலன் போல் துன்பத்தை எய்துகின்றோம்.

துன்பத்தை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனல் துன்பத்தைப் பற்றிய பாடல்களைப் படிக்க யாவரும் விரும்புவர். ஆதலின் அத்துன்பப் பாடல் எழுப்பும் துன்ப உணர்ச்சியும் சுவை எனக் கூறப்படும்.

திருவள்ளுவர் வாழ்க்கையின் இயலை நன்குணர்ந்தவர். உலகிற்கு வாழ வேண்டிய முறையை அறிவுறுத்திய பெரியார். வாழ்க்கைத் துணைவிக்கு என்னென்ன நலன்கள் வேண்டுமோ அவற்றை எல்லாம் தம் நூலில் அழகுறக் கூறியவர்.

ஔவையார் பெண்பாற் புலவர். பெண்ணுலகு எவ்வாறு விளங்குதல் வேண்டுமென்பதைப் படம் பிடித்தது போல் தம் அருமைப் பாட்டொன்றில் அழகுற அமைத்தவர.

ஒரு பெண் தன் கணவனிடத்து அன்னைபோல அருளுடையவளாக இருக்க வேண்டும். ஏவலாள் பணி செய்தல்போலக் கணவன் வேண்டுவனவெல்லாம் விரும்பிச் செய்பவளாக இருத்தல் வேண்டும். இலக்குமி போன்ற பேரழகும், நிலம் போன்ற பொறுமையும், அழகாக உடுத்து இனிமையாகப் பேசிக் கணவனை வசியப்படுத்தும் தன்மையில் விலைமகளின் திறமையும் உடையவளாக இருக்க வேண்டும். அமைச்சர் போன்ற கூறிய அறிவுடையவளாயிருக்க வேண்டும். இத்த

கைய பண்புகள் எல்லாம் உடையவள் எவளோ அவளே சிறந்த பெண்ணவள்.

"அன்னை தயையும் அடியாள் பணியு மலர்ப்
பொன்னி அழகும் புவிப் பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்பது ஔவையார் பெண்ணுக்கு இலக்கணங் கூறிய பாட்டாகும்.

இத்தகைய இலக்கணங்களெல்லாம் அமையப் பெற்றவர் வள்ளுவரின் வாழ்க்கைத் துணைவியாராகிய வாசுகி அம்மையார். திருவள்ளுவரைத் தனியாக விடுத்து அந்த அம்மையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவ்வம்மையாருடைய அருங் குணங்களை நினைந்து வள்ளுவர் அழுது பாடிய அவலப் பாடல் படிப்போருள்ளத்தை உருக்குகின்றது. வள்ளுவர் தம் துணைவியின் குண நலன்களைக் கூறுங்கால் "இனிமையாக, வகை வகையாகச் சமைப்பாள்; மாறாத அன்புடையவள்; என்னுடைய சொல்லை என்றுமே தட்டி நடக்க மாட்டாள், எனக்கு வேண்டுவனவெல்லாம் செய்து வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு எனக்குப் பின்னர்த்தான் உறங்கச் செல்வாள்; ஆனால் எனக்கு முன்பே எழுந்து விடுவாள், அத்தகைய பெண் மயில்—குணக்குன்று—இறந்துபோய் விட்டாளே, இனிமேல் என்னுடைய கண்கள் அவளைப் பிரிந்து எவ்வாறு உறங்கும்?" என்று கேட்கின்றார். இக் கருத்துக்களை அமைத்துத் துன்பம் ததும்ப அவர் பாடியபாடல்,

"அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என் தூங்கும் என்கண் இரா"

என்பதாகும். வான்புகழ் வள்ளுவர் தம் அவலப் பாட்டால் மறைந்த அம்மையாரை நம்முன் மறையாமல் வைத்து விட்டார்.

பண்டைத் தமிழர் வாழ்க்கையை அறியப் பெருந்துணையாக உள்ள புறநானூற்றிலே அவலச்சுவை மிகுந்த பாடல்கள் பல உள. பாரி, ஏழு வள்ளல்களில் ஒருவன். அவன் மீது கொண்ட பொறாமையினால் மூவேந்தரும் அவனை முற்றுகையிட்டு வஞ்சகத்தால் கொன்றனர். பாரியின் உயிர் நண்பராகிய கபிலர் அவனது பிரிவாற்றாமல் பாடும் பாடல்கள் அவலச்சுவைக்கு எடுத்துக் காட்டாக உள்ளன.

பெரிய புகழினையுடைய பறம்புமலையே; பாரி உயிரோடிருந்த காலத்து மதுவும் ஊன் சோறும் யாம் வேண்டிய அளவு கொடுத்து எம்மோடு பெருநட்புச் செய்து விளங்கினை. இப்போது பாரி இறந்து விட்டான். அவனுடைய மகளிர்க்கு மணம் செய்வித்தற் பொருட்டுத் தக்க ஆடவர்களை நாடி எத்துணையோ வளங்களை நல்கிய உன்னை விட்டுப் பிரிய மனமில்லாமல் அழுது கொண்டும் தொழுது கொண்டும் பிரிகின்றோம். பறம்பு மலையே, பாரி உளனாகியபோது அவன் புகழால் நீ யாவருக்கும் தெரியும்படி விளங்கினை, ஆனால் இப்போதோ சிறிது தூரத்திலுள்ளாருக்கு மட்டுமே தெரியும்படியாக விளங்குகின்றனை. நிழலில்லாத நீண்ட வழியிலே நிழல் தந்து நின்ற தனிமரம்போல விளங்கிய பாரி உள்ளபோது அவனுடைய நாட்டிலுள்ள பெண்கள் மலைமீதேறி நின்று எதிர்த்து வந்த வேந்தருடைய குதிரைப்படையை எண்ணுவோராய் இருந்தனர். ஆனால் இன்றோ சுரைக்கொடி படர்ந்த குப்பை மேட்டின் மீதேறி உப்பு வண்டியை எண்ணுகின்றனர். இத்தகைய துன்ப நிலையைக் காணுமல் என் உயிர் நீங்குவதாக. இவ்வாறு கபிலர் வருந்திக் கூறுவனவற்றைப் படிக்குந்தோறும் நம்முடைய உள்ளம் அவலத்தில் ஆழ்கிறது.

கபிலர் பாரியின் மகளிர் இருவரையும் அழைத்துக்கொண்டு வேற்று நாட்டுக்குச் செல்கின்றார். கதிரவன் மறைகின்றான். அவர்கள் ஓரூரில் தங்குகின்றனர். அன்று பௌர்ணமி. மகளிர் இருவரும், சென்ற பௌர்ணமியில் அவர்களுடைய தந்தையாரோடு பறம்பு மலையிலே மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் இந்தப் பௌர்ணமியிலோ அப்பாவும் இல்லை, அழகிய பறம்பு மலையும் அவர்களிடம் இல்லை. இந்த எண்ணம் அவர்கள் உள்ளத்திலே அழுகையை எழுப்பியது. அழுகை பாட்டாயிற்று. அவலமே நிரம்பிய அப்பாடல் மிக எளிமையானது. எந்தச் சொல் அலங்காரமும் இல்லாதது. ஆனாலும் அன்று அவர்கள் கொண்ட அவலம் இன்றும் அப்பாடலைப் படிப்போருள்ளத்திலே எழுகின்றது. அப்பாடல்

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

(புறநா. 112)

என்பதாகும்.

இத்தகைய அவல நிகழ்ச்சிகளை நாம் வாழ்க்கையில் காணுகின்றோம், கேட்கின்றோம். 'என் மகன் நேற்று மாலை

இந்நேரம் என்னோடு பேசிக் கொண்டிருந்தான். ஆனால் இன்று மாலை அவன் என்னை விட்டே போய் விட்டான்' என்று புலம்பும் தாயின் அழுகைக் குரலையும் கேட்டிருக்கிறோம். இது போன்றதுதான் பாரி மகளிரின் அழுகையும். ஆனால் அவர்கள் அழுகை பாடல் வடிவில் நின்றபடியால் படிக்குந்தோறும் படிப்பார்க்கு அந்த அவலச் சுவையைத் தந்து கொண்டிருக் கிறது.

கோப்பெருஞ் சோழன் தன் மக்கள் தன்னொடு பகைத்த மையால் வடக்கிருந்து உயிர்நீத்தான். அவனைக் காணுதற்குச் சென்ற பொத்தியார் அவன் ஆட்சி செய்த உறையூர்க்குச் சென்றார். அவன் அமர்ந்திருந்து அரசு செலுத்திய அரியணை யினையும் அவன் அரசாட்சி செலுத்திய மண்டபத்தினையும் பார்த்தார். அங்கு கோப்பெருஞ் சோழனில்லாமையால் அவர் வாய்விட்டு அழுதார். தன்னுடைய துயர மிகுதியை அரிய தோர் உவமை வாயிலா விளக்குகிறார். யானைப்பாகன் ஒருவன் தன்னுடைய உயிர்போன்ற யானையை வளமான உணவு கொடுத்துப் பல ஆண்டுகளாகப் பாதுகாத்து வரு கிறான். ஒருநாள் யானை திடீரென்று இறந்து விடுகிறது. அதனைப் பெருந் துக்கத்துடன் அடக்கம் செய்து விட்டு வீடு திரும்புகிறான், அந்த யானை கட்டப்பட்டிருந்த கட்டுத்தறி வறிதே நிற்கின்றது. அந்தக் கட்டுத் தறியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கண்ணீர் சிந்துகிறான். அந்த யானைப் பாகன் எவ்வாறு துயரமுறுவானோ அதுபோலவே கோப் பெருஞ் சோழனைக் காணாது அவனுடைய அரியணையையும் அரசோலக்கத்தையும் காணும் யானும் பெருந்துயர முறுகின் றேன் என்று கூறுகின்றார். பொத்தியார் வருந்திப் பாடிய பாடல்,

"பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களிறு இழந்த பைதல் பாகன்
அதுசேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை
வெளில்பாழ் ஆகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினேன் அல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றம் கண்டே" (புறநா. 220)

என்பதாகும்.

இளம் பெண்ணொருத்தி படிக்கும் பருவத்திலே நோய் வாய்ப்பட்டு இறந்து விடுகிறாள். அப்போது அவளுடைய பெற்றோர்கள் அவள் வைத்திருந்த பொருள்கள், படித்த நூல்கள், உடுத்திய உடைகள் ஆகியவைகளைக் கண்டு நாடோறும் ஆற்றாமை மிகுந்து அழுவதைக் காண்கின்றோம். அது போன்ற அழுகைதான் பொத்தியார் அழுகையும். ஆனால்

பொத்தியார் பழந்தமிழ்ப் புலவராதலின் அவருடைய அழுகையை இன்றும் நாம் மனக் கண்ணால் காணுமாறு பாடலிலே நிறுத்திச் சென்றார். அப்பாடலைப் படிக்கும்போது பொத்தியார் அழுகை நமக்கும் வருகின்றது.

வேள் எவ்வி என்பவன் மிழலைக் கூற்றத்துத் தலைவன்; விருந்தோம்பும் பண்பு மிககவன்; பலருக்கும் பெருஞ்சோறளித்த பெருந்தகையாளன். அவன் இறந்துபோய் விட்டான். அவனுடைய மனைவி வீட்டிலே யானையடி அளவுள்ள இடத்தை மெழுகிக் கைப்பிடி அளவுள்ள சோற்றினைப் புல்மேல் வைத்து அவனுக்கு படைக்கிறாள். அதனைக் கண்ட வெள்ளெருக்கிலையார் என்னும் புலவர், "ஐயோ, எவ்வி, உலகமெல்லாம் வந்து எப்போதும் உண்ணும்படி தன் அரண்மனைவாயிலை என்றும் திறந்து வைத்திருந்த பெருங் கொடையாளன்; பலரோடு உண்ணும் பழக்க முடையவன். அத்தகைய வள்ளல் தன் காதலி படைக்கும் இச்சிறு சோற்றினைக் கொண்டு எவ்வாறு மன அமைதியுறுவான்? இத்தகைய துயரக் காட்சியினைக் கண்டும் என் உயிர் போகாதிருக்கிறதே என்று வருந்திக் கூறுகிறார்.

"நோகோ யானே தேய்கமா காலை
பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புல்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயில்
பலரோ டுண்டல் மரீஇ யோனே." (புறநா. 234)

என்பது அவருடைய வருத்தத்தைத் தெரிவிக்கும் பாடலாகும்.

ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தன் பாணனுக்கும் பாடினிக்கும் ஏனையோர்க்கும் வரையாது வழங்கிய வள்ளல். அவனுடைய கொடைப் பண்பைப் பாடி மகிழ்ந்தவர் குடவாயிற் கீரத்தனார். பெருஞ்சாத்தன் ஊழின் வயத்தால் மண்ணுலகினின்றும் மறைந்தான். அவனுள்ள காலத்து அவனோடிருந்து பாடி மகிழ்ந்த புலவர் அவனுடைய ஒல்லையூர் வழியே சென்றார். அப்போது முல்லை சிரிப்பது போலப் பூத்திருந்ததைக் கண்டார். அவருடைய உள்ளம் பெரிதும் வருந்திற்று. "முல்லையே, சாத்தன் இறந்து பட்ட துன்பத்தால் இளைய வீரரும் உன்னைச் சூடிக் கொள்ளமாட்டார். மகளிரும் பறித்துக் கூந்தலிற் சூடார், முன்பெல்லாம் பாணன் யாழ்க் கோட்டாலே மெல்ல வளைத்து நின்னைப் பறித்துச் சூடிக் கொள்வான். அத்தகைய பாணனும் பாடினியும் இப்போது உன்னைச் சூடிக்கொள்ள மாட்டார்கள். அவர்களெல்லாம் பெருஞ்சாத்தன் மேலுள்ள பேரன்பினால் மணம் வீசும் நின்னை மறந்தனர்; சூடுதல் தவிர்ந்தனர். உனக்கு மட்டும் சிறிதும்

வருத்தமில்லை போலிருக்கிறது. நீ மட்டும் சிரிப்பது போல் இன்றும் மலர்ந்துள்ளனை, முறுவலிப்பது போல் பூத்திருக்கும் நின்னுடைய செயல் என் உள்ளத்தைப் பெரிதும் வாட்டு கின்றது" என்று மனம் நொந்து கூறுகிறார்.

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே" (புற நா 242)

என்று புலவர் பாடுவது அவலச் சுவையை அனைவருள்ளத்திலும் எழுப்புகின்றது.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையின் மனைவி இறந்து பட்டாள். மாக்கோதை, மனைவியினிடத்து மாறாத காதலை யுடையான். அவர்களுடைய காதல் பலரும் பாராட்டும் அளவுக்கு மாட்சிமையுற்று விளங்கியது. இறந்த தன்னுடைய மனைவியை ஈமத்து ஏற்றி நெருப்பு மூட்டி விட்டு வீட்டிற்கு வந்தான். நாட்டிலுள்ளவர்களெல்லாம் மாக்கோதையின் பெருந்துயரத்தைப் பற்றிப் பலவாறு பேசிக் கொண்டிருந்தனர். அது கேட்ட மாக்கோதை,, 'யான் உற்ற துன்பம் பெரிது பெரிது என்று யாவரும் பேசிக் கொள்கிறார்கள். என்னுடைய துன்பம் பெரிதாக இருந்திருக்கு மானால் அத்துன்பம் என்னைக் கொன்றிருக்க வேண்டும். அவ்வாறு கொல்ல வில்லையே. இன்னும் உயிரோடன்றோ இருக்கின்றேன்" என்று சொல்லிப் புலம்பும் பாடல் அவலச் சுவைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

"யாங்குப் பெரிதாயினும் நோயளவு எனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழல் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்இதன் பண்பே." (புறநா. 245.)

காதலர் இருவரும் காட்டினிடையே செல்கின்றனர். அப்போது திடீரென்று தலைவன் இறந்து விடுகின்றான். தலைவி யாருமில்லாத தனியளானாள். அவள் வாய்விட்டு அழத் தொடங்குகிறாள். ஆனால் அழுதால் புலி வந்து விடுமே என்று அழுகையை அடக்கிக்கொள்கிறாள். தலைவனை மெல்லத் தூக்கிக் கொண்டு வேறிடத்திற்குச் செல்லவேண்டும் என்று நினைக்கிறாள்; தூக்க முயலுகின்றாள். மெல்லியலாளாகிய அவள் பரந்த மார்பினையுடைய அவனைத் தூக்க இயலுமோ?

தன்னுடைய வளையலணிந்த அழகிய கையினை நீட்டி, "இந்தக் கையைப் பிடித்துக் கொண்டு அதோதோன்றும் மலையின் பக்கம் செல்லுதற்குச் சிறிது நடப்பாயாக" என்று வேண்டு கிருள். துக்கத்தின் மிகுதியால் அவன் இறந்ததையும் மறந்து "நிரைவளை முன்கை பற்றி, வரைநிழல் சேர்கம் நடந்திசின் சிறிதே." (புறநா. 255.)

என்று வேண்டும் காட்சி நம் உள்ளத்தைப் பெரிதும்உருக்கு கிறது.

சிலப்பதிகாரத்துள்ளும் அவலச்சுவை நிரம்பிய பகுதிகள் பல உள. கோவலன் இறந்தது கேட்ட கண்ணகியின் துயர நிலையை இளங்கோவடிகள் தம் அவலச் சுவை நிரம்பிய பாட்டால் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுகிருர். கண்ணகி தலைவிரி கோலமாகப் பூமியிலே விழுந்து கண் சிவக் கும்படி அழுகின்ருள். அவள் விரித்த கூந்தலோடு பூமியிலே முகத்தை வைத்து அழுது கொண்டிருக்கும் தோற்றம், சந்திரன் மேகத்தோடு வந்து பூமியில் விழுந்து கிடப்பது போலிருக்கிறது. அவளுடைய முகம் சந்திரன்; கூந்தல் மேகம்.

"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை
எங்கணு என்ஞ இனைந்தேங்கி மாழ்குவாள்"

என்னும் பாடலைப் படிக்குந்தோறும் கண்ணகியின் கரை யிலாத் துயரமும் நிலமிசைமுகம் சேர்த்திச் செங்கண் சிவப்ப அவள் அழுவதும் நம்மனக்கண்முன் புலனுகின்றன.

கண்ணகியிடம் காலையில் விடைபெற்றுக் கொண்டு சென்ற கோவலன், தான் சூடிய மாலையை அவளுடைய கூந்த லிலே சூடினன். அத்தகைய மகிழ்ச்சியினைக் காலையிலே அடைந்தவள் கண்ணகி. அன்று மாலையிலே கோவலன் குருதி வெள்ளத்திலே கிடக்கின்ருன். அவள் அவன்மேல் வீழ்ந்து அரற்றுகின்ருள். ஆனல் அவனே அவளைப் பார்க்கும்படியான நிலையில் இல்லை. அவள் உற்ற துயரத்தை இளங்கோ வடிகள்.

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல் மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்
புண்தாழ் குருதிப் புறம் சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணக் கடுந்துயரம்"

(ஊர்சூழ் வரி 35-38)

என்னும் செந்தமிழ் அவலப் பாட்டால் நாமும் உறவைக்கின்றார்.

கண்ணகி கோவலனை நோக்கி, "ஐயனே, நீங்கள் என்னுடைய துயரங் கண்டும் இவள் துயரம் உறுகின்றாளே என்று நினைக்கின்றீரல்லீர். உங்களுடைய பொன்போன்ற உடம்பு இப்புழுதியிலா படிந்துகிடக்க வேண்டும்? மாலையோடு மணியணிந்து விளங்கும் மார்பு, மாநிலத்தில் வீழ்ந்து கிடக்கின்றதே. யானோ கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றேன். நீங்களோ புண்ணிலிருந்து குருதி ஒழுகப் புழுதியிலே புரண்டு கிடக்கின்றீர்கள். இந் நாட்டிலே கணவரைப் பேணும் கற்புடைய் பெண்டிரும் பிறர் ஈன்ற குழவியை எடுத்து வளர்க்கும் சான்றோர்களும் தெய்வமும் இல்லையோ" என்று புலம்பும்போது அதனைப் படிக்கும் நாமும் அவளுற்ற துன்பத்தை உறுகின்றோம்.

வாடிய மேனியும் வதங்கிய உள்ளமும் ஆடிய சாயலும் அவிழ்ந்த கூந்தலும் உடையளாய்க் கண்ணகி பாண்டிய மன்னன்முன் சென்ற துன்பக் கோலத்தை இளங்கோவடிகள்,

"காவியுகு நீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்" என்றும்

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்" என்றும்

படம் பிடித்துக் காட்டுவது போல் காட்டுகின்றார்.

கண்ணகி மதுரையை விட்டுத் திருச்செங்கோட்டுக்குச் செல்லும் பொழுது கொற்றவையின் கோயிலுக்குச்சென்று, தன்னுடைய அழகைக் கண்டு மகிழும் கணவனில்லாமையால் கலீர் கலீர் என்று ஒலித்து அவனை மகிழ்வித்த வளையல்கள் இனி விரும்பத்தக்கன அல்ல என்று அவைகளை உடைத்தாள். பின்னர் அவள் மனம் நொந்து கூறும் இரண்டு அடிகள் என்றுமே மறக்க முடியாதனவாகும். யான் இந் நகரத்தின் கீழ்த்திசையிலே புகும்போது என்னுடைய கணவனோடே புகுந்தேன். ஆனால் இன்று மேற்றிசை வாயிலாக வெளியேறும் போது கணவனில்லாமல் தனித்துச் செல்கின்றேன்.

"கீழ்த்திசை வாயில் கணவனோடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு"
(கட்டுரை காதை, 182, 183)

இந்த அடிகள் அவலத்தின் உச்சநிலையைக் காட்டுகிறன்றன.

உதயகுமரன் காஞ்சனன் என்பவனால் வெட்டப்படுகின்றான். அவன் முற் பிறப்பில் மணிமேகலையின் கணவன். பழம்பிறப்புணர்ந்த தன்மையால் உதயகுமரன் முற்பிறப்பில்

தனக்குக் கணவனை இருந்தவள் என்பதை அறிந்திருந்தாள். உதயகுமரன் வாளால் வெட்டப்பட்டது குறித்து மணிமேகலை புலம்பும் பகுதி அவலச் சுவைக்கு எடுத்துக்காட்டாயுள்ளது.

“பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும்
அறம்தரு சால்பும் மறந்தரு துன்பமும்
யான்நினக்கு உரைத்து நின் இடர்வினைஒழிக்கக்
காயசண்டிகை வடிவு ஆனேன் காதல
வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினை உருப்ப விளிந்தனையோ”

(மணிமேகலை, 21:19–24).

இது மணிமேகலையில் வரும் அவலச் சுவையாகும்.

சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்திலும் அவலச்சுவை நிரம்பிய பாடல்கள் உள. சச்சந்தன் என்னும் அரசன், தன்காதலியாகிய விசயைபால் இடையீடில்லா இன்ப நுகர்ச்சி கருதி ஆட்சிப் பொறுப்பைக் கட்டியங்காரன் என்னும் தீய அமைச்சன்பால் ஒப்படைத்தான். கட்டியங்காரன் சச்சந்தனை வெல்லக் காலம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள் திடீரென்று படையுடன் சச்சந்தன் இருந்த அரண்மனையை வளைத்துக்கொண்டான். விசையை அப்போது கருவுற்றிருந்தாள். ஆதலின் அவளை மயிற்பொறிமேல் வைத்துக் கட்டியங்காரன் கைப்படாமல் வெளியே சென்று தப்பித்துக்கொள்ளும்படி செய்தான். பின்னர்க் கட்டியங்காரனோடு போரிட்டு இறந்தான். கட்டியங்காரனுடைய வெற்றிமுரசு கேட்டதும் விசயை மயிற்பொறியைச் செலுத்தும் வல்லமை இழந்தாள். அதனால் மயிற்பொறி ஒரு சுடுகாட்டில் இறங்கியது. கருக்கொண்டிருந்த அவள் அங்கே சீவகனைப்பெற்றாள். அரண்மனையில் பல்வகைச் சிறப்புக்களோடு பிறக்கவேண்டிய சீவகன் பிறப்பு, இவ்வாறு சுடுகாட்டில் பிறக்க நேர்ந்ததே என்றெண்ணிப்பலவாறு புலம்பினாள். அவளுடைய புலம்பலைத் திருத்தக் கத்தேவர் படிப்போர் உள்ளத்திலும் புலம்பல் தோன்றுமாறு பாடியுள்ளார்.

“வெவ்வாய் ஓரி முழவாக விளித்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயர்அரங்கில் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல் வேந்தே.

பற்ருமன்னர் நகர்ப் புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்ருரில்லாத் தமியேனல் ஒதுங்கலாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய்நீ வளருமாறும் அறியேனல்
எற்றே இதுகண்டேகாதே இருத்தியால் என் இன்னுயிரே"

—சீவகசிந்தாமணி 309, 310

இத்தகைய துன்பநிலை கண்டும் என் உயிர் போகாமலிருக்கிறதே என்று விசயை வருந்துதல் அவளுடைய துன்பத்தின் எல்லையைக் காட்டுகின்றது.

தசரதன் இராமனிடம் உயிரையே வைத்திருந்தான் என்று கூறுதல் மிகையாகாது. அவன் கைகேயியிடம், "இராமனைக் காட்டுக்கு அனுப்பு என்று மட்டும் சொல்லாதே", என்று வேண்டிக் கொள்ளும்போது "என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும், நன்மகன் இந்த நாடிறவாமை நய" என்று வேண்டிக் கொள்கிருன். ஆனல் கைகேயியோ தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளாதவளாய், "மறந்தான் என்னும் நெஞ்சின"ளாய்த் "தந்த வரத்தைத் தவிர்கென்றல் உரந்தான் அல்லால் நல்லற"மோ? என்று கேட்கிருள். தசரதன் கைகேயின் மனம் மாருநிலையை உணர்ந்து "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய்வனம் ஆள மாய்ந்தே யான்போய் வானுல காள்வன்" என்று சொல்லி உணர்ச்சியற்று மயங்கி வீழ்கின்ருன். இராமன் காட்டுக்குச் சென்ருன் என்றவுடனே தசரதன் உயிர் பிரிகிறது.

மகன்பால் உயிரையே வைத்திருந்த தசரதனைப் பற்றிப் பாடியவர் கம்பர். மகனைப் பிரிய ஆற்ருமல் இறந்த தசரதனின் உயர்ந்த அன்பின் நிலையைக் கம்பரால்தான் உலகம் அறிய முடிந்தது. அத்தகைய உயர்ந்த அன்பைப் பாடிய கம்பருக்கு அம்பிகாபதி என்ெருரு மகன் இருந்தான். அவன் சோழன் மகளைக் காலித்ததால் வெட்டுண்டு இறந்தான். அப்போது கம்பர் தசரதனின் நிலையையும் தம் நிலையையும் ஒப்பிட்டுக் காண்கிருர். "தசரதனுக்கு மக்கள் நால்வர் இருந்தனர். ஆனல் எனக்கு ஒரே மகன். நால்வருள் மூத்தவனகிய இராமன் பதினன்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கத் தன் மனைவியுடனும் தம்பியுடனுஞ் சென்ருன். ஏனைய இருவரும் தன்னுடனிருக்கிருர்கள். ஆனல் என் மகனே இனிவாரா உலகு எய்திவிட்டான். மனைவியுடனும் தம்பியுடனும் சென்ற இராமனின் பதினன்கு ஆண்டு பிரிவையே பொறுத்துக் கொள்ள முடியாமல் தசரதன் உயிரை விட்டு விட்டான். ஆனல் யானே, மகன் விதிவந்து இறக்கவில்லை, வெட்டுப் பட்டதைக் கண்டும் இன்னும் உயிரோடே யிருக்கின்றேன். என்உயிர் போகவில்லை. உலகம் அன்பில் சிறந்து விளங்கியவனுக்குத் தசரதனையும் அன்பற்றவனுக்கு என்னையும்

அல்லவா எடுத்துக்காட்டும்.'' இவ்வாறு எண்ணிய எண்ணமே கம்பரின் வாயிலிருந்து ஓர் அவலப்பாட்டாக எழுந்தது. "பரப்போத ஞாலம் ஒரு தம்பியாளப் பணிமதியம், துரப்போன் ஒரு தம்பி பின்வரத்தானும் துணைவியுடன், வரப் போன மைந்தர்க்குத் தாதை பொறுது உயிர் மாய்ந்தனன் நெஞ், சுரப் போனெனக் கிங்கினியாருவமை உரைப்பதற்கே'' கம்பர் மகனோடு இறக்காவிட்டாலும் அவருடைய அன்பின் பெருக்கை இவ் அவலப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

வாலி இறந்து கிடக்கின்றான். அவனுடைய மனைவியாகிய தாரை அவனை நோக்கி அவன் முன்பு கூறியவற்றைச் சொல்லிப் புலம்புகிறாள். அவன் அவளோடு கூடி மகிழ்ந்திருந்த காலங்களில் "நம் இருவருக்கும் உயிர் ஒன்றுதான்'' என்று பல தடவை சொல்லியிருக்கிறான். அதனைத் தாரை அப்போது நினைத்துப் பார்க்கிறாள். ஐயனே, நீங்கள் கூறியபடி நம் இருவருக்கும் உயிர் ஒன்றாக இருந்தால்—அஃதாவது என் உள்ளத்திலே நீங்கள் இருந்திருந்தால் இராமனுடைய அம்பு உங்களைக் கொன்றிருக்காது. அவ்வாறின்றி உங்களுடைய உள்ளத்திலே யான் இருந்திருப்பேனேயானால் யானும் இராமன் அம்பால் இறந்துபட்டிருப்பேன். அவ்வாறு இறந்து படாமல் யான் உயிரோடு இருக்க நீங்கள் இறந்து பட்டமையினாலே ஒருவருள்ளத்திலே ஒருவர் இல்லை என்பது இப்போது தான் 'புலனாகின்றது.'

"செருஆர் தோள நின் சிந்தை உளேன் எனின்
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்
ஒருவேனுள் உளை ஆகின் உய்தியால்
இருவேமுள் இருவேம் இருந்திலேம்''

—(தாரை புலம்புறுபடலம் 10.)

என்று தாரை புலம்புவது படிப்போர் உள்ளத்தை உருக்குகின்றது.

சிவப்பிரகாசர் பதினேழாம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய புலவர். அவரைக் கற்பனைக் களஞ்சியம் என்று சிறப்பித்துக்கூறுவர். பிரபுலிங்கலீலை, திருவெங்கைக் கோவை, நால்வர் நான்மணிமாலை முதலிய அரிய நூல்கள் பலவற்றைத் தமிழுலகுக்கு அளித்தவர். கருணைப் பிரகாசர், வேலையர் என்னும் இருவரும் இவரோடு உடன் பிறந்தவர்கள். கருணைப் பிரகாசர் மிக இளமையிலேயே இவ்வுலகை விட்டு மறைந்தார். அவ்வாறே சிவப்பிரகாசரும் இளமையிலேயே வேலையரைத் தனியே தவிக்க விட்டு விட்டு மறைந்தார். அப்போது வேலையர் மிக வருந்திப்பாடிய

"அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான் முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்"

என்னும் பாடல் அவலச் சுவை ததும்பி நிற்கிறது.

சீதக்காதி மரக்காயர் புலவர் பெருமக்களுக்கு வாரி வாரி வழங்கி வள்ளலாகத் திகழ்ந்தவர். அவர் இறந்தபொழுது அவருடைய வள்ளன்மையை நினைத்து நமச்சிவாயப் புலவர் வருந்திப் பாடிய பாடல் உள்ளம் உருக்கி அவலச்சுவைக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றது.

"பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப் பூதலத்தில்
நாமாது இருந்தென்ன நாமிருந்தென்ன நன்னுவலர்க்குக்
கோமான் அழகமர் மால் சீதக்காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே"

அண்மைக்காலத்தில் விளங்கிய புலவர் ஒருவர் தம் வாழ்க்கைத் துணைவியார் இறந்தபோது அவரை அடக்கம் செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வருங்கால்

"கண்ணுள் கருமணியாய்க் காதலித்து நின்ற உனை
மண்ணுக்குள் போட்டு வழி நடந்து வந்தேனே"

என்று பாடிய பாடல் அவலச் சுவையை நன்கு விளக்கி நிற்கின்றது.

மதுரையில் சங்கம் நிறுவித்தமிழ் வளர்த்த தேவர், தனித்தமிழ் இயக்கங்கண்டு தனித்தமிழ் நூல்கள்பல தமிழுலகுக்குத் தந்த மறைமலையடிகளார், அரசியல் வாழ்வில் தமிழுணர்வை எழுப்பிய திரு. வி. க., கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவியருந்தமிழாற்றலை யாண்டும் பரப்பிய தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, தமிழுலகுக்கும் இசையுலகுக்கும் அரும்பணியாற்றிய விபுலாநந்தர், தமிழுக்குப் பல்கலைக் கழகம் நிறுவித் தமிழுக்கும் தமிழிசைக்கும் அளவிறந்த பொருள் நல்கிய அண்ணாமலையரசர், சாத்திரக் கடல் என விளங்கிய ஞானியாரடிகள் ஆகிய இவர்களெல்லாம் மறைந்த பொழுது புலவர் பெருமக்கள் பாடியுள்ள கையறு நிலைப் பாக்களெல்லாம் அவலச்சுவை இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய உள்ளம் உருக்கும் அவலப் பாடல்கள் தமிழிலக்கியங்களில் எண்ணிறந்து காணப்படுகின்றன. அப்பாடல்களைப் படிக்குங்கால் கல்மனமும் கரைந்துருகும். அத்தகைய பாடல்களைப் படித்துப் பயன் எய்துவோமாக.

குறிப்பு:— ரேடியோ மலாயாவில் 28-5-62 இல் ஒலிபரப்பப்பட்ட இப்பேச்சு அவர்கள் இசைவு பெற்று வெளியிடப்பட்டது. சுருக்கமாக அமைந்த அப்பேச்சு இக்கட்டுரையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

தமிழில் பாயிரம்

வித்துவான் சோ. சிங்காரவேலன் பி. ஏ.,
[முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி]

தற்காலத்தில் முன்னுரை என்றும், நூன்முகம் என்றும் மொழியப்படும் பகுதி, பழங்காலத்தில் 'பாயிரம்' என்று வழங்கப்பட்டு வந்தது. பாயிரம் ஒரு நூலுக்கு மிகவும் இன்றியமையாததொன்று எனக் கருதப்பட்டது.

> "ஆயிரமுகத்தான் அகன்ற தாயினும்
> பாயிரமில்லது பனுவலன்றே"

என்ற பழஞ் சூத்திரம்[1] இதனை நன்கு விளக்குவதாகும். பாயிரத்திற் கமைந்த மறுபெயர்களை,

> "முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
> புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்"

என்பர் பவணந்தியார். "பல்வகைப் பொருளையும் தொகுத்துச் சொல்லுதலிற் பதிகம் என்றும், நூலினது பெருமை முதலியன விளங்க அணிந்து சொல்லுதலின் அணிந்துரையென்றும், முகவுரை என்றாற்போல நூன்முகம் என்றும், நூல் நுதலிய பொருளல்லனவற்றை உரைத்தலிற் புறவுரை என்றும், நூற்கு உரிய நுதலிய பொருளல்லனவற்றை அதற்குத் தந்துரைத்தலின் தந்துரை என்றும், அணிந்துரை யென்றாற் போலப் புனைந்துரையென்றும், பாயிரத்துக்குப் பெயராம்" என்பர் சிவஞான முனிவர்.[2] இவ்வாறு மறுபெயர்களை உடைய பாயிரத்தை ஐந்து வகைப்பட்ட பொதுப்பாயிரமும், பதினொரு வகைப்பட்ட சிறப்புப்பாயிரமும் என இரண்டாகப் பிரிப்பர் இலக்கண நூலார். சிறப்புப்பாயிரம் நூலாசிரியனாற் செயப்பெறத் தக்கதன்று; அதனைப் பிறர் பாடுதலே முறை. இவ்வாறு ஒரு மரபும் நம்நாட்டில் இருந்து வந்திருக்கின்றது. இதன் காரணத்தைப் பிற்காலத்துப் பவணந்தியார் கூறினார். 'தோன்றாத நுட்பங்களையெல்லாம் தோற்றிப் பலதுறைப் பட்டு விரிந்த நூலைச் செய்து முடித்தானாயினும் தன்னைத் தான் புகழ்தல் தகுதியன்று' என்ற பொருள்பட நன்னூலார் கூறியுள்ளமையின்,[3] நூல் செய்தவனது புகழைக் கூறும் சிறப்புப் பாயிரம் பிறராற் கூறத்தக்கதென்ற மரபு பவணந்தியார் காலம்வரை பேணப்பட்டு வந்திருக்கிறது என்பது புலனாகும்.

---

1. நன்னூல்—நூற்பா—54
2. நன்னூல்—நூற்பா—1 (சிவஞான முனிவர் விருத்தியுரை)
3. நன்னூல்—நூற்பா—52

பாயிரம்—இன்றியமையாச் சிறப்பு :

மாளிகை ஒன்று இருகின்ற தென்றால் அஃது ஓவியச சிறப்புடையதாயிருத்தல் வேண்டும்; அன்றியும் பழங் காலத்தே பெரு நகரங்களுக்குக் கோபுரங்கள் சிறப்புடையவை ; மற்றும் மகளிர்க்கு அணிகலமே சிறப்பாகும். இவ்வாறே பாயிரம் நூலுக்கு இன்றியமையாச் சிறப்புடையதாகும் என்று சுவை பெறப் பாடியுள்ளார் பவணந்தியார்.[1] கவிச்சுவை பொருந்திய இக்கருத்துரை பவணந்தியார் அழகிய கற்பனை வளமும் உடைய செம்மல் என்பதைக் காட்டும் பகுதியாகும்.

பாயிரங் கேட்டார்க்கே நூல் இனிது விளங்கும் என்ற கருத்தை விளக்க வந்த நச்சினார்க்கினியர், பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு, நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்' என்றாராகலின் என்று எழுதியுள்ளார். 'தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்மாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்கால், குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சி புக்கமான் போலவும் மாணாக்கன் இடர்ப்படும் என்க, என்ற உரைப்பகுதியும் இங்கு அறியத்தக்கதாகும்.[2]

பாயிரமும் அவையடக்கமும் :

தொல்காப்பியர் தம் நூலுக்குத் தாம் பாயிரம் பாடவில்லை; அவரோடு ஒருசாலை மாணாக்கராக விளங்கிய பனம்பாரனார் என்னும் பைந்தமிழ்ப் புலவர் பாடிய "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" எனத் தொடங்கும் அரிய பாயிரமே இன்று தொல்காப்பிய முகப்பாக விளங்குகின்றது. நன்னூற் பாயிரம் பவணந்தியாரால் பாடப்பெற்ற பாயிரமாகவே கருதப்படுகின்றது.[3] பிற்காலத்து நூல்கள் அனைத்துக்கும் பெரும்பாலும் அவ்வவ்வாசிரியர்கள் பாடிய பாயிரங்களே உள்ளன. பாயிரத்துடன் அவையடக்கம் பாடும் முறையும் மெல்ல மெல்ல வழக்காற்றில் வந்தது; அவையடக்கம் பாடுதலும் ஒரு மரபே என்று கொள்ளும் அளவுக்கு அதுவும் செல்வாக்குப் பெற்றது. பாயிரம் பாடிய புலவரின் அச்சவுணர்ச்சியும் தன்னடக்கமுமே அவையடக்கம் எழுந்து விளங்கக் காரணமாயிருந்தன எனக் கொள்ளலாம். அவை அடக்கம் என்பதனால், தற்காலத்திற் போலன்றி பண்டு ஒரு நூல் எழுதும் ஆசிரியர், எல்லாச் சான்றோரும் கூடிய அவையத்தில்

1. நன்னூல்—நூற்பா—55
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் தொடக்கவுரை.
3. "மலர்தலை யுலகின் மல்கிருளகல...... இருந்தவத்தோனே"

தாம் எழுதிய நூலைப் படித்து விரிவுரை கூறி அனைவரும் ஒப்புதல் தந்தபிறகே அதனை வெளியிடுவர் என்ற இயல்பு புலனாகும்.* கூடியிருக்கும் அவைச் சான்றோர்க்குத் தம்மடக்க முடைமையை முறையாகத் தெரிந்து மொழிதலே அவை யடக்கம் ஆகும். தம் அறிவினால் அவையினரை அடக்குதல் எனவும் அவைக்கு அடங்குதல் எனவும் அவையடக்கத்திற்கு நாளடைவில் இருபொருள் கொள்ளும் இயல்பும் வளர்ந்தது. அம்முறையில் பாயிரத்தை ஒட்டியெழுந்த அவையடக்கம், தம் அடக்கமுடைமையை வெளிப்படுத்த எழுந்த குறிக்கோளுடன் தம் வரம்பில் ஆற்றலை வெளிப்படுத்தும் குறிப்பும் இணைந்து இரட்டைக் குறிக்கோள் எய்தும் நிலையும் பெற்றது. இதற்கு பல இலக்கியச் சான்றுகளைக் காணலாம்.

இளங்கோ வடிகள் கூடத் தம் சிலப்பதிகாரக் கதையை அவையினர்க்கு விரித்துக் கூறினர் என்பது, அக்காப்பியத் தின் இறுதியில், "தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்" என்று விளித்துறைக்கும் பகுதியான் அறியப்படும்.

பாயிரம்—படைப்புமுறை :

பாட்டு நூல்களுக்கு மட்டும் இவ்வாறு பாயிரம் எழுந்த முறை நாட்டில் பரவியது. பாயிரம் இல்லது பனுவல் இன்று என்ற காரணத்தால், பாயிரம் இல்லாதிருந்த நூல்களுக் கெல்லாம் பாயிரம் எழுதிச் சேர்க்கப்பட்டது. அவற்றில் இலக்கண முறைப்படி இல்லாதன வெல்லாம் இருக்கும் வண்ணம் இணைத்து எழுதப்பட்டன. திருமந்திரத்தின் பாயிரப் பகுதி திருமூலரால் முழுதும் பாடப்பட்டதன்று எனவும், இடையிடை, பல பாடல்கள் பிறரால் எழுதிச் சேர்க்கப்பட்டன எனவும், கூறும் அறிஞர் கருத்துரையை நோக்க இதனை அறியலாம். விநாயகர் வணக்கம் விளம்பும் "ஐந்து கரத்தனை" என்ற பாடலுங் கூடத் திருமூலரால் எழுதப்பட்டதாக இருக்க இயலாது எனவும், கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே கணபதி வணக்கம் தமிழுலகில் தலைகாட் டிற்று எனவும் அறிஞர் கூறும் ஆய்வுரையும் இங்கு அறியத் தக்கது.△

(தொடரும்)

* "இலக்கிய மரபு"—டாக்டர். மு. வ. அவர்கள்—பக். 60 காண்க.

△ திருமந்திரம்—திரு. இரமண சாஸ்திரியவர்களின் ஆராய்ச்சி முன்னுரை—(1912—பதிப்பு)—பக். 14. காண்க.